Registered as a Newspaper in Sri Lanka

صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල් MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை -20 ரூபா | 01 ஒக்டோபர் 2004 வெள்ளிக்கிழமை | 16 ஷஃபான் 1425 | சுவடு - 51



ஜனாதிபதி கூட்டவுள்ள ஆலோசனைக்கவுன்சில் முஸ்லிம் தரப்பு தக்க வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும்! 03

முஸ்லிம்கள் ஆயுதமேந்தும் சட்டபூர்வ உரிமையும் அது துஷ்பிரயோகம் செய்யப்படாதிருப்பதும் நாணயத்தின் இரு பக்கங்கள் 05





அமெரிக்க அரசாங்கத்தினையும் ஈராக்கிய பொம்மை அரசாங்கத்தினையும் அசைக்கின்ற பலம் அவருக்குள்ளது! 07

# 14 வருடங்களாகக் காத்திருக்கும்



# வடபுல முஸ்லிம்கள்!

நீண்டதும் துயரமிக்கதுமான அகதிவாழ்வை சுமந்து நிற்கும் நமது வடபுலத்து முஸ்லிம் மக்கள். தங்கள் தாயகம் மீதான வாழ்வுரிமையை நிலைநாட்ட துடித்துக் கொண்டிருக்கின்றனர். 14 வருடங்கள் கடந்தும் மீளச்சென்று தமது தாயகத்தில் வாழ்வதற்கான உரிமை பல்வேறு வழிகளில் நமது மக்களுக்கு தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகிறது.

ஒருவேளை உணவுக்கான அல்லல்படும் மக்களாக. அடிப்படை வசதிகளற்ற மக்களாக. வசிப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லாது. சுகாதார வசதிகள் இல்லாது. குடிநீர் வசதிகள் இல்லாது. தமது சிறார்களுக்கு கல்வி வசதியில்லாது புத்தளத்தின் உப்புக்கரையோரம் தொடக்கம் நாட்டின் நாலா திசைகளுக்கும் நமது மக்களை ஆதிக்க அடக்குமுறைக் கரங்கள் கடாசி விட்டிருக்கின்றன.

1990 கொடிய யுத்தம் இந்த மக்களின் வாழ்வை சிதறடித்து சின்னாபின்னப்படுத்தியது நாமறிந்ததே! விடுதலைப் புலிகளினால் வடக்கு மண்ணிலிருந்து நமது தேச மக்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டனர். 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இம் மக்கள் வடக்கிற்கு சென்று மீள வாழ்வதற்கான சூழல் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அது வெறும் பெயரளவில்தான் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது.

மீளச்சென்று குடியேற முற்பட்ட வடபுல முஸ்லிம்கள் மீது ஆதிக்க அடக்குமுறைச் சக்திகள் தொடர்ந்தும் பல்வேறு வகைகளில் தடைகளையே ஏற்படுத்தி வருகின்றன. தமது தாயகம் மீதான உணர்வு வெறும் கனவாகிப் போய்விடுமோ என்கிற வகையில் நிலைமைகள் மாறி வருகின்றன.

இதுபற்றி நமது சமூக அரங்கில் பேசுவதற்கு யாருமே இல்லையா என்பதே இந்த மக்களின் கேள்வியாக உள்ளது. வடக்கு முஸ்லிம்களின் தாயகத்திற்கு திரும்புவதற்கான உரிமையை கறாராக முன்வைத்து. அதனையொரு அரசியல் நிலைப்பாடாக மாற்றி இந்த மக்களுக்கு குரல் கொடுப்பதற்கு நமது எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளும் இதுவரை முன்வரவில்லை.

1991இல் வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணத் தொகையையே இப்போதும் இந்தமக்கள் பெற்றுவருகின்றனர். அதுவும் கிரமமாகக் கிடைப்பதில்லை. இந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தையாவது ஒழுங்காகப் பெற்றுக் கொடுப்பதற்கு நமது அரசியல் தலைமைகளால் முடியவில்லை.

மக்கள் நலன்சார்ந்த அரசியல் குறிக்கோளைக் கொண்டிராத நமது அரசியல் தலைமைகளை நம்பி வடபுல முஸ்லிம் மக்கள் 14 வருடங்களைக் கடத்தி விட்டனர். அகதி என்ற அந்தஸ்த்து இம்மக்களின் வாழ்வில் நீங்காது நிலைபெற்றுவிடுமோ என்கிற அச்சத்தில் இப்போது உள்ளனர்.

சமாதான ஒப்பந்தத்தின்பின் ஏற்பட்டு வருகிற நிகழ்வுகள்; இம்மக்களின் அசையாச் சொத்துக்கள் மீதான உரித்தைக்கூட கைமாற்றம் செய்யும் அவல நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது.

மிக மோசமாகக் கைவிடப்பட்ட வஞ்சிக்கப்பட்ட, இந்த மக்களின் வாழ்வில் நம்பிக்கையொளியை மீள சுடரச் செய்வதற்கான தார்மீகப் பொறுப்பு அனைத்து முஸ்லிம் சமூக சக்திகள் மீதும் உள்ளது.

இந்தப் பதினைந்தாவது வருடத்திலாவது நமது தேசமக்களின் துயரத்தை துடைக்கவும். அவர்களின் தாயகத்தின் மீதான உரிமத்தை நிலைநாட்டவும் இலங்கை முஸ்லிம்களாகிய நாம் நமது பங்களிப்பை வழங்க முன்வருதல் வேண்டும்! ■

# மக்களாகிய நீங்கள்தான் தலைவரின் மரணத்தின் உண்மையைக் கண்டறிய வேண்டும்!



முஸ்லிம்களின் அரசியல் பலத்தை சிதைப்பதற்கு. அதன் தலைமையை அழித்தொழிப்பதுதான் ஒரே வழி என கணக்குப் பண்ணியவர்களின் கைங்காரியத்தினூடே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் மரணம் நிகழ்ந்தது. அதன்பின் இலங்கை அரசியலில் திடுதிடுவென நடைபெற்ற எதிர்பாராத அனைத்து அரசியல் திருப்பங்களுக்கும். முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட அனைத்து ஆதிக்க திணிபுகளுக்கும் தலைவரின் மரணத்திற்கு காரணமான அரசியலுடன் தொடர்பிருந்தது.

தலைவரின் மரணத்திற்கு பின்னிருந்த சதியை கண்டுபிடிப்போமென மார்தட்டிய அவரின் வாரிசுகள். பதவிகளைப் பெற்றுக்கொண்டு மௌனமாகிவிட்டனர். 4 வருடங்கள் கடந்து விட்டன. நடந்தது ஒன்றுமில்லை!

தலைவரை நேசித்த மக்களாகிய நீங்கள்தான், தலைவரின் மரணத்தின் பின்னான சதியை அம்பலப்படுத்த மக்கள் போராட்டங்களை நடாத்த வேண்டும். நீங்களும் மௌனமாகி இனியும் இருந்து விடுவீர்களேயானால்; மீளவும் மீளவும் நமக்கு இழப்புத்தான்!

மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாகவே இன்றைய சூழலில்; நமது இலக்குகளை அடைய முடியும்! பாராளுமன்றத்திற்கு எம்.பிக்களை அனுப்புவதன் ஊடாக அல்ல! ■

# முஸ்லிம் பிரதேசங்களில் புலிகள் மீளவும் பணம் அறவிட முயற்சி?

கிழக்கு மாகாணத்தில் முக்கிய முஸ்லிம் ஊர்களை இலக்குவைத்து புலிகள் முஸ்லிம்களிடமிருந்து பெருந்தொகைப் பணம் அறவிடும் முயற்சியில் மீளவும் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிதித்தேவை ஏற்பட்டுள்ளதாகவும். பணம் வழங்கப்படுவது கட்டாயமாகும் எனவும் இவர்கள் முஸ்லிம் தனவந்தர்களை கேட்டு வருகின்றனராம். சிறிது காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இத்தகைய பணப்பறிப்பு விவகாரம் மீளவும் தொடங்கப்பட்டது குறித்து முஸ்லிம்கள் அதிக அச்சமடைந்துள்ளனர்.

**இலங்கை முஸ்லிம்களின் போர்க்குரல்! சமூக சமத்துவத்திற்கான குரல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் காவல்துறைக்கு சர்வதேச அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்!

**-புலிகளின் பொலிஸ் மா அதிபர் நடேசன்-**



இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு நடவடிக்கையிலும் புலிகளின் பொலிஸ் தலையிடாது என புலிகளின் பொலிஸ் மா அதிபரான ஜீ. நடேசன் தெரிவித்தார். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சமாதானத்தினை நடைமுறைப்படுத்தி, சாதாரண சமூக வாழ்வினை மோதலின்றி உறுதிப்படுத்துவதற்கு ஆதரவினை வழங்குவதே தமிழீழ பொலிஸின் செயற்பாடாகுமென்றும், எதிர்காலத்தில் புலிகளினது பொலிஸ் துறைக்கு சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நடேசன் கூறினார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே செயற்படுத்தியுள்ளதாகவும் சர்வதேச தரத்தில் தமிழீழப் பொலிஸார் செயற்பட வேண்டிய விதம், பொலிஸ் அதிகாரிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவு மற்றும் பயிற்சியினை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அதனை முன்னிட்டு வெளிநாடுகளிலுள்ள சில நிபுணர்களினது உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கும் புலிகள் எண்ணியிருப்பதாகவும் நடேசன் மேலும் தெரிவித்தார்.

புலிகளினது பொலிஸ் துறையானது தற்போது 03 விஷேட பிரிவுகளாக செயல்படுகிறது. சாதாரண கடமைகளுக்கான பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு, விஷேட மோட்டார் சைக்கில் படையணி என்பவையே அவையாகும். விஷேட மோட்டார் சைக்கில் பிரிவுக்கு அதிக பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளிலும், அவசரமான சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும், இந்தப் பிரிவானது தனது நேரடிக் கண்காணிப்பில் செயற்படுவதாகவும் நடேசன் தெரிவிக்கிறார்.

# பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு இராணுவ தளபதி பதவியிலிருந்து விலகும் நோக்கம் இல்லை!



இவ்வருட முடிவில் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகப்போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வாக்குறுதியளித்திருப்பினும் அவர் அது தொடர்பான எவ்வித தீர்மானத்திற்கும் வரவில்லையென பாகிஸ்தான் தகவல் அமைச்சரான ஷேக் ரஷீட் தெரிவித்தார். முஷாரப் தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியிலும், இராணுவத் தளபதிப் பதவியிலும் நிலைத்திருப்பாரெனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இதற்கிடையில், இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து விலக வேண்டாமென முஷாரபிற்கு பிரதமர் சவுகாத் அஸீஸ் கோரிக்கை விடுத்துள்ளார். நாட்டின் நன்மைக்காக அவர் தொடர்ந்தும் இராணுவத் தளபதிப் பதவியினை வகிக்க வேண்டுமென பிரதமர் தெரிவித்தார். ஜனாதிபதிப் பதவியினையும், இராணுவத் தளபதிப் பதவியினையும் வகிப்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் முஷாரபுக்கு எவ்விதத் தடையும் இல்லையென்றும் தெரிவித்த பிரதமர், ஏதேனுமோர் பதவியிலிருந்தும் அவரை விலத்த வேண்டுமானால் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளும் புகுத்தப்பட வேண்டுமென்கிறார்.

முஷாரப் இரண்டு பதவிகளிலும் நிலைத்திருப்பதானது சனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்று எதிர்க்கட்சிகளும், மனித உரிமைகளுக்கான அமைப்புகளும் தெரிவிக்கின்றன. அவ்வாறு அவர் இரண்டு பதவிகளையும் ஒருசேர வகிப்பதானது அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது மட்டுமன்றி சட்ட விரோதமுமாகும் என்று குறிப்பிடும் எதிர்க்கட்சியினர், அது சனநாயகத்தினை நகைப்புக்குள்ளாக்கும் செயலாகுமென்றும் குறிப்பிட்டுள்ளது.

# என்றென்றும் பலஸ்தீன்



மேன்மைமிகு
மேன்மைமிகு தேசமே
இருள் மிகுந்த பெருந்துயர் இரவில்
திரிகைக்கல் சுழலலாம்
மேலும் சுழலலாம்
ஆயின்
உன் ஒளியை அழித்தொழிப்பதற்கு
அவற்றால் இயலா
அவை மிகச் சிறியன.

ஓ பெரிய தேசமே
ஓ ஆழமான காயமே
தனிப்பெரும் காதலே
நசுக்கப்பட்ட உன் நம்பிக்கைகளில் இருந்து
ஒடுக்கப்பட்ட உன் வளர்ச்சியில் இருந்து
திருடப்பட்ட உன் முறுவலில் இருந்து
திருடப்பட்ட
உன் குழந்தைகளின் சிரிப்பில் இருந்து
சிதைவுகளில் இருந்து
சித்திரவதையில் இருந்து
இரத்தம் உறைந்த சுவர்களில் இருந்து
வாழ்வினதும் மரணத்தினதும்
நடுக்கங்களில் இருந்து
புதிய வாழ்வொன்று கிளர்ந்தெழும்
அது எழவே செய்யும்

**-பத்வா துக்கான்**

# உரியவர்களின் கவனத்திற்கு...

2002இல் ஆட்சியிலிருந்த அரசாங்கம் பட்டதாரிகள் ஒரு தொகுதியினருக்கு நீண்ட இடைவெளிக்குப் பின் ஆசிரிய நியமனத்தை வழங்கி நிம்மதிப்பெருமூச்சி விட வைத்தது. ஆனால் அத்தகைய நியமனமானது கஷ்டப் பிரதேசத்தை மையமாக வைத்தே வழங்கப்பட்டாலும், சிலரே இன்றும் மிகக் கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். அதாவது மிகக் கிட்டிய தூரத்தில் பலர் நியமிக்கப்பட்டும் இன்னும் பலர் தூர இடங்களுக்கும் அதாவது 3 பஸ்வண்டிகளில் பிரயாணம் செய்து தங்கள் பாடசாலைக்குச் சென்று வருகின்றனர். இவற்றில் பெண்களும் அடங்குவர்.

அவர்கள் இப்போது 2 வருடங்கள் கஷ்டப்பிரதேசத்தில் தங்கள் சேவையினை குறைவின்றி செய்துள்ளனர். இந்த நிலையில் அவர்களைத் தொடர்ந்தும் வைத்துக்கொள்ள வேண்டுமென விரும்புவது வேதனையானது. தற்போதைய அரசாங்கம் அதிகப்படியான பட்டதாரி ஆசிரிய நியமனங்களையும், கல்விக்கல்லூரியின் நியமனங்களையும் வழங்கி வருகின்றது. இவ்வாறான கால கட்டத்தில் மேற்படி கஷ்டப் பிரதேசத்தில் கடமைபுரிகின்ற ஆசிரியர்களை அவர்களின் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்துவிட்டு புதிய ஆசிரிய நியமனங்களை அவர்களின் இடத்திற்கு பதிலீடு செய்யுமாறு கஷ்டப் பிரதேச ஆசிரியர்கள் உருக்கமான வேண்டுகோளினை விடுக்கின்றனர். கஷ்டப்பிரதேசங்களில் கூடியகாலம் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஒரு விமோசனத்தைப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மிகவும் வினயமாக வேண்டிக்கொள்வதோடு, இது சம்பந்தமாக கவனம் செலுத்தவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். முக்கியமான ஒரு விடயம் என்னவெனில் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் சில ஆசியர்கள் கஷ்டப்பிரதேச கொடுப்பனவு இன்றியும் பல வருடங்களாகக் கடமைக்குச் சென்று வருகின்றனர்.

**முஹம்மட் இம்தி - கல்முனை**




# மூதூரில் அடிக்கடி மின்சாரத் தடை!

மூதூர் பிரதேசத்தில் பல வருடகாலமாக அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகின்றது. இது திட்டமிடப்பட்ட சில தீய சக்திகளினால் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு மின்சாரத் தடை ஏற்படுவதன் காரணமாக இரவில் படிக்கின்ற பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி பாதிப்பதோடு மட்டுமன்றி நாளாந்தம் சிறு தொழிற்சாலைகள், மின்சாரத்தின் மூலம் இயங்கும் சிறு தொழில்களும் தடைப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இப்பிரச்சினையிலிருந்து மக்கள் விடுபட உரிய நடவடிக்கை எடுக்குமாறு திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**இ. நளீம். மூதூர்.**

# கல்முனை அஷ்ரஃப் வைத்தியசாலை நிருவாகத்தினர் கவனத்தில் எடுப்பார்களா?

இவ்வைத்தியசாலைக்கு பல பிரதேசங்களிலிருந்தும் வைத்திய சிகிச்சைக்காக அதிகமான மக்கள் வருகிறார்கள். இங்கே சிகிச்சை சிறப்பாக நடைபெற்றாலும், வெளியிடத்தில் இருந்துவரும் தாய்மார்கள், தமது உறவுகளை, அவசர சிகிச்சையில் சேர்க்க நேரும் சந்தர்ப்பங்களில் தங்குமிட வசதியற்ற நிலையை அவர்கள் எதிர்நோக்குகின்றனர். இரவு நேரங்களில் வெளியூர்களில் இருந்து வரும் அதாவது நோயாளர்களை பார்வையிட வரும் சகோதர சகோதரிகள், படிக்கட்டுகளில் படுத்துறங்குவதை காணக்கூடியதாக இருக்கிறது. வெளி ஊர்களில் இருந்து வருகின்ற பார்வையாளர்கள் இருக்கவென்று தங்குமிட வசதிகள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. இதனை உரியவர்கள் கவனத்தில் எடுப்பார்களா?

**ஏ.எல். அன்ஸார். சாய்ந்தமருது**

# வரட்சி நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படலாமா?

அநுராதபுர மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு ரூபாய் 1400 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் சிரமதானப் பணியின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. வரட்சி நிவாரண வழங்களில், வெளிநாட்டில் தொழில் புரியும் ஒருவர் குடும்பத்தில் இருந்தால் அக் குடும்பத்திற்கு வரட்சி நிவாரணம் வழங்கமுடியாது என தெரிவிக்கப்படுகிறது. இது எந்த வகையில் நியாயம்? இந்த மக்கள் வரட்சியால் பாதிக்கப்படவில்லையா, இவர்கள் என்ன கோடீஸ்வர மக்களா எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்கின்றனர்.

**எம்.எம்.எம். அன்சார். தஹனக்வெவ.**

# உலமா சபை கவனத்தில் எடுக்குமா?

அண்மையில் கந்தளாய் பிரதேசத்தில் மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட குனூத் சம்பந்தமான பிரச்சினை முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாயலில் மிகவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அப்பள்ளி மௌலவி இஸ்லாத்தில் குனூத் இல்லையென்றும், அதனை நாம் ஓத வேண்டிய அவசியம் இல்லை என்றும் குத்பாக்களில் பிரச்சாரம் செய்து வருகின்றார். இதனால் இப்பகுதி பொதுமக்கள் குழப்பம் அடைந்து வருகின்றார்கள். இதற்கான தக்க முடிவை இலங்கை உலமா சபையிடம் இருந்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**கந்தளாய் எம்.எப். முபாரக்.**

# கிண்ணியா நஜ்முல்குதா அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா



கிண்ணியா நஜ்முல்குதா அரபுக்கல்லூரியின் 3வது பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. 16 மௌலவிமார்கள் பட்டம்பெற்று வெளியேறியுள்ளனர்.

படமும் தகவலும்: அ.மு.மு. நியாஸ்

**ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா? நாம் எழுதுவதற்கும் நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் விவாதங்களைத் தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- பையூஸ் அஹமட் -

# ஜனாதிபதி கூட்டவுள்ள ஆலோசனைக்கவுன்சில் முஸ்லிம் தரப்பு தக்க வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும்!

ஜனாதிபதியினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 04ம் திகதி கூட்டப்படவுள்ள "சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆலோசனைக்கவுன்சில் கூட்டமானது: சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை அழுத்தி முன்வைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட ISGA ஆவணத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு முன்னால்: சகல தரப்பினருடனும் சகல அரசியல் கட்சிகளுடனும் தான்பேச வேண்டிய அவசியம் இருப்பதாக ஜனாதிபதி தனது கட்சியின் ஆண்டு மகாநாட்டில்: காலியில் வைத்து தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பானது பல்லின: பல்கட்சி நாடொன்றில் ஜனநாயக ரீதியாக பல்வேறு கருத்துக்களையும்: நிலைப்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கும் மிகச் சிறப்பான வழியென்பதில் நமக்கு எந்த மாற்றுக் கருத்துமில்லை.

கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தை அரங்கில்: முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உணர்வுகளை. அரசியல் நிலைப்பாடுகளை முன்வைப்பதற்கான வாய்ப்பை கடந்த அரசாங்கம் தரவில்லை. தேசிய இனப்பிரச்சினையானது சிங்கள ஆளும் குழுமத்திற்கும் தமிழர் தரப்பிற்குமிடையேயானதுதான் என்கிற தோற்றப்பாட்டை அப் பேச்சுவார்த்தை அரங்கு முற்று முழுதாகப் பிரதிபலித்தது.

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த இரு தரப்பும்: அப்பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகித்த நோர்வே அரசும் முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகளை. அவர்களது தனித் அபிலாசைகளை கவனத்தில் எடுக்கவேயில்லை.

இப்போது காலச்சக்கரம் வேறொரு தடத்தில் செல்ல முயற்சிக்கிறது. மீளவும் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான சூழல் ஏதோ ஒரு வடிவில் தொடங்கிவிட்டது. அதற்கான பாதையைப் போடுவதற்கு ஜனாதிபதி தனது தரப்பின் காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டார்!

ஜனாதிபதியின் இக்காய் நகர்த்தல்களை எப்படி எதிர்கொண்டு முகம்கொடுப்பதென தமிழர் தேசம் தன்னை தயார்படுத்தி வருகிறது. தமிழர் தேசம் அதனுடைய அரசியல் பணியை மிகச் சரியாகவும்: ராஜதந்திரமாகவும் நகர்த்தி வருகிறது என்பதை நாமறிவோம்! இதுபற்றி நமக்கு சந்தோசமே தவிர. காழ்ப்புகள் எதுவுமே இல்லை.

ஆனால் இந்த விடயத்தில்: முஸ்லிம் அரசியல் தலைமைகள் நடந்து கொள்ளும் விதம் அதிக கண்டனத்திற்கும் மனக்குறைகளுக்கும் வாய்ப்பை தந்து கொண்டேயிருக்கிறது.

இந்த ஆலோசனைக் கவுன்சில் கூட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் செல்வதில்லையென ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இத்தகைய முடிவு மிகமோசமான அரசியல் சூழலை நமக்கு தோற்றுவிக்கப்போகிறது. இந்த நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் சந்திரிகா அம்மையார் கூட்டுகின்ற இந்தக் கூட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் செல்லாமல் இருப்பதற்கு முஸ்லிம் மக்களின் நலனில் நின்று எந்த நியாயமும் இல்லை.

சந்திரிகா அம்மையாருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தொடர்ந்தும் பதவிப் போட்டிக்கான அரசியல் கயிறு இழுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது தீர்க்கமான ஒரு நிலைப்பாடு அல்ல: சந்திரிகா ஹக்கீம் என்கிற இரு தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான முரண்பாடுகளை: முஸ்லிம் அரசியலுடன்: தீர்க்கமான காலகட்டத்தில் பிரித்தறிந்து பார்க்க முடியாது இருப்பது குறித்து முஸ்லிம்கள் தெளிவான பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.


ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்துடன் ஒட்டி நின்று: பேச்சுவார்த்தை அரங்கில் அரசாங்கத் தரப்பை பிரதிபலித்த மு.கா தலைமை. அப்போது முஸ்லிம்களுக்கான சமத்துவமான அரசியல் பேச்சுவார்த்தையாக நடைபெற்ற பேச்சுவார்த்தையை மாற்றாது காலத்தை ஓட்டியது. இப்போது எதிர்க்கட்சியில் இருக்கும்போதும்: முஸ்லிம்களின் நலனை பிரதிபலித்து: ஜனாதிபதியிடம் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை முன் வைப்பதில் ஏன் தயக்கம் காட்டுகிறது? முஸ்லிம்களுடைய அரசியல் நிலைப்பாட்டை மிகத்தெளிவாக முன் வைப்பதற்கு இத்தருணத்தை பயன்படுத்தாது: நோர்வேக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பின்னால் வால்பிடித்துத் திரியும் இந்த அரசியல் முஸ்லிம்களின் நலனுக்கு எந்த வகையில் பாதுகாப்பாக அமைய முடியும்?



## கட்சி அரசியலில் இருந்து விடுபட்டு முஸ்லிம்களின் நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க வேண்டிய தருணம்!







முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்காக முன்செல்ல வேண்டுமேதவிர: முஸ்லிம்களை மேலாதிக்கம் செய்யும் ஆதிக்கத் தரப்பினர்களுக்கு அடிமைச் சேவகம் செய்ய முடியாது! முஸ்லிம்களுக்கான தீர்வையும் முன்வைக்க மாட்டீர்கள்: முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாட்டை சொல்லுங்கள் என அழைத்தால் அதற்கும் செல்ல மாட்டீர்கள் என்றால் இதன் அர்த்தந்தானென்ன?

இதேவேளை அராசங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய முஸ்லிம் பிரதிநிதிகளான நு.ஆ, தேசிய முஸ்லிம் காங்கிரஸ் என்பன இந்த ஆலோசனை சபையை எந்தவிதத்தில் கையாளவுள்ளது என்பது இன்னும் தெளிவில்லாமலேயே இருக்கிறது - நமது அம்மையார் கூட்டுகிறார்: நாம் சும்மா இருந்தால் சரி என இருந்து விடுவார்களா? அல்லது முஸ்லிம்களின் தீர்க்கமான நிலைப்பாட்டை: அவர்களுக்கான ஏற்பாட்டை இவர்கள் முன்வைப்பார்களா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நமது அரசியல் தலைமைகள் தமிழ்த் தேசப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத்தேவையில்லை. நாம் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு எதிரானவர்களுமல்ல. ஆனால் முஸ்லிம்களின் அரசியல் உணர்வுகளை: அவர்களின் இதுவரையான துயரங்களை நாம் பிரதிபலித்துத்தானே ஆகவேண்டும்? மீளவும் ஒரு சந்தர்ப்பம்: இவர்களுக்கு...... பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களுக்கான கடமையை ஒழுங்காகச் செய்வார்களா? அல்லது அமைச்சர் பதவிகளை தக்கவைப்பதற்காக காய்களை நகர்த்துவார்களா?

---



விடுதலைப் புலிகளின் ஆவணத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடங்க

## யாருக்காக இவர்கள் பேசுகிறார்கள்?

வேண்டுமெனவும்: ஜனாதிபதியை இந்த விடயத்தில் அழுத்தவேண்டுமெனவும் தமிழ் இணையத்தளமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் சுபியான் மௌலவி தெரிவித்துள்ளதாக ஏரிக்கரை பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

எந்த அடிப்படையில் வடமாகாண முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுபியான் மௌலவி இக்கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதை நாமறிய விரும்புகிறோம்! விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம்: அவர்களின் மீளத்திரும்பும் உரிமை. பாதுகாப்புத் தொடர்பாக ஏதாவது உள்ளதா என்பதை சுபியான் மௌலவி எமக்கு விளக்குவாரா?

சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதன் பின்: புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது ஊருக்கு மீளச்சென்று மீளக் குடியேற முயற்சிக்கும்போது அதற்கு புலிகள் உதவியாக இருக்கிறார்களா? அல்லது உபத்திரமாக இருந்தார்களா என சுபியான் மௌலவியிடம் கேட்க விரும்புகிறோம்!

அங்குபோய் சுதந்திரமாக எம்மால் இருக்க முடிகிறதா, வியாபாரம், விவசாயம் செய்ய முடிகிறதா? வீடுகளை கட்ட முடிகிறதா! யார் எந்த அடிப்படையில் பேசுவது என்பதை விட்டுவிட்டு: விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம்கள். மீளக் குடியேற நெஞ்சை நிமிர்த்தி சுபியான் மௌலவியால் பேச முடியுமா? எமக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு யார் காரணம்?




இவ்வளவு காலமும் முதுகு சொறிந்தது போதாதா? இப்போதாவது சுபியான் மௌலவி பதில் சொல்ல வேண்டும்!

**ஏல்.எல். றகீம் யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல் போராட்டம் ஒரு வரலாற்றுத் தொடர்! 05

**சி. புஸ்பராஜா எழுதுவது...**

*இத்தொடர் தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான பதிவாகும்; தமிழர் அரசியல் போராட்டத்தின் பல்வேறு அரசியலில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின் பாத்திரம்; அவர்களின் பங்களிப்பு பலம் பலவீனங்களுக்கூடாகவும்; தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தையும் நாம் அறிந்து கொள்ள இத்தொடர் நமக்கு அதிகளவில் துணைபுரியும்!*

*தமிழர் மிதவாத அரசியல் தலைமைகள் செய்த வரலாற்றுப் பாத்திரத்தையாவது நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யவில்லை என்பதை இத்தொடரை வாசித்தறியும்போது நாம் கண்டு கொள்ளலாம்!*

**நன்றி-ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்.**

இலங்கைத் தமிழர்கள் மத்தியில், குறிப்பிடும்படியாக, தமிழ் மாணவர் பேரவைக்கு முன்பு இரண்டு தமிழ் இளைஞர்களின் அமைப்புகள் இருந்திருப்பதைப் பார்க்கலாம். அதாவது. அரசியல்ரீதியில் குறிப்பிடும் படியான தாக்கத்தை ஏற்படுத்திய அமைப்புகள் என்பதே எனது அர்த்தப்படுத்தல். யாழ்ப்பாணம் வாலிபர்காங்கிரஸ். ஈழத்தமிழர்இளைஞர் இயக்கம் என்ற இந்த இரண்டு அமைப்புக்களையும் குறிப்பிடலாம். யாழ்ப்பாணம்வாலிபர்காங்கிரஸ் எனப் பரவலாக இது அறியப்பட்டாலும் 'வாலிபர் காங்கிரஸ்' (The Youth Congress) என்பதே இதன் பெயராகும். 1926ம் ஆண்டு காலப்பகுதியில் 'யாழ் மாணவர் காங்கிரஸ்' என இயங்கியவர்கள் 1930 இல் 'வாலிபர் காங்கிரஸ்' என்ற மாற்றத்துடன் இயங்கினர். தமிழ்பேசும் மக்களிடையே புரையோடிப் போயிருந்த சமுதாயச் சீரழிவுக்கு எதிராக அவர்கள் போராடினர். முக்கியமாகச் சாதிப்பாகுபாட்டிற்கெதிரான பல போராட்டங்களை வாலிபர் காங்கிரஸ் நடாத்தியது. இலங்கை வந்த மகாத்மா காந்தியை இவர்கள் வடபகுதிக்கு அழைத்து வரவேற்றனர். ஹண்டி பேரின்பநாயகம். ஒறேற்றர் சுப்பிரமணியம் (1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதியில் இலண்டனில் மரணமானார்). ஜே.வீ.செல்லையா. எஸ்.குலேந்திரன், கே.நேசையா, வி.சபாரட்ணம். ஏ.ஈ.தம்பர் போன்ற அன்றைய இளைஞர்கள்தான் வாலிபர் காங்கிரஸின் முன்னோடிகளாவர். தமிழ்பேசும் மக்களுக்கெதிரான டொனமூர் அரசியல் அமைப்பை எதிர்த்து 1931ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலை யாழ்ப்பாணப் பகுதிகளில் பகிஷ்கரிக்க வைத்தவர்கள் இந்த இளைஞர் காங்கிரஸ்காரர்களே.

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம் நீண்ட காலம் உயிர் வாழாவிட்டாலும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் எமது காலத்தில் தோன்றிய விடுதலை உணர்வுக்கு வித்திட்டவர்கள் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஈழத்தமிழர் இளைஞர்கள் இயக்கத்தின் தலைவராக வவுனியாவைச் சேர்ந்த இலங்கை மன்னனும். பொதுச்செயலாளராக மாவை சேனாதிராஜாவும் பொருளாளராக மைக்கல் தம்பிநாயகமும் இருந்தனர். மற்றும் சிவகுமாரன். பரமசாமி, வில்வராஜா. டொக்டர் சண்முகநாதன். முத்துக்குமாரசாமி போன்றவர்கள் இதில் முக்கியமானவர்கள். 1969ம் ஆண்டு கல்வியமைச்சராகவிருந்த இரியகொல்லவினால் அறிமுகப்படுத்தப்பட்டது. 'சியவச' என்று அறியப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டு முறை. இத்திட்டம் மாணவர்கள் மத்தியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. 'சியவச' என்னும் சிங்களச் சொல்லைக் கொண்ட இச்சீட்டு தமிழில் இருக்கவில்லை என்பதுடன், சிங்களப்பகுதி மாணவர்கள் பயன்பெறும் வகையிலேயே சீட்டிழுப்பு இருந்ததால், இச்சீட்டுக்களை விற்க வேண்டாம் என்றும் அதனைப் பகிஷ்கரிக்கும்படியும் தமிழ் அரசுக்கட்சியும், ஈழத்தமிழர் இளைஞர் இயக்கமும் வேண்டுகோள் விடுத்தனர். ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பாடசாலை பாடசாலையாகப் படியேறிப் பிரச்சாரம் செய்தனர். இந்த பகிஷ்கரிப்பில் எனது பாடசாலையில் முதலில் பங்குகொண்ட மாணவன் நானே. பின்பு எனது பள்ளித் தோழர்கள் புஷ்பராஜன். அருளானந்தன். ஏழுமலை போன்றவர்களும் என்னுடன் பங்கு கொண்டனர். பகிஷ்கரிப்பு நடத்திய மாணவர்கள் மீது அன்றைய ஆசிரியர்கள் மிகவும் கோபமாக இருந்தனர். கடுமையாக நடந்துகொண்டனர். இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத் தின் மூலமே முத்துக்குமாரசாமி எனக்கு அறிமுகமானார்.



1961 சத்தியாக்கிரகத்தில் மாணவிகள்

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தால் மிகச் சிரத்தை எடுத்து நடாத்தப்பட்ட பிரச்சாரத்தின்மூலம் 'சியவச' சீட்டு வடபகுதியில் தோல்வியைக்கண்டது. புத்தூர். கரவெட்டி. ஆவரங்கால் போன்ற பகுதிகளில் சாதித் தீயினால் வெந்துபோயிருந்த மக்களைப் பௌத்த மதத்துக்கு மாற்றவும். அந்த இடங்களில் பௌத்தப் பாடசாலைகளைத் திறக்கவும் இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகளை எதிர்த்து பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பிரசார வேலைகள் செய்து அதில் ஓரளவு வெற்றியையும் இவ்வியக்கத்தினர் கண்டனர். அரசு. பொலிஸ் அடக்குமுறைகளுக்கெதிராக சில ஊர்வலங்களையும் இவர்கள் நடாத்தினர். இதேகாலப் பகுதியில் சலுசல. லக்சல போன்ற சிங்களப் பெயர்களைத் தமிழ் பிரதேசங்களில் அகற்றுமாறு கோரி யாழ்ப்பாணம் கச்சேரியில் இருந்து யாழ் முற்றவெளி வரை பெரியதொரு ஊர்வலம் நடாத்தினர். 1969ம் ஆண்டின் இறுதிக்காலத்தில் மிகத் தீவிரமாக இயங்கிய இவர்கள் தமிழர் கட்சிகள் ஒன்றாக இணைய வேண்டும் எனக் கேட்டு யாழ் முற்றவெளியில் உண்ணாவிரதம் இருந்தனர். இதே கோரிக்கைக்காக யாழ் மாநகரசபை மண்டபத்தில் பெரியதொரு கூட்டத்தையும் வைத்தனர். ஈழத்தமிழ் இளைஞர் இயக்கம் பின்பு ஈழ விடுதலை முன்னணியாகப் பெயர் மாற்றப்பட்டது. மேலே குறிப்பிட்ட இரண்டு இயக்கங்களுக்குப்பின், தமிழ் மாணவர் பேரவையின் தோற்றமும் எழுச்சியும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய ஒரு திருப்புமுனையாகும். அரசின் தரப்படுத்தல் முறைக்குத் தமிழ் மாணவர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு ஊர்வலம் நடாத்துவது என முடிவெடுத்து அதனை அறிவித்தனர் தமிழ் மாணவர் பேரவையினர். காங்கேசன்துறைப்பகுதிகளில், குறிப்பாக காங்கேசன்துறை. பலாலி. மயிலிட்டி ஆகிய இடங்களில் ஊர்வலத்துக்கான பிரச்சார வேலைகளை நான் பொறுப்பேற்றுக்கொண்டேன். 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் முன்றலில் இருந்து ஆரம்பித்து. இந்த மாபெரும் ஊர்வலம் யாழ்ப்பாணம் கச்சேரிக்குப் போய். மாணவர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் மகஜர் கொடுக்கப்பட்டு. பின்பு யாழ் முற்றவெளியில் பதியுதீன் முகம்மதுவின் கொடும்பாவி (effigy) கொழுத்தப்பட்டு. மாபெரும் பொதுக்கூட்டத்துடன் முடிவுற்றது. வடகிழக்கு வரலாற்றில் இப்படியொரு மாணவர் எழுச்சியைப் பார்த்திருக்க முடியாது என்றே நினைக்கிறேன். ஏன் இலங்கை வரலாற்றிலேயேகூட இப்படி ஒரு மாணவர் எழுச்சியைப் பார்த்திருக்க முடியாது என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.

தொடர்ந்து வரும்....

## செச்னியப் போராளிகளிடமிருந்து 02 கோடி



ரஷ்யாவின் ஜனாதிபதி விலாடிமிர் புடினை பிடித்துக்கொடுப்பவர்களுக்கு 02 கோடி டொலர்கள் பரிசாக வழங்கப்படுமென செச்னிய புரட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். ரஷ்யாவிலுள்ள பஸ்லான் நகரிலுள்ள பாடசாலையினைத் தாக்கி 340 பேரினை கொலை செய்தது தொடர்பாக சந்தேகத்திற் குரிய 02 செச்னிய புரட்சித் தலைவர்களைப் பிடித்துக் கொடுப்ப வருக்கு 01 கோடி டொலர்கள் பரிசாக வழங்கப்படுமென ரஷ்ய அரசு அறிவித்துள்ளதை அடுத்தே மேற்படி அறிவித்தலினை செச்னிய புரட்சியாளர்கள் விடுத்துள்ளனர்.

போர் குற்றவாளியான புடினை கைது செய்வதற்கு உதவும் நாட்டுக்கும். அமைப்புக்கும் அல்லது நபருக்கு 02 கோடி டொலர்கள் வழங்குவதாக புரட்சி கர அமைப்பு தமது வெப்தளத்தினூடாக அறிவித்துள்ளது. செச்னியாவுக்கு எதிராக போர் புரிவதற்கும். பெஸ்லான் பாடசாலை தாக்கப் பட்டதற்கும் புடினே பொறுப்பாளியென்று புரட்சிக்காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர். செச்னிய மக்களினது சட்டபூர்வமான விடுதலைப் போராட்டத் தினை அவமானப்படுத்தும் நோக் கில் புடினால் பல்வேறு சதித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது எனவும் புரட்சி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## மார்ச் வரை முரளியால் ஆடமுடியாது



தோற்பட்டையில் சத்திரசிகிச்சையினை மேற்கொண்டுள்ள இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை விளையாட முடியாது என தெரிவிக்கப்படுகிறது. இந்த சத்திரசிகிச்சையினை முரளிதரன் அவுஸ்திரேலியாவில் வைத்து செய்துகொண்டார்.

32 வயதான முத்தையா முரளிதரன் கடந்த 14 வருட காலமாக சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் விளையாடி வருகிறார். அந்த சத்திரசிகிச்சை காரணமாக பாகிஸ்தான். நியுசிலாந்து. பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையில் நடைபெறவுள்ள 06 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை அவர் இழக்கிறார்.

## எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்கும்!

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை உயர்வடையாவிடினும் இந்நாட்டுச் சந்தையின் எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிக்கக் கூடுமென நிதியமைச்சின் செயலாளரான கலாநிதி ஜீ.பீ. ஜயசுந்தர தெரிவித்தார். எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கக் கூடுமெனவும். அது எப்போது எந்தளவில் அதிகரிப்பது என்பது பற்றிய தீர்மானத்திற்கு இன்னும் அரசாங்கம் வரவில்லை என்றும். நிதியமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் விடுக்கப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கும்போது கலாநிதி ஜயசுந்தர தெரிவித்தார்.

மண்ணெண்ணெயினைப் பயன்படுத்தும் ஏழைகளை முன்னிட்டு அதன் விலையினை அதிகரிக்காமல் தொடர்ந்தும் நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் கொள்கை அடிப்படையிலான முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிவித்த கலாநிதி ஜயசுந்தர. அதற்கமைய மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

## பிரார்த்தனை



யா அல்லாஹ்
நபி மூஸாவிற்கு
ஆஸாக் கோலினை
வசப்படுத்திக்
கொடுத்ததைப்போல;
எமக்கும்
எழுதுகோலினை
வசப்படுத்தித் தருவாயாக!

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்
தொடர்புகளுக்கு: விளம்பர முகாமையாளர்,
119/15, Viviyan Gunawardena Mawatha
(Kettampahuwa Road) Wellampitiya. Phone :071- 4105877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் ஆயுதமேந்தும் சட்டபூர்வ உரிமையும் அது துஷ்பிரயோகம் செய்யப்படாதிருப்பதும் நாணயத்தின் இரு பக்கங்கள்

**இதற்கு** முன்னர் வந்த 'முஸ்லிம் குரல்' இதழ்களில் முஸ்லிம் அரசியல் சமூகமும் ஆயுதமேந்தும் சட்டபூர்வ உரிமையும் என்ற நமது கட்டுரை மூன்று இதழ்களில் தொடராக வந்திருந்தது. இக் கட்டுரை எழுதப்படும் போதே இதிலுள்ள நியாயங்கள் பற்றியும் அதேசமயம் இதன் பாரதூரத்தன்மை குறித்தும் பிரக்ஞை நமக்கு இருந்தது. எந்தவொரு உரிமையையும் துஷ்பிரயோகம் செய்வது போல முஸ்லிம்கள் தரப்பிலும் ஆயுதமேந்தும் சட்டபூர்வ உரிமையும் துஷ்பிரயோகம் செய்யப்பட வாய்ப்பு உள்ளது. அவ்வாறே துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வரலாறுகளையும் நாம் மறைக்கத் தேவையில்லை. தவறை மறைப்பது என்பது மேலும் பல தவறுகளுக்குத்தான் வழிவகுக்கும் என்பது நாமறிந்ததே. ஆழமான ஆய்வும் உதாரணங்களும் இங்கு தேவையில்லையாயினும் நமது தரப்பில் இழைக்கப்பட்ட தவறுகள் எங்கேனும் ஒரு இடத்தில் கோட்பாட்டளவிலேனும் பகுப்பாய்விற்கு உட்படுத்தான் ஆக வேண்டும்.

ஆயுதமேந்தும் உரிமையானது துஷ்ப்பிரயோகம் செய்யப்படும் ஒரு பாரதூரமான பக்கத்தையும் தன்னுள் உலக வரலாறு கொண்டுள்ளது என்ற வகையில், ஒரு சமூகம் இந்த உரிமையைப் பயன்படுத்தும் போது தார்மீக ரீதியில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், ஆயுதமேந்துவதற்கான அவசியம் என்ன? யார் ஏந்துவது? எப்போது யாருக்கு எதிராக ஏந்துவது? எப்போது அவற்றைச் செயல்படாமல் கீழே வைப்பது? ஆயுதம் தாங்கும் உரிமை உள்ளது என்பதற்காக எடுத்தவுடன் தாம் நினைத்தபடி இவ்வுரிமையைப் பயன்படுத்தி விடமுடியுமா? போன்ற கேள்விகளும் ஆயுதமேந்தும் உரிமை பற்றிய விடயத்திலிருந்து பிரிக்க முடியாததாகும். இக்கேள்விகள் யாவும் நம்மகத்தே எழுப்பி விடைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கிய வினாக்களாகும்.

**அரசியல் இலக்கு:**

முதலாவதாக ஒரு சமூகம் தற்காப்பிற்காக ஆயுதம் ஏந்துவதற்கான நியாயத்தைக் கொண்டிருந்த போதிலும், அச் சமூகத்திற்கு ஒரு தெளிவான அரசியல் இலக்கு இருக்க வேண்டும். அவ் அரசியல் இலக்கு அச்சமூகத்திலுள்ள மிகப் பெரும்பாலானவர்களின் உடன்பாட்டைப் பெற்றதாக இருக்க வேண்டும். இவ் அரசியல் இலக்கானது ஆயுதமேந்திய போராட்டத்திற்கு வழிகாட்டிச் செல்வதாக இருக்க வேண்டும். ஆயுதப் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டமும் குறிப்பிட்ட அரசியல் இலக்கினை நோக்கி சமூகத்தை முன்னேற்றிச் செல்வதாக இருக்க வேண்டும்.

> "தற்போதைய உலக சூழலும் முஸ்லிம்களைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள ஊடக பயங்கரவாதமும் இவ்விடயங்களில் முஸ்லிம்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை எச்சரிக்கை செய்கின்றது."

ஆயுதப் போராட்டம் ஏற்படுத்தும் அழிவுகளையும் இழப்புகளையும் ஆயுதப் போராட்டத்தின் அரசியல் வெற்றிகள் நியாயப்படுத்துவதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் சமூக எதிர்காலத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவதாக அப்போராட்டம் இருக்க வேண்டும். எனவே உயரிய அரசியல் இலக்கு ஒன்றை முன்னிறுத்தாமலிருப்பின் ஆயுதப் போராட்டத்தினூடே ஒரு சமூகம் அனுபவிக்கின்ற இழப்புகள், அழிவுகள் யாவும் அர்த்தமற்றதாகி விடும்.

திட்டவட்டமான அரசியல் இலக்குகள் இல்லா விட்டால், ஒரு சமூகம் தற்காப்பிற்காக ஆயுதம் ஏந்துவது தவறா? என்ற கேள்வி மீண்டும் இங்கு எழுகின்றது. தற்காப்பு நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்துவது கூட உள்ளார்ந்த ஒருவகை அரசியல் நோக்கம் கொண்டதேயாகும். ஆனால், தனிமனிதர்களாக, தன்னெழுச்சியாக ஆவேசத்தினால் மாத்திரம் உந்தப்பட்டு தற்காப்பிற்கு ஆயுதம் ஏந்துவதுதான் நமது சூழலில் அதிகம் ஏற்படுகின்றது.

இது நம்மை எங்கு கொண்டு சேர்க்கும் என்பதற்கும் நமக்கு முன் நிறைய உதாரணங்கள் உள்ளன. தெளிவான, தூர நோக்கான அரசியல் இலக்குகள் இன்றி ஆயுதம் ஏந்தும் போது, நமக்கு எதிராக சக்திகளின் கைக்குள், அல்லது நம்மை தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்து முயலும் சக்திகளின் கைகளுக்குள் நாம் வீழ்ந்து விடுவோம். இதற்கும் பல உதாரணங்கள் உண்டு.


இவ்வாறான தவறுகள் கடந்த காலங்களில் நமது பக்கம் இருந்தாலும், நம் மீது சிங்கள, தமிழ்த் தரப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள், அரச பயங்கரவாதங்கள், இன அழிப்புகள், இனச் சுத்திகரிப்புகள் இழிவானவை, கண்டிக்கத்தக்கவை, எதிர்த்து முறியடிக்கப்பட வேண்டியவை என்பதை மீண்டும் ஒரு தடவை குறித்துக் கொள்வது நல்லது.

ஏனெனில் நமது சுயவிமர்சனங்களைப் பார்த்து விட்டு இவ்வளவிற்கும் சூத்திரதாரிகள் தமது குரூரத்தனங்களை இச் சுயவிமர்சனத்திற்குள் மறைத்துப் புளகாங்கிதம் அடைவதையும் நாம் அறியாமல் இல்லை.

1985 தொடக்கம் 1990 வரை, அதற்குப் பின்னர் அண்மைக்காலங்களில் சில அனுபவங்களை நமது சமூகத்தினுள் சுய மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்வோம் எனின், தவறுகளில் இருந்தும் நாம் பல படிப்பினைகளை பெற்றுக் கொள்ள முடியும். அது மாத்திரமல்ல தமிழ் சமூகத்தின் ஆயுத மேந்திய போராட்டத்தையும் அங்கு தோன்றிய இயக்கங்களின் வரலாறுகளையும். (இறுதியாக விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட பாரிய பிளவு உட்பட) மதிப்பீடு செய்வோம் எனின், இன்னும் ஏராளமான படிப்பினைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

**ஒன்றிணைந்த போராட்ட வடிவம்:**

இன்னுமொரு முக்கிய விடயம் ஆயுதப் போராட்டம் தன்னியல்பாக, துண்டு துண்டாக இல்லாது ஒன்றிணைந்த வடிவில் நடாத்தப்படல் வேண்டும்.




செயற்பாடுகள் நடைபெறும் தளப்பிரதேசங்கள் நிலத் தொடர்ச்சியினைக் கொண்டதாக இல்லாது விட்டாலும், இதுவே எதார்த்தமாக இருப்பினும் கூட செயற்படும் அமைப்பு வடிவங்கள் ஒன்றுக் கொன்று ஒத்திசைவாகச் செயற்படல் வேண்டியது ஆயுதப் போராட்டம் தன்னைத் தக்க வைப்பதற்கு ஒரு பிரதான காரணியாகின்றது. இதற்கான தயாரிப்புகள் என்பது அவ்வளவு இலகுவானதல்ல. பிராந்திய வேறுபாடுகள், பிரதேசக் காழ்ப்புகள், ஊர் மட்டங்களில் குடும்பச் சண்டைகளின் தனிப்பட்ட விரோதங்களின் சகதிக்குள் இருந்து இன்னமும் சிக்கிக் கொண்டுள்ள சமூகங்களைப் பொறுத்தவரையில் இந்த ஒருங்கிணைந்த செயற்பாடு என்பது இன்னும் கடினமானதாக அமைகின்றது.

**இஸ்லாமிய நெறிமுறைகளை இணைத்துக் கொள்தல்:**

இஸ்லாம் ஒரு நேரிய, சமாதான சக வாழ்வினை இலக்காகக் கொண்ட ஒரு வாழ்க்கை வழிகாட்டியாகும். எனவே முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் என்பது எவ்வாறான ஒழுக்க நெறிகளைக் கொண்டது என்பதை இஸ்லாமிய வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்ள முடியும். பொதுவில் கெரில்லாப் போர்முறையிலும், மரபு வழிப் போர்முறையிலும் ஈடுபடும் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு தனக்கென கடுமையான ஒழுக்கநெறிகளைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறாயின் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து உருவாகும் ஆயுதப் போராட்ட அமைப்புகளைப் பொறுத்தவரையில் அவை இன்னும் உயர்ந்தபட்ச அறநெறிகளையும் ஒழுக்கக் கோவைகளையும் கொண்டிருக்க வேண்டும். எனவே, இஸ்லாமிய வழிமுறைகள் உயர்ந்த அரசியல் இலக்குகள் ஆகிய இரண்டு அம்சங்களும் இணைந்த வழிகாட்டல் அறிநெறி முஸ்லிம்களுக்கு அவசியமாகின்றது. சிறுவர்கள் பெண்கள வயோதிபர்கள் மற்றும் இதர சமூகத்தவரின் வணக்கஸ்தலங்களை எல்லாம் பாதிக்காத போர் வழிமுறைகளை இஸ்லாம் போதித்து நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளது. இதற்கான பக்குவம் நமக்கு உள்ளதா? நமது கடந்த காலம் இவ்விடயங்களில் எவ்வாறு இருந்துள்ளது? இவை முதன்மையாக நாம் எழுப்பி விடை காண வேண்டிய வினாக்களாகும்.

உண்மைக்காகவும் நீதிக்காகவும் தமது மக்களின் விடுதலைக்காகவும் போராடுகின்ற ஆயுதப் போராட்ட அமைப்புகளைத் திசை திருப்பும் நோக்குடனும், அவற்றின் மீது பழி போடவும் எதிரிகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் சதிகள் நிறையவே உள்ளன. இவற்றை அடையாளம் கண்டு முறியடிக்கும் உத்திகளும் தெளிவும் ஒரு போராட்ட அமைப்பிற்கு இருக்க வேண்டும். அவ்வாறான பழி போடலுக்குள் தன்னை சிக்க வைக்க முடியாதவாறு போராட்ட வழிமுறைகளை தனது போராட்ட மார்க்கத்தில் தெளிவாகப் பதிக்க வேண்டும். தான் செய்யாத ஒன்றை செய்ததாக எதிரிகள் காட்ட முயற்சிக்கும் போது, நிச்சயம் இவ்வமைப்புச் செய்திருக்காது என்று தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் சொல்லுமளவிற்கு தனது ஆயுதப்போராட்டத்தினதும் போராளிகளினதும் நம்பகத்தன்மை அசைக்க முடியாதவாறு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தற்போதைய உலக சூழலும் முஸ்லிம்களைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள ஊடக பயங்கரவாதமும் இவ்விடயங்களில் முஸ்லிம்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை எச்சரிக்கை செய்கின்றது.

**சர்வதேச அங்கீகாரம்:**

ஒரு ஆயுதப் போராட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரம் என்பது இன்றைய உலக அரசியல் சூழலில் இன்னுமொரு முக்கிய அம்சமாகும். நியாயமான ஒரு ஆயுதப் போராட்டத்தைக் கூட சர்வதேச சக்திகள் தமது நலன்களுக்காக தவறான போராட்டமாகக் காட்டும் ஒரு ஆபத்தான சூழலில், சரியான, நியாயமான ஒரு அரசியல் இலக்கு இன்றி முன்னெடுக்கப்படும் ஆயுதப் போராட்டமானது ஒரு சமூகத்திற்கு அதிகம் பாதகங்களை ஏற்படுத்துவதாகவும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதென்பது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பிட்ட சமூகத்திலுள்ள மக்களின் வலுவான ஆதரவு இன்றி ஒரு ஆயுதப்போராட்டம் நீடித்து நிற்க முடியாது. அவ்வாறாக மக்களின் அங்கீகாரம் பெற்ற ஆயுதப் போராட்டமானது தமக்குரிய பிரதேசத்தை அல்லது பிரதேசங்களை கணிசமான காலத்திற்கு சொந்தக் கட்டுப்பாட்டில் வைத்திப்பதாக இருக்க வேண்டும். இவ்வாறாக கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது அப்பிரதேசத்தில் அல்லது பிரதேசங்களின் சட்ட ஒழுங்கு அடங்கலாக சிவில் நிர்வாகங்களை மக்களின் ஒப்புதலுடன் சீராகக் கொண்டு நடாத்துவதாக இருக்க வேண்டும். இப்படியான ஆயுதப் போராட்டமே சர்வதேச அங்கீகாரத்தைப் பொதுவில் பெற்றுக் கொள்கின்றது. இவ்வளவு இருந்தாலும் கூட சில போராட்டங்களை குறிப்பிட்ட தமது அரசியல், கேந்திர நலன்களுக்காக சில உலக அரசுகள் ஆதரிப்பதில்லை ஏற்றுக் கொள்வதில்லை. அந்தவகையில் இவ்வாறான சர்வதேச அங்கீகாரமானது நீண்ட வலிகளையும் துன்பங்களையும் ஆத்திரமூட்டல்களையும் தாங்கிக் கொண்டு ஒரு சமூகம் தொடர்ச்சியாக நின்று பிடிப்பதில் தங்கியுள்ளது. இதற்கான பக்குவம் குறிப்பிட்ட சமூகத்திற்கும் போராட்ட அமைப்பு அல்லது அமைப்புகளுக்கும் இருக்க வேண்டும்.

ஆக, நமது சமூகம் ஆயுதமேந்தும் சட்டபூர்வ உரிமையைக் கொண்டுள்ளது என்பது நாணயத்தின் ஒரு பக்கம் எனின், அதற்கான தகைமைகளையும் தாக்குப் பிடிக்கும் திறனையும் பக்குவத்தையும் போராட்ட நெறிமுறைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பது நாணயத்தின் மறுபக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினது கொள்கையினை தாம் பின்பற்றப் போவதில்லையென இ.தொ.கா. தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தின் 'நாடு முன்னோக்கி' எனும் கொள்கை நெறியினை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று இ.தொ.கா தெரிவித்துள்ளது. தமது கட்சியினது கொள்கைக்கு அமையவே தாம் அரசாங்கத்திற்குள் செயற்படப்போவதாகவும் தோட்டத் தொழிலாளரினது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான 13 பிரேரணைகள் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக தெரிவித்துள்ள அக்கட்சி அதன் ஊடாக மலைநாட்டில் விரைவான அபிவிருத்தியினை எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கிறது.

# கொழும்பு துறைமுகத்திற்கு நேர்முகப் பரீட்சையின்றி ஆட்சேர்ப்பு

கூட்டமைப்பு அரசாங்கமானது ஆட்சிக்கு வந்ததன் பின் நேர்முகப் பரீட்சை கூட நடத்தப்படாமல் துறைமுக அதிகாரசபைக்கு புதிதாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று துறைமுக தொழிற்சங்கம் குற்றம் சுமத்துகிறது. ஒப்பந்த அடிப்படையிலான இந்த நியமனங்கள் துறைமுக அதிகார சபையின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபையின் பூரண அனுமதியுடனேயே நடைபெற்றுள்ளது என்றும் அந்த தொழிற்சங்கம் கூறுகிறது.

மேலதிக தொழிலாளர்கள் உள்ள நிலையில் நேர்முகப் பரீட்சை கூட நடத்தப்படாமல் இவ்வாறு நியமனங்கள் பெற்றுள்ளவர்களுள் சட்ட ஆலோசகர், ஊடக ஆலோசகர், துறைமுக இணைப்பு அதிகாரிகள், தட்டெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்கள், சாரதிகள், தொழிலாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

துறைமுக அதிகாரசபையில் நிலவுகின்ற மேலதிக ஊழியர்கள் காரணமாக கடந்த வருடம் 3000 ஊழியர்கள் தமது விருப்பின் மீது ஓய்வுபெற வைக்கப்பட்டனர். அப்படியிருக்கும்போது அதிகாரிகளினது தேவைகளின் நிமித்தமாக இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுவதனால் ஊழியர்களினது பதவி உயர்வுகள் கூட தட்டிப்பறிக்கப்பட்டு பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் துறைமுக தொழிற்சங்கமானது குற்றம் சாட்டுகிறது.




# பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்படுகிறது!

அங்கர், ரெட்கவ், ரத்தி, லக்ஷ்பிரே, நெஸ்பிரே, மெலிபன், கெரிகோல்ட் ஆகிய பால்மா வகைகளினது விலைகளையும், 'லாப்' எரிவாயுவின் விலையினையும் மீண்டும் அதிகரிப்பதற்கு குறித்த கம்பெனிகள் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளது.

பால்மாக்கள் மற்றும் எரிவாயுவின் விலைகளை அதிகரிப்பது தொடர்பான குறித்த கம்பெனிகளின் கோரிக்கையினையிட்டு ஆராய்ந்து தீர்மானமொன்றினை எடுப்பதற்காக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது ஓம்மாத முடிவில் கூடவுள்ளது என்றும் தெரியவருகிறது.

# புல்லுருவிகள்



கவிஞர் ஏ. இக்பால்

கையில் வீடியோ
கமறாவுடன் அவர்
எங்கே அலைகிறார்!

முஸ்லிம் பகுதியில்
வேற்று இனத்தவன்
சண்டையைத் தேடுகிறார்.

சமாதான வழியில்
சகலரும் செல்லுதல்
சலிப்பெனக் கூறுகிறார்.

அநாதரவான
அபலை முஸ்லிமை
அலைந்து தேடுகிறார்.

அரசு சார்பற்ற
இயக்க மொன்றின்
இயக்குனர் தானவராம்!

சின்னச் சண்டையைப்
பென்னம் பெரிதென
ஆக்கிட முனைவவராம்!

ஒவ்வொரு சண்டையின்
சூத்திர தாரிகள
N.G.O சிலராம்
இவர்கள் எடுத்த
படங்களை உலகினில்
பெரிதாய்க் காட்டுவாராம்!

அறபிய நாடுகள்
அள்ளிக் கொடுப்பதை
கபளீகரம் செய்வாராம்

சில்லறை பகிர்ந்து
நல்லறம் செய்யும
N.G.O யினராம்!

இன்னுமெம் மினத்தை
அழித்திட வந்த
புல்லுருவி யவராம்!

புல்லுருவிகளால்
புனிதம் கெடுதலை
அகற்றுதல் அறிவியலாம்!

# முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எமது துயரை அறிவார்களா?

**1990ம்** ஆண்டு விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்டு, கால் நடையாகவும், சிறுவாகனங்களிலும், நித்திரையின்றி உண்பதற்கு உணவின்றி வவுனியா மாவட்டம் வந்து சேர்ந்தார்கள். வவுனியாவில் சில வசதிபடைத்த ஹாஜிமார்களின் உதவியைக் கொண்டு எமது மக்கள், அநுராதபுரம், புத்தளம் ஆகிய இடங்களுக்கு வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களில் சிலர் கற்பிட்டி பிரதேசப் பகுதியிலும் முந்தல் பகுதியிலும் தனியார் காணிகளில் சிறு சிறு கொட்டில்கள் அமைத்து தங்கவைக்கப்பட்டனர். இவர்கள் இவ்விடங்களுக்கு வந்தபோது இப்பகுதி முஸ்லிம்கள் மிகவும் கண்ணியத்துடன் வரவேற்றனர். அப்போது இருந்த அரசும் இம்மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் கொடுத்தது. பல நிறுவனங்கள்

## இன்னலுறும் வடபகுதி முஸ்லிம்கள்



முடிந்த அளவு உதவிகளையும் செய்து கொடுத்தன.

பின்னர், அரசாங்க மாற்றம் ஏற்பட்டபோது, எமது தலைவர் மாண்புமிகு எம்.எச்.எம். அஷ்ரஃப் அவருக்கு முக்கியமான அமைச்சுப் பதவியை புதிய அரசாங்கம் கொடுத்தது. அதற்கு ஏற்றாற் போல், மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் இடம்பெயர்ந்த மக்களின் ஒவ்வொரு முகாமுக்கும் சென்று ஒவ்வொரு கொட்டில் களையும் பார்வையிட்டார். இம்மக்களின் கஷ்டத்தினை நேரில் கண்டறிந்தார் இவர்களுக்கு எப்படியெல்லாம் உதவிகள் செய்யமுடியுமோ அப்படியெல்லாம் உதவிகள் செய்தார். மக்களும் கஷ்டத்தை குறைத்து வாழ்ந்து வந்தார்கள. அவரின் சேவையை பொறுக்க முடியாதவர்களாக அன்னாருக்கு விபத்து ஏற்பட்டு மரணமானார். (இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்)

இதன் பின்னர் வந்த தலைவரை நம்பி மக்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தனர். வெற்றியும் கிடைத்தது. இவர்கள் பாராளுமன்றம் சென்றதும் இடம் பெயர்ந்த மக்களின் வயிற்றில் அடிவிழத்தொடங்கியது. மாதா மாதம் கிடைத்த உலர் உணவுப் பொருட்கள் குறைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டது. அத்தோடு, இரண்டு மூன்று மாதங்களுக்கொருமுறை இப்பொருட்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்படியாக நடப்பதை இம்மக்களின் உதவியால் பாராளுமன்ற கதிரைக்கு போன உறுப்பினர்கள் சிந்திப்பதில்லையா? இவர்கள் எமது மக்களின் துன்பத்தை நேரில் பார்த்தார்களா? ஒன்றாக இருந்த கட்சியை வெவ்வேறாக பிரித்து ஆளுக்கொரு கட்சி, கட்சிக்கொரு தலைமைத்துவம் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாக பிரிந்து இருக்கின்றனரே. இவர்களை பாராளுமன்றம் அனுப்பி வைத்த மக்களைப் பற்றி சிந்தித்தார் களா?

வடபகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் சொத்துக்களை கணக்கிட்டுப் பார்த்தார்களா? ஏனைய சமூகத்தினருக்கு நஷ்டஈடு கொடுக்க அரசோ, அதை சேர்ந் தோரோ குரல் கொடுத்துக் கொண்டிருக்கின் றனர். இதனை எண்ணிப்பார்த்தார்களா? இம்மக்களின் இழப்புகள் கொஞ்சமா? வடபகுதிக்குள்ளேயே இருந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கின்றனர். ஏன் இந்த வடபகுதியிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்களுக்காக இவர்கள் குரல் கொடுக்கக் கூடாது? உங்கள் இனம் கிழக்கில் திட்டம் இட்டு அழிக்கப்படுவதை பார்த்தும் பாரா வண்ணம் இருக்கின்றீர்கள். உங்களுக்கு தைரியம் இல்லையா? கட்சி பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒரே இனம் என்றகோட்பாட்டுக்குள் வந்து ஒருமித்து குரல் கொடுத்தால் உங்களை நம்பிவாழ்கின்ற வடக்கு முஸ்லிம்களுக்கு அவர்களது குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும்.

வட பகுதி முஸ்லிம்களில் முக்கியமாக முல்லை மாவட்ட முஸ்லிம்கள் எல்லா விஷயத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். சொத்துக்கள் அனைத்தையும் இழந்ததோடு இல்லாமல் இங்கு வந்தும் இவர்களை வழிநடாத்திச் செல்ல ஓர் சரியான தலைமைத்துவம் இதுவரைக்கு 14 ஆண்டுகள் முடிவுற்றும் கிடையாது. ஆனால் தேர்தல் காலங்களில் பலரும் பல வார்த்தைகளை சொல்லி வாக்குகளை பெற்றுச் செல்வர். இம்மாவட்ட மக்கள் 100க்கு 99சதவீதம் முஸ்லிம் காங்கிரசுக்கே வாக்களித்துக் கொண்டிருக்கின்றனர். இவை யாவருக்கும் தெரிந்த விடயமே.

மேலும் எமது தலைவர் அஷ்ரஃப் அவர்களின் நினைவை மையமாக வைத்தாவது எமது இடம் பெயர்ந்த வடபகுதி முஸ்லிம்களுக்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் கொண்டு இம்மக்களின் கண்ணீரைத் துடையுங்கள், கிழக்கு மாகாணத்துக்கே முழு உறுப்பினரும் உதவியைச் செய்வதனால், அதில் 1/4 பகுதியையாவது வடபகுதி முஸ்லிம்களுக்குச் செய்யுங்கள் அவர்களுக்கு நீங்கள் செய்யும் உதவி அனைத்தும் இறைவனுக்கு செய்யும் கைங்கரியம். அவர்களது உலர் உணவை உடன் கொடுக்கவும் அந்தந்த மாதத்தில் கொடுக்கவும் ஆவண செய்யுங்கள்.


1990ம் ஆண்டில் இவர்களுக்கு கிடைத்த 1260 ரூபா நிவாரணத்தை அதிகரித்துக் கொடுக்க ஆவண செய்யவும். சென்ற காலங்களைப் போல் தற்போதய காலம் பொருளாதார நிலையில் கூடிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அரிசி,மா, சீனி, பால்மா, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தற்போது விஷம் ஏறியது போல் ஏறியுள்ளதால் ஒரு மாதத்தில் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களை ஒரு குடும்பத்திற்கு குறைந்தது 20 நாட்களாவது இம்மக்கள் பட்டினி இல்லாமல் இருக்கக் கூடியதாக உயர்த்திக் கொடுத்தால் ஓரளவாவது பட்டினியில்லாமல் இம்மக்கள் வாழும் நிலை ஏற்படும்.

வடபகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை திரும்பவும் சொந்த மண்ணுக்கு அனுப்புவதற்கான பேச்சுவார்த்தையில் அரசோடும், விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தை செய்து முழுமையான பாது காப்புக் கொடுத்து சொந்த மண்ணில் நிம்மதியுடன் வாழ்வதற்கான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தவும். இதற்கான செயலில் ஈடுபட ஏனைய முழு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து வடபகுதி முஸ்லிம்களின் துயர்களை இல்லாதொழிக்கவும். மீண்டும் மீள்குடியேறிய மக்களை இன்னலுக்கு ஆளாக்காமல் துணிந்து நின்று இம்மக்களை நிம்மதியாக வாழ வழி செய்யவும்.

இப்படிக்கு,
முல்லை மகன். மதுரங்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசாங்கத்தினையும் ஈராக்கிய பொம்மை அரசாங்கத்தினையும் அசைக்கின்ற பலம் அவருக்குள்ளது!



ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் பாதுகாப்புச் சபையினதும், சர்வதேச பிரஜைகளினதும் எதிர்ப்புக்களினை பொருட்படுத்தாமல் பிரித்தானியாப் பிரதமரான டோனி பிளெயரையும் இழுத்துக்கொண்டு போலிப் புலனாய்வு அறிக்கைகளை கிளப்பிக் காட்டியபடி ஈராக்கினை ஆக்கிரமித்தார். மனித இனத்தையே அழிவுக்குள்ளாக்கும் ஆயுதங்கள் சதாமிடம் உள்ளதாகவும் அவற்றினை அமெரிக்காவுக்கு எதிராக அவர் பயன்படுத்த தாயராகுவதாகவும் அந்த ஆக்கிரமிப்புக்கான காரணத்தினை அவர் விளக்கியிருந்தார்.

மிகவும் குறுகிய காலமான 45 நிமிடங்களுக்குள் பிரிட்டனை நோக்கி ஏவக்கூடிய இரசாயன மற்றும் உயிரியல் மனித அழிவு ஆயுதங்கள் சதாமிடம் உள்ளதாக கற்பனை அறிக்கைகளைச் சுட்டிக்காட்டி, இந்த ஆக்கிரமிப்பினை நியாயப்படுத்தி டொனி பிளெயரும் மக்களை ஏமாற்றினார். அவ்வாறான எவ்வித ஆயுதங்களும் அங்கு இல்லையென்று நிரூபிக்கப்பட்ட பின்னர் அது பற்றிய தகவல்களைத் தந்தவர்கள் மீது குற்றத்தினைச் சுமத்திவிட்டு இப்போது தப்புவதற்கு இவர்கள் இருவரும் முயற்சிக்கின்றனர்.

சதாமினை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்காகவே ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டது. அதன் பின்னரும் ஆக்கிரமிப்பாளர்கள் ஈராக்கில் தங்கியிருப்பதற்குக் காரணம் என்னவென்று இப்போது ஈராக் மக்கள் வினாத்தொடுக்கின்றனர். ஈராக்கின் எண்ணெய் மீது அவாக்கொண்டே அவர்கள் அங்கேயே முகாமிட்டிருப்பதாக சிலர் தெரிவிக்கின்றனர். எது எப்படியிருப்பினும், மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாகவே இது அமைந்து விட்டது என சதாமினது ஆட்சி கவிழ்ப்புக்கு அமெரிக்காவுக்கு ஆதரவு வழங்கிய ஈராக்கியர்கள் பச்சாத்தாபப்படுகின்றனர்.

பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள அலாவி அமெரிக்காவுக்குச் சார்பானவர் என்றும், தற்காலிக அரசாங்கமானது கையாள் அரசாங்கமென்றும் கருதுகின்ற ஈராக்கியர்கள், தமக்கான சுதந்திரமான அரசினை. அமைத்துக்கொள்வதற்காக ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்கும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இந்தப் போராட்டத்திற்கு ஆன்மீக ரீதியாக தலைமை வகிக்கும், நாடு போற்றும் தலைவர்தான் சியா முஸ்லிம் பிரிவின் உயர்தர ஆன்மீகத் தலைவரான ஆயதுல்லா அல் சிஸ்டானி. அவர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஈராக்கியர்களை வழி நடத்திக்கொண்டிருந்த வேளையில் திடீரென சுகயீனமுற்று சிகிச்சைக்காக இங்கிலாந்துக்குச் சென்றார்.

சிஸ்டானி வழிநடாத்திய போராட்டத்தினைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு வேறொரு ஆன்மீகத் தலைவரான முக்ததா அல் சத்ர் முன்வந்தார். நஜப் நகரத்தினைத் தலைமையகமாக்கிக் கொண்ட சத்ர் பயிற்சி பெற்ற 'மெஹ்தி படையணி' என்று குறிப்பிடப்படும். நாட்டுக்காக இன்னுயிரினை தியாகம் செய்யக்கூடிய படையினை வழிநடாத்தியபடி அமெரிக்கப் படையினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டார்.



அமெரிக்க இராணுவத்திற்கு மட்டுமன்றி அங்கு அமைக்கப்பட்டுள்ள பொம்மை அரசாங்கத்திற்கும், ஈராக்கிய பொலிஸாருக்கும். இராணுவத்திற்கும் எதிராக தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டார். பாரியதொரு தாக்குதலொன்றினையே சத்ர் அமெரிக்க கூட்டுப்படையின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தார். நஜப் மையவாடியிலும். அரேபிய உலகில் புகழ்பெற்ற பள்ளிவாயலிலுமே சத்ரின் படை முகாமிட்டிருந்தது.

அமெரிக்காவுக்குப் பெரும் தலையிடியாகவுள்ள சத்ரின் தாக்குதல்களை முறியடிப்பதற்காக அமெரிக்கா வான் தாக்குதலையும். தரைமார்க்க தாக்குதலையும் கட்டவிழ்த்து விட்டது. சத்ரியின் படை பள்ளிவாயலிலிருந்து தாக்குதல்களை மேற்கொண்டது. ஈராக்கின் தற்காலிகப் பிரதமர் அலாவி எவ்வளவுதான் மன்றாடினும் அவர்களை பள்ளிவாயிலை விட்டும் அகற்றிட முடியவில்லை. அதன் பின்னர் பள்ளிவாயலைத் தாக்கப்போவதாக அலாவி அச்சுறுத்தினார். அதனைத் தாக்குவதற்கும் அமெரிக்க இராணுவமே வந்தது. ஆனால், சத்ரின் படை பள்ளிவாயிலை விட்டும் அகழவில்லை.

இத்தகையதொரு சந்தர்ப்பத்திலேயே சிஸ்டானி பிரிட்டனிலிருந்து நாடு திரும்பினார். சிஸ்டானி நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் புடைசூழ நஜப் பள்ளிவாயலுக்குச் சென்றார். சத்ருடன் பேச்சுவார்த்தையினை நடத்தி பள்ளிவாயலிலிருந்து வெளியேறுமாறு அறிவுரை வழங்கினார். தன்னுடன் வந்தவர்கள் அனைவரையும் பள்ளிவாயலுக்குள் அழைத்துச் சென்று அவர்களுடன் இரண்டரக் கலந்தவாறு சத்ரின் படையினரும் வெளியேறுவதற்கு வழியமைத்துக்கொடுத்தார்.

சத்ரினை வழிநடாத்துவதற்கு சிஸ்டானி திறமை பெற்றார். அதேவேளை சத்ரைக் கொண்டு பக்தாத் வீதியிலிருந்தும் அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறுமாறு. அவர்கள் தங்களது முகாம்களுக்குச் செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அத்துடன், ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கும் சத்ரை இணங்கவைத்தார்.

இது சத்ரினது பின்னடைவு எனச் சிலர் கருதினாலும், இது ஓர் ராஜதந்திர உத்தியாகும். இந்த உத்தியின் காரணமாக சத்ரினைக் கைது செய்யும் திட்டமானது அமெரிக்காவினால் கைவிடப்பட்டது. சதாமின் வீழ்ச்சியின் பின்னர் இளம் சத்ர் போராட்டத்தினைப் பொறுத்தளவில் மிகவும் குறிப்பிடத்தக்கவராவார். உண்மையாகவே. இக்கட்டானதொரு சந்தர்ப்பத்தில் சத்ரினைக் காப்பாற்றுவதற்கு சிஸ்டானி முன்வந்தார் என்றே கூறவேண்டும்.

இளம் சத்ர் முதிய சிஸ்டானிக்குப் பணிந்தார். 73 வயதான சிஸ்டானியைக் காட்டிலும் 30 வயதான சத்ருக்கு சிறந்த எதிர்காலமொன்று உண்டு. ஈராக்கிய சனத்தொகையில் கணிசமானோர் சியா முஸ்லிம்களே. அங்குள்ள உயர்தர தலைவராக சிஸ்டானி கருதப்படுகிறார். நாட்டுக்குள் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய வல்லமை சிஸ்டானிக்கு உள்ளது. அனைவரும் அவரை செவிமடுப்பார்கள். பள்ளிவாயலினைத் தாக்குவதன் மூலம் அலாவிக்கு ஏற்பட இருந்த கெட்ட பெயரை இல்லாதொழிக்கவும் சிஸ்டானியினால் முடிந்தது. இந்த நிலைமையில், நரைத்த தாடியுடன் கூடிய சிஸ்டானியின் ஆதரவானது தொடர்ந்தும் அலாவிக்குத் தேவைப்படும். ஆயதுல்லா சிஸ்டானிக்கு உரித்தாயிருப்பது ஆன்மீகப் பலமே. அதனை அவர் நஜப் மோதலின் போது தலையிட்டு நிரூபித்துக் காட்டினார்.

ஆயதுல்லா சிஸ்டானிக்கு எத்தகைய ஈராக்கிய பிரச்சினைகளிலும் தலையிடும் பக்குவமும், பலமும் உள்ளது. அது ஆயுதத்தினைக் காட்டிலும் வன்மையானது. அமெரிக்க அதிகாரத்தினையும், தற்காலிக அரசாங்கத்தினையும் அசைக்கவல்ல பலம் அவரிடமிருக்கிறது. ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போராட்டத்தில் எதிர்காலத்திலும் சிஸ்டானி தனது பலத்தினைக் தக்கவைத்துக்கொள்வாரா அல்லது போராளியான சத்ர் அவரை முந்திவிடுவாரா என்பது மிக விரைவில் தெரியவருமென ஈராக்கிய நோக்கர்கள் எழுதுகின்றனர்.

---

அ.கா.மு. றிஸ்வின்



சின்னப் பிள்ளைகள்
சிப்பி சிரட்டையில்
சோறு சமைத்து
அதை உண்ணமுடியாது
போவதைப் போல்
வடக்கு முஸ்லிம்கள்
அன்று நிஜத்தில்
தோற்றுப் போனார்கள்.

அழுக்காகவும்
கழிவு குவிந்ததாகவும்
கலக்கலாகவும்
கடலிருந்த வேளையில்
திடீரென மேகம்
நீரள்ளினாற் போல்
வடக்கு முஸ்லிம்களை
அவர்கள் துண்டு துணியோடு
துரத்தினார்கள்.

கூடுகட்ட முடியாத
குயில் கூட்டங்கள்
காககைக கூட்டை(க்)
கைப்பற்றுவதற்காக
துப்பாக்கியோடு வந்து
விரட்டியது போலவே
வடக்கு முஸ்லிம்களின்
தாயகத்தை பறிக்க......
அவர்களும் குயிலானார்கள்.

முற்றி வெடித்த செங்கரும்பால்
முத்து முத்தாய்
பாணி வழிவதைப் போலிருந்த
வடக்கு முஸ்லிம்களின் வாழ்வு
அகதியானதால் - இன்று
பாலைவனமாகி
விட்டது.

மின்னலோடு வந்த இடி
பூத்திருந்த உடுக்களை
எல்லாம் விரட்டியடித்து
விடி வெள்ளிமேல்
பதின்னான்கு
ஆண்டுகளாய் அகதியாய்
குடியிருக்க வைத்தது.
இப்படித்தான்
வடக்கு முஸ்லிம்களும்

வடக்கு முஸ்லிம்களாகிய
எங்களை தாயகத்திற்கு
குடியேற்ற முடியாத
வரைக்கும்
எங்கள் அரசியல் நிலவில்
இன்னுமே ஆம்ஸ்ரோங்
கால்வைக்கவில்லை.

---

## அம்பாரை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் 24வது

அம்பாரை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அக்கரைப்பற்று கிளையின் 24வது நிறைவு விழா 03.10.2004ம் திகதி அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளர் ஜனாப் எம்.ஐ. உதுமாலெப்பை தெரிவித்துள்ளார். இதன்போது சம்மேளன உறுப்பினர்கள் 06 பேர் பாராட்டி, கௌரவிக்கப்பட்டு, நினைவுச் சின்னம் வழங்கப்படவுள்ளனர். பாராட்டுப் பெறுபவர்களின் விபரம் வருமாறு: ஜனாப் எஸ்.எம். கலீல் கணக்காளர் (மாவட்ட ஆலோசகர்), அல்ஹாஜ் எஸ்.எல். ஆதம்பாவா ஜே.பி (மாவட்ட ஆலோசகர்), அல்ஹாஜ் எம்.ஐ. எம். அஸ்ரப் கணக்காளர் (சம்மேளன உறுப்பினர்), ஜனாப் ஏ. ஆதம்பாவா (தலைமையக நிருவாகச் செயலாளர்), ஜனாப் ஜே.எம். அஸ்ரப் (சம்மேளன உறுப்பினர்), அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அப்துல் மலிக் சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

(பொத்துவில் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுந்தேசிய இனவாதம் எப்படி முஸ்லிம் மக்களுக்கு எதிராக மாறியது

இரண்டாவதாக முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல் மற்றும் வெளியேற்றத்துக்கு கூறும் காரணங்கள் குறுந்தேசிய இனவாதக் கண்ணோட்டத்தில் இருந்து எழுவதாகும். ஆதிகக இனங்கள் சிறுபான்மை இனங்கள் மேலான அதிகாரத்தையும், நலன்களையும் தக்கவைக்க கட்டமைக்கும் கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டே இவை முன்வைக்கப்படுகின்றது. 1993 இல் புலிகளின் தலைவர் பிரபாகரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் "முஸ்லீம்கள் தனியான கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் கொண்டவர்கள். அவர்களின் தனித்துவமும் நில உரிமையும் பாதுகாக்கப்படும். தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ்வதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார வாழ்வு சிறப்பாக இருக்கும்." என்ற புலிகளின் கூற்று அவர்களையே அவர்களின் நடவடிக்கைகள் ஊசலாட வைக்கின்றது. இந்தப்பேட்டி அவர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கக் கோருகின்றது. ஆனால் புலிகளின் சொற்களுக்கு அப்பால் நடைமுறையில் இதை மறுக்கின்றனர். முஸ்லீம் மக்களின் பொருளாதாரக் கூறு என்பது வளர்ச்சி பெறாத தன்மைதான். அவர்களை சிறுபான்மை தமிழ் தேசிய இனமாக்கின்றது. இங்கு அவர்களின் மொழி கூட தமிழில் ஒரு பகுதியாகவே உள்ளது. அதாவது தமிழ் என்பது, பல கிளை மொழியே பொதுவாக தமிழாக இருக்கின்றது. இது பிரதேசம், மதம், பண்பாடு, பொருளாதாரக் கூறு... என்று பல்லினை அம்சங்கள் தமிழ் மொழியைதனக்குள் பிரிக்கின்றது. தமிழ் இதுதான் என்று ஒன்றை சொல்லவோ, திணித்துவிடவோ முடியாது. யாழ்ப்பாணத்து தமிழை, கிழக்குக்கோ, முஸ்லீம் மக்களுக்கோ, மலையகத்துக்கோ, தமிழ் நாட்டுக்கோ திணிக்க முடியாது. ஆனால் தமிழ் என்ற பெயரில் வேறு மொழியை அப்படியே தமிழ் ஆக்குவது, தமிழ் அல்ல. அதாவது தமிழ் மொழி பேசும் மக்கள் தமது வாழ்வின் சூழல் சார்ந்து, பொருள் முதல்வாதக் பக்க வடிவத்தையும், நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இனவாதத்தை கட்டமைக்கும் இனவாதிகளை நோக்கி மக்கள் எதிர் தாக்குதலை, இனம் கடந்து நடத்த வேண்டும். இதை இனவாதிகள் செய்யக் கூடாது.

> "தேசிய போராட்டம் குறுந்தேசிய போராட்டமாக மாறும் போது, அது மொழியாக தன்னை குறுக்கி கொண்டு, மொழி கடந்த முரண்பாடுகளை அடங்கி ஒடுங்கி நடக்கக் கோருகின்றது. அடங்க மறுத்தால், அடக்குகின்றது."

# முஸ்லீம் மக்கள் மீதான வன்முறையும், அதற்கு எதிரான போராட்டமும் 02

**எழுதுவது - சமரசம்-**



இத்தாக்குதலின் பின்பாகவே வெளிவந்துள்ளது. புலிகளின் வெளியீடான "இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்" என்பது, ஜனவரி 1987 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு வெளியீடாகும். இது "தமிழீழ விடுதலைப் போரில் முதற் களப்பலியான இஸ்லாமியத் தமிழ் வீர மறவன் புலிகள் இயக்கத்தின் லெப்டினட் ஜுனைதீனுக்கு இந்த நூல் காணிக்கை"யாக வெளிவந்தது. இந்த நூல் முஸ்லீம் சமுகம் பற்றி பேசுகின்றது. புலிகளின் அரசியல் பிரிவின் முன்னுரையில் "மதம், சாதி என்ற எல்லைக் கோடுகளை அழித்து, ஓரினம் என்ற தேசிய எழுச்சியும், ஒரே நிலம் என்ற தாயகப் பற்றுணர்வும் இஸ்லாமியத் தமிழர்களை எமது புரட்சிப் போராட்டத்தில் அணிதிரட்டி வருகின்றது. இரத்தம் சிந்தும் எமது விடுதலைப்போராட்டம் இஸ்லாமியத் தமிழரின் விடிவுக்கு வழிகோலும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு" அதன் தொடர்ச்சியில் "தமிழீழத் தனியரசே இஸ்லாமிய மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கும்..." என்ற கூற்றும் முஸ்லீம் மக்கள் பற்றிய புலிகளின் குறுந்தேசியத் தன்மையை முரண்பட்டபடி வெளிப்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் பற்றி பேசும் இவர்கள், முஸ்லீம் மக்கள் என்று தனித்துவமாக்கி பிரித்துக்காட்டும் போது, மதம் என்ற வேறுபாட்டில் நின்றே விளக்கிய போதும், அதில் இருந்து வேறு ஒன்று அதற்குள் உறுத்தி நிற்கின்றது. இங்கு தமிழ் மக்கள் என்பதற்கு பதில் இந்து, கிறிஸ்துவம் என்று சொல்லத் தவறுவது. முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை மதம் கடந்து ஒத்துக்கொள்ள மறுக்கின்றது. முஸ்லீம் மக்கள் மதச் சிறுபான்மையினர் அல்ல. இந்துக்கள், கிறிஸ்துவர்கள் என்ற வரிசையில் முஸ்லீம் மக்கள் மதமாக இல்லை. மாறாக வேறு ஏதோ ஒன்று இருப்பதால் தான், அதைத் தனித்து புலிகள் குறிப்பிட்டுக் காட்ட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். முஸ்லீம் மக்கள் என்று குறித்துக் காட்டும் தன்மை எதைக் குறிக்கின்றது?

இலங்கையில் சிங்கள, தமிழ், மலையக, முஸ்லீம் மக்கள் என்று குறிப்பிடும் போதே, இனத் தன்மை வாய்ந்த ஒன்று காணப்படுகின்றது. இந்தக் கூற்றில் மதத் தன்மை இருப்பதில்லை. புத்தம், இந்து, முஸ்லீம், கிறிஸ்துவம் என்று குறிப்பிடும் போது மட்டுமே மதம் சார்ந்து வெளிப்படுகின்றது. சிங்களம், தமிழ் என்று குறிப்பிடும் போது அது மொழி சார்ந்து பிரிகின்றது. இங்கு மலையகம், முஸ்லீம் என்று குறிப்பிடுவதில்லை. தேசிய விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே மொழி சார்ந்தது அல்ல. மாறாக பொருளாதாரம், பொது மொழி, கலாச்சாரம், நிலத் தொடர் என்ற எல்லைக்குள் தேசியம் வளர்ச்சி பெறுகின்றது. இது மதத்தை கடந்து நடக்கின்றது. தேசிய போராட்டம் குறுந்தேசிய போராட்டமாக மாறும் போது, அது மொழியாக தன்னை குறுக்கி கொண்டு, மொழி கடந்த முரண்பாடுகளை அடங்கி ஒடுங்கி நடக்கக் கோருகின்றது. அடங்க மறுத்தால், அடக்குகின்றது. முரண்பாடுகளை மதமாகவும் அல்லது ஏதோ ஒன்றின் ஊடாக காட்டி அடக்கி ஒடுக்குகின்றது.

### முஸ்லீம் மக்கள் சிறுபான்மை தமிழ்த் தேசிய இனமே என்பதே புலிகளின் வாதம்

புலிகளின் தலைவர் பிரபாகரனின் முஸ்லீம் மக்கள் தனியான கலாச்சாரம், தனித்துவமான நிலத் தொடரைக் கொண்டவர்கள் என்ற கூற்று,

கண்ணோட்டத்தில் பொருட்களின் உச்சரிப்பையும, அதன் கலாச்சார வேறுபாட்டையும் கொண்டு பிரியும் போது அதை தமிழாக பரஸ்பரம் அங்கீகரிக்க வேண்டும். யாழ்ப்பாணத்து தமிழ் மொழியின் அடிப்படையில் முஸ்லீம் மக்களின் தமிழை கிண்டல் செய்வது அல்லது அதை தூற்றுவது குறுந்தேசிய இனவாதமாகும். இது முஸ்லீம் மக்களை தமிழ் மொழியில் இருந்து தனிமைப்படுத்தி, அவர்களின் தனித்துவ இனத் தன்மையை மறுக்கின்றது. இந்த மறுப்பே அவர்கள் மீதான அடக்குமுறையாக பரிணமிக்கின்றது.

### முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களை தாக்கினார்களா?

நாம் தனித் தனியாக முஸ்லீம் மக்கள் மேலான ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் காரணங்களை ஆராய்வோம். முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி என்பது, தமிழ் தரப்பின் முன்கூட்டிய ஆயுதம் எந்திய படுகொலைத் தாக்குதலை மூடிமறைப்பதாகும். அதாவது முஸ்லிம் மக்களில் இருந்து அன்னியமான கூலி படைகளின் தாக்குதல் கூட, இயக்கங்களின் வரைமுறையற்ற அப்பாவி முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலின் விளைவாகும். அதாவது இந்தக் கூலிப்பட்டாளம் உருவாக இயக்கங்களின் குறித்த வன்முறையே காரணமாக இருந்தது என்பதை, இந்தக் குற்றச்சாட்டு மூடிமறைத்து அதை மேலும் ஊக்குவிக்கின்றது. இதே போன்ற குற்றச்சாட்டை சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு கூறின். என்ன தர்க்க நியாயம் இருக்க முடியும்.

இதேபோல் தான் முஸ்லீம் மக்கள் நிலையும். பலமான இனங்கள் பலவீனமான இனங்கள் மேல் தாக்குதலை நடத்தும் போது, பலவீனமான இனம் தவிர்க்க முடியாமல் எதிர் தாக்குதலில் இறங்குகின்றது. சிங்கள இனவாதச் சக்திகள் தமிழ் மக்கள் மேலும், தமிழ் குறுந் தேசியவாதிகள் முஸ்லீம் மக்கள் மேலும் நடத்தும் தாக்குதலுக்கு எதிர் மறையில் பதிலடி கொடுக்கின்றது. இங்கு மக்களில் இருந்து அன்னியப்பட்ட குழுக்கள் இதை நேரடியாக கையாளும் போது, இனத்தையே எதிரியாக காட்டி அழிப்பது நியாயப்படுத்தப்படுகின்றது. இங்கு அப்பாவி மக்கள் மேல் இனவாத சக்திகள் நடத்தும் இரண்டு

இனவாதி மற்றொரு இனவாதி மேல் நடத்தும் தாக்குதல், படிப்படியாக இன மக்கள் மேலானதாக மாறிவிடுகின்றது. தமிழ் இனவாதிகள் முஸ்லீம் மக்கள் மேலும், சிங்கள மக்கள் மேல் நடத்திய தாக்குதல், முஸ்லீம் இனவாதிகள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதல், சிங்கள இனவாதிகள் தமிழ் முஸ்லீம், மலையக மக்கள் மேல் நடத்திய தாக்குதல் அனைத்தும் தேசிய இனவாதத்தை அடிப்படையாக கொண்டது. எதிரியை விட போராடும் இயக்கங்கள் மக்களை இனத் தன்மையில் கொல்லும் போது, அப்போராட்டத் தியாகமே இனவாதமாகி சீரழிகின்றது. ஆனால் போராளிகள் அல்லாத இராணுவம் இனப்படுகொலைகளை நடத்தும் போது, கூலித்தனத்தை வெட்ட வெளிச்சமாக்கி மேலும் இனவாதம் அம்பலமாகின்றது. தமிழ் குறுந்தேசிய இனவாத இயக்கங்கள் முஸ்லீம் மக்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதலின் விளைவால் தான், முஸ்லீம் இனவாத கூலிக்குழுக்கள் உருவாகியது மட்டுமின்றி எதிர் தாக்குதலை தமிழ் மக்கள் மேல் நடத்தும் நிலைக்கும் இட்டுச் சென்றனர். தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் மற்றைய இன மக்களின் ஐக்கியத்தை அங்கீகரித்து, அவர்களுடன் இணைந்து போராடத் தவறினர். அம் மக்கள் மேல் அடக்குமுறையை கையாளும் போது, பிரதான எதிரி தனக்குச் சார்பாக தாக்குதலுக்கு உள்ளான இனங்களை மாற்றி, தனது கூலிப்பட்டாளத்தை அந்த இனங்களிலும் உருவாக்கின்றது. இது தமிழ் மக்களுக்கும் கூட பொருந்தும். இந்த முஸ்லீம், தமிழ் கூலிப்பட்டாளங்களுக்கும் மக்களுக்கும் எந்தவிதமான அரசியல் உறவும் இருப்பதில்லை. மாறாக அந்த மக்களுக்கு எதிராகவே செயற்படுகின்றது. மக்களில் இருந்து தனிமைப்பட்ட பயங்கரவாத கூலிக்குழுவாக இயங்கும் இந்தக் குழுக்கள், தனக்கு எதிரான இன மக்கள் மேல் படுகொலைத் தாக்குதலை நடத்துகின்றது. இதை இனம் கடந்து கண்டிக்க வேண்டும். மக்களுக்காக போராடும் இயக்கங்கள் இந்தக் கூலிக்குழுக்களை அம்பலம் செய்து, இது போன்ற நடவடிக்கையில் தானும் ஈடுபடாது போராடவேண்டும். அதை விட்டு அந்தக் கூலிக் குழு சார்ந்த இன மக்களை தாக்கி அழிப்பது, போராட்டத்தை குறுந் தேசிய இனவாதமாக்கி சீரழிந்து செல்வதைக் கடந்து, எந்த விளக்கமும் அதற்கு இருப்பதில்லை.

(தொடரும்....)

### மாவனல்லை நான்கூக்கம கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா



இப்பாடசாலையின் அடிக்கல் நாட்டும் விழாவுக்கு வருகைதந்த முதலமைச்சர் மகிபாலஹேரத், மாகாணசபை உறுப்பினர் ஐ.எல்.எம். தாஹிர் ஆகியோரை பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர் கமால்தீன் மாக்கார், பாடசாலை அதிபர் முபாறக் ஆகியோர் வரவேற்பதை இப்படத்தில் காணலாம்.

- படம் மாவனல்லை நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வாழ்வில் அஷ்ரஃபின் பணி

இலங்கை அரசியல் வானில் வால் வெள்ளிபோல் பிரகாசித்து, மிகக் குறுகிய காலத்தில் வரலாற்றுப் பக்கங்களை ஆச்சரியங்களாக நிறைத்து, இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்தையே மாற்றியமைத்து, முஸ்லிம் சமூகத்தை தற்மானத்தோடும், சுய கௌரவத்தோடும் வாழவைத்த மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் அரசியல் வாழ்வு பற்றி நாம் அறிய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்ற அவா அவர் மனதில் குடி கொண்டது. 1975ம் ஆண்டு புத்தளம் பள்ளிவாசலில் 09 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட கோரச் சம்பவத்தை எந்த ஓர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டிக்காதபோது அதனை அவர் கண்டித்தார்.

இந்த சூழ்நிலையில்தான் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்கு நமக்கென்ற தனித்துவமான கட்சி வேண்டும் என்ற அறிஞர் சித்திலெவ்பையின் வார்த்தை அவர் மனக்கண் முன் நிழலாடியது. அது அவரைச் சிந்திக்கச் செய்தது. அதன் பேறாக அரசியலில் அநாதையாக நின்ற முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டவும், ஒளியேற்றவும், முஸ்லிம்கள் இரண்டாம் தர பிரஜைகள் அல்ல என்பதை நிரூபிக்கவும் 1981ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் தாபனத்தை அஷ்ரஃப் அவர்கள் உருவாக்கினார்கள்.

மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களிடம் மேலோங்கி நின்ற அரசியல் ஞானம், அறிவு, ஆழுமை, தூரநோக்கு, செயற்திறன், தேசிய உணர்வு போன்றவைகளே அவரின் வெற்றிக்கு காரணங்களாகும். அவருடைய 11 வருட பாராளுமன்ற வாழ்க்கையிலே ஒரு போதும் பேரினவாதத்திற்கு தலைகுனியவில்லை. அரசின் பங்காளியாக இருந்த போதும் அவர்களது இனவாதக் கருத்துக்களையும், சமூகத்திற்கெதிரான தீர்மானங்களையும் எதிர்ப்பதில் அவர் ஒரு போதும் பின் நின்றதாக எந்தவொரு சான்றுகளும் இல்லை.

> “பூம் பொழிலில் எத்தனையோ பூக்கள் பூக்கின்றன அவை அனைத்தும் குறிஞ்சி மலராகிவிட முடியாது. வானிலே ஆயிரக்கணக்கான விண்மீன்கள் பிரகாசம் தருகின்றன அவை அனைத்தும் விடி வெள்ளியாகிவிட முடியாது.”

1989ம் ஆண்டு முதன் முதலாக பாராளுமன்றத் தேர்தலிலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியினூடாகப் போட்டியிட்டு, அமோக வெற்றியீட்டி பாராளுமன்றம் சென்று அவர் ஆற்றிய கன்னி உரைதான் இந்நாட்டு முஸ்லிம்களை சிந்திக்க வைத்தது. அடிமைப்பட்டு, உரிமை இழந்து அநாதரவாக வாழும் சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க தனிக்கட்சி அவசியம் என்பதை அவர் வலியுறுத்தினார்.

சிறுபான்மை சமூகமும் தமது அதிகப்படியான பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற நோக்கில் சிறுபான்மையினருக்கு சவாலாகக் காணப்பட்ட 12.5% வெட்டுப்புள்ளியை 5%மாக குறைத்து தமிழ் முஸ்லிம் சமூகத்திற்காய் உழைத்தார். இதனை எந்த ஓர் சமூகத்தாலும் இலகுவில் மறந்துவிட முடியாது.

தனது 11 வருட பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் எந்த ஒரு முஸ்லிம் தலைவர்களாலும் செய்ய முடியாத மாபெரிய மகத்தான பணிகளை முஸ்லிம் சமுதாயத்திற்காக செய்திருக்கிறார். முஸ்லிம் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காய் தென் கிழக்கு பல்கலைக் கழகத்தையும், பொருளாதார விருத்திக்காய் ஒலுவில் துறைமுகத்தையும், ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை எண்ணற்ற எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் உருவாக்கினார். இது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

புரையோடிப்போய் இருக்கின்ற இனப்பிரச்சினை தீர்க்கப்படுகின்றபோது பேரினமும், தமிழ் இனமும் உரிமைகளோடு வாழும்வேளை அச்சமின்றி நமது இனமும் உரிமை பெற்று தனித்துவமாக வாழ முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன்வைத்தார்.

இனத்துவேசங்களுக்கு அப்பால் தன்னை ஒரு பொதுநலவாதியாகவே உருவாக்கிக் கொண்டார். தனது அமைச்சின் மூலம் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கினார். அது மாத்திரமல்ல சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கென தனித்தனி புனரமைப்புக் கிராமங்களை உருவாக்கினார். அறுபது ஆண்டுகள் சென்றாலும் செய்ய முடியாத மகத்தான சேவைகளை அவர் மக்களுக்காகச் செய்தார். அவருக்கெதிராக பேரினவாதிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணையை துணிந்து எதிர்த்து வெற்றி கண்டார். முஸ்லிம்கள் 'வந்தேறு குடிகள்' என்ற சோம தேரரின் கூற்றுக்கு பகிரங்க தொலைக்காட்சி விவாத்தில் தக்க பதிலடி வழங்கி முஸ்லிம்களின் இருப்பை உத்தரவாதப்படுத்தினார்.

ஆண்டாண்டு காலமாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாரை மாவட்டத்தின் அரசியல் அதிகாரம் பேரினவாதிகளின் கைகளில் குவிந்து கிடந்த வேளை அதனை மாற்றி அந்த அரசியல் அதிகாரத்தை முஸ்லிம் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார். அது மாத்திரமல்ல சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி எந்தவொரு பேரினவாதக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது என்ற உண்மையை இரு தடவை பேரினவாதிகளுக்கு உணர்த்திக்காட்டி பேரம்பேசும் அரசியல் சக்தியாக விளங்கினார்.

தான் மரணிப்பதற்கு முன்பு புதிய அரசியல் அமைப்பு நகல் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டு இனவாதிகளின் கூச்சல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் மத்தியில் களைக்காமல் மூன்றரை மணித்தியாலயங்களாக அவர் ஆற்றிய உரை பேரினவாதிகளையும் சிந்திக்க வைத்தது. இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் அது ஓர் வரலாற்றுச் சாதனையாகும்.

பூம் பொழிலில் எத்தனையோ பூக்கள் பூக்கின்றன அவை அனைத்தும் குறிஞ்சி மலராகிவிட முடியாது. வானிலே ஆயிரக்கணக்கான விண்மீன்கள் பிரகாசம் தருகின்றன அவை அனைத்தும் விடி வெள்ளியாகிவிட முடியாது. ஆனால் அஷ்ரஃப் அவர்கள் ஒரு குறிஞ்சி மலர் அவர் ஒரு விடி வெளளி என்பதை நிச்சயமாக வரலாறு பறைசாற்றும்.

எனவே மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்து முஸ்லிம் சமூகத்தை மென்மேலும் ஒற்றுமைப்படுத்தி அதன் மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்க அவரின் பின்வந்த தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இ. நளீம்




முஸ்லிம் இளைஞர்களுக்கான சர்வதேச பேரவை (WAMY) நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 60வது மாணவ மாணவிகளுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் வைபவத்தினை Y.M.M.A. கேட்போர் கூடத்தில் அண்மையில் நடாத்தியது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவரின் முதல் நிலைச் செயலாளர் அஷ்ஷெய்க் தலாத் ஹம்ஸா ஷீராஹ் அவர்களும் கௌரவ அதிதியாக ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளிமி) அவர்களும் கலந்து கொண்டார்கள். "வாமி" நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் உமர் இத்ரீஸ் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## ஷஃபான் மாதம்

ஷஃபான் எட்டாவது இஸ்லாமிய மாதம். இறைவன் இம்மாதத்தில் அடியார்களின் இரணத்தைப் பங்கிடுவதால், பங்கிடுதல் எனப்பொருள்படும். இது 'முன்ஷஃப்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்பர். நபி (ஸல்) அவர்கள் இது 'என்னுடைய மாதம்' என்று கூறியுள்ளனர். இம்மாதத்தில் அவர்கள் அதிகமாக நோன்பு வைத்தார்கள் என்று ஹதீஸில் வருகிறது.

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்பின்படி, இம்மாதத்தின் ஒருநாள் இரவில் நபி (ஸல்) அவர்களைக் காணவில்லை என்றும் அவர்களைத் தேடிச்சென்றபோது மதீனாவின் 'பகீஃ' அடக்கஸ்தலத்தில் இருந்ததாகக் கூறியுள்ளார். அந்த நாள் இம்மாதத்தின் 15ம் நாளாக இருந்தது என்றும் அந்நாளில் அல்லாஹ் இப்பூவுலகின் வானத்தில் இறங்கி, பனூ கல்ப் கூட்டத்தினரின் ஆடுகளின் ரோமங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான மக்களின் பாவத்தை மன்னிப்பதாக நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இம்மாதத்தின் 15ம் இரவு கப்ருகளுக்குச் சென்று இறந்தோருக்கு துஆச் செய்வது விரும்பத்தக்கது. அன்று இரவை வணக்கத்தில் கழிக்க வேண்டும் பகலை நோன்புவைத்து சிறப்பிக்க வேண்டும். இம்மாதம் 23ம் நாள் உமர் (ரலி) அவர்கள் பிறந்தார்கள்.


மௌலவி எம்.ஆர்.எம். ஹலீமுல்லா (ரஹ்மானிய்யா)
நாபாவெளை

## தூர்ந்து போன தூறல்கள்

பாலமுனையூர் மூனா. முஸ்தபீன்

*வசந்தமாய் வாழ வைத்த*
*சந்தனக்காற்று ஓய்ந்து விட்டது*
*சரித்திரத்தில் நம் பெயரும்*
*சரிந்து போய் விட்டது*
*அதனாலோ*
*சமாதானத்தில்*
*நமக்கிடமில்லையாம் -*
*அதனால்*
*வாருங்கள் வருங்...*
*சிந்திப்போம்...*

*சமுதாயச் சுமை...*
*சுமந்து வந்த தலை...*
*தாங்கி வந்த விமா...*
*தரையிறங்காமல்*
*தத்தளிக்க வைத்...*
*காலதேவனின் ...*
*கயவர்களின் சதியா -*



*அதனால்*
*வாருங்கள் வருங்காலத்தைச்*
*சிந்திப்போம்.*

*நம் அடிமனதில்*
*அமர்ந்திருக்கும்*
*அருமைத் தலைவரின் எண்ணங்கள்*
*தூர்ந்து போன தூறல்களாகிவிட்டன*
*- அதனால்*
*வாருங்கள் வருங்காலத்தைச்*
*சிந்திப்போம்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாளிகாவத்தை மையவாடி திட்டமிட்டு அபகரிக்கப்படுகிறது!

மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடிக்குச் சொந்தமான காணி திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகிறது. புதிய கட்டிடங்கள் கட்டப்படுகின்றன இதனை தடுத்து நிறுத்துவதற்கு முடியாதுள்ளதாக கொழும்பு முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் மையவாடிக் காணி அபகரிப்புத் தொடர்பாக கடந்த ஆண்டு முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இது சம்பந்தமாக பெரியபள்ளிவாசல், மாளிகாவத்தை ஜூம்ஆப் பள்ளிவாசல், மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ. மற்றும் இப்பிரதேச சமூக நலன் விரும்பிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பின்னர் வஃபு சபைக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது.

- பெரியபள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடி காணியில் வெளியார் ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல்.
- மையவாடி காணியில் தடைசெய்யப்பட்ட வியாபாரம் செய்வதை தடுத்தல்.
- மையவாடி காணியில் கட்டிடம் கட்டப்படுவதை நீதிமன்றம் மூலம் தடைஉத்தரவு பெறல். இத்தகைய தீர்மானங்களை மீறியே விடயங்கள் நடந்து வருகிறது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபையும் இந்த விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. கொழும்பில் சுமார் 27 ஜூம்மா பள்ளிவாசலைச் சேர்ந்த மஹல்லாவாசிகள் கொழும்பில் வாழும் மேமன் இனத்தினர் ஜனாஸா நல்லடக்கதிற்காக இம் மையவாடியையே பயன்படுத்துகிறார்கள்.

இவ்விடயம் சம்பந்தமாக உடனடியாக முஸ்லிம் கலாசார சமூக விவகார அமைச்சு தலையிட்டு ஜூம்மா பள்ளிவாசல் ட்ரஸ்ட்டிமார் கொண்ட சுதந்திரக் குழுவொன்றை ஒழுங்கு செய்து எஞ்சியுள்ள மையவாடிக்குச் சொந்தமான காணிகளை பாதுகாக்க வழி செய்ய வேண்டும். இத்தகைய ஒரு ஏற்பாட்டை செய்யத் தவறினால், காலபோக்கில் ஜனாஸா நல்லடக்கம் செய்ய இடநெருக்கடி ஏற்படலாம். இவ்விடயத்தை முஸ்லிம் கலாசார சமூக விவகார அமைச்சு கவனத்திற்கு எடுக்குமா என பொதுமக்கள்கேள்வி எழுப்புகிறார்கள்.

எம்.ஜே.ஜே. பரீத், மாளிகாவத்தை.

# அகதியின் வார்த்தைகள்

என்
தினப்பதிவேடுகளில்
எதை எதையோ
எழுத நினைத்து
எப்படியோ
முடித்திருக்கிறேன்!
எழுதிய பக்கங்களை
ஒரு முறை தூசுதட்டிப்
பார்க்கிறேன்
எல்லாமே
எமக்குண்டான
இழப்புகளும்,
அழிவுகளும் - பற்றிய
குறிப்புகள் மாத்திரமே!

ஆயிரத்து தொள்ளாயிரத்து
தொண்ணூறாம் ஆண்டு
எங்கள் தாயகத்தை விட்டும்,
சொத்தமண்ணைவிட்டும்,
வியாபாரஸ்தலங்களை விட்டு
குடும்ப உறவுகளை
திக்குத் திக்காய்
தூக்கி எறிந்த நிலையிலும் -
வடக்கிலிருந்து விரட்டியடித்து



இனச்சுத்திகரிப்பு
செய்தது பற்றியதான
குறிப்புகளே
என் பதிவேட்டின்
ஆரம்பப் பதிவுகள்!

பின் பசி, வறுமை,
கண்ணீர்
தாயக நினைவு, அகதி
அவமானம்
இவைபற்றித்
தெரியுமா உனக்கு?
ஏன் எம்மை
இப்படிச் சீரழித்தாய்?
சொல்!

- காவத்தமுனை ஜாபிர் எச்எம் -

# தோப்பூர் பிரதேச செயலக வாக்குறுதி எட்டாக் கனியாகவே உள்ளது!

**தோ**ப்பூருக்கான தனியான பிரதேச செயலகம் அமைத்துத் தருவதாக தோப்பூர் பிரதேசத்திலுள்ள கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், பள்ளி பரிபாலனசபைத் தலைவர்கள் கொண்ட குழுவொன்று கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சர் அதாஉல்லா அவர்களுடன் 04.03.2004ம் திகதி நேரடியாக ஜனாதிபதியை சந்தித்தபோது வாக்குறுதி அளித்தனர். ஜனாதிபதியின் கட்சி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களையும் தாண்டி விட்டது. இன்னமும் வாக்குறுதி நிறைவேற்றப்படவும் இல்லை அது பற்றிய கதையும் இல்லை. தோப்பூர் பிரதேச மக்கள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் வாக்குறுதியை நம்பி அவரது கட்சிக்கே தமது ஆதரவை அளித்தனர். ஏமாந்து, ஏமாந்து வெந்துபோன தோப்பூர் பிரதேச மக்களின் மனதில் மீண்டும் தீ வந்து விழுந்ததுபோன்ற ஊடகச் செய்தியானது அனைத்து மக்களையும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அரசாங்கத்தினால் 14 பிரதேச செயலகங்கள் புதிதாக அமைக்கப்படவிருப்பதாகவும் அதில் சிங்கள, தமிழ் பிரதேச செயலகங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் அதில் தோப்பூர் பிரதேச செயலகம் உள்ளடக்கப்படவில்லை எனத்தெரிகிறது. மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி எட்டாக் கனியாகவே உள்ளது.

தானிஸ் ஏ. சுல்தான் – தோப்பூர்



மருதமுனை வைத்திய சாலையில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் டாக்டர் ஏ.எல். பாறுக்கிற்கு மருதமுனை மக்கள் சார்பாக நடைபெற்ற கௌரவிப்பு வைபவத்தின்போது ஓய்வுபெற்ற நூலகர் ஏ.எல்.எம்.ஏ. மஜீட், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஏ.எல்.எம். நசீர் மருதமுனை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எல்.எம். மிஹ்லார் ஆகியோர் கலந்து கொண்டனர்.
படம்: பி.எம்.எம்.ஏ. காதர்

# மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் அரசியல் வாழ்விலிருந்து கற்றுக் கொள்வோம்!

இலங்கை முஸ்லிம்களின் தேசியத் தலைவரும் ஈடு இணையற்ற அரசியல் போராளியுமான மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் நினைவுகளிலும் இழப்பின் துயரத்திலும் அவரது இலட்சியங்களை அடையும் அரசியல், சமூக பணிகளிலும் முஸ்லிம் மக்கள் செயலணி தன்னையும் இணைத்துக் கொள்கின்றது.

இலங்கையின் இனத்துவ அரசியலின் முக்கியமான திருப்பங்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் அன்னார் அவர்களின் இடைவெளியானது நமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் கொண்டிருந்தவர்களையும் முஸ்லிம்களின் நலன்களை முதன்மைப்படுத்தி முஸ்லிம் கொங்கிரஸ் கட்சிக்குள் ஒன்றுபடுத்திய அவரது காத்திரமான அரசியல் பாத்திரம் குறித்தும் கொள்கையில் விட்டுக் கொடுக்காத அவரது அரசியல் உறுதி குறித்தும் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிந்திக்க வேண்டும் என்று முஸ்லிம் மக்கள் செயலணி இன்றைய நாட்களில் கேட்டுக் கொள்கின்றது.

இலங்கையின் அரசியல் வளர்ச்சிப் போக்கில் பாரிய மாற்றம் நடைபெறவுள்ளது. இக்கட்டத்தில் முஸ்லிம்களின் அரசியல், சமூக நலன்களை முதன்மைப்படுத்தும் பொதுவான கொள்கையின் கீழ் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் அரசியல் அமைப்புகளும் ஓரணி திரண்டு முஸ்லிம் அரசியல் நிறுவனங்களின் ஒன்றியம் ஒன்றிணை உடனடியாக அமைப்பதற்குப் பாடுபடுமாறும், வரவிருக்கின்ற அரசியல் மாற்றத்தில் முஸ்லிம்களின் அபிலாசைகளையும் நலன்களையும் உறுதிப்படுத்துமாறும் முஸ்லிம் மக்கள் செயலணி அறைகூவல் விடுக்கின்றது.

1980களில் இனத்துவ அடையாளத்தை உறுதிப்படுத்தியதில் அவரது சாதனைகள், வலுவான ஒரு கட்சியை உருவாக்கியதில் அவரது ஆளுமைகள், கட்சியை வளர்தெடுத்ததில் அவர் இழைத்த தவறுகள், கட்சியின் இன்றைய அவல நிலைக்கு அவர் ஏற்க வேண்டிய பொறுப்புகள், சமூக, பொருளாதார, கல்வி விடயங்களில் அவர் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய பாரிய பணிகள், அவரது அரசியல் கொள்கை நிலைப்பாடுகள்.

இனப்பிரச்சனைத் தீர்வில் அவரது அடிப்படை நிலைப்பாடுகள் போன்ற அனைத்து விடயங்களும் இன்றைய நாட்களில் நினைவு கூறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு படிப்பினைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் என்று முதலில் தன்னையும் முஸ்லிம் சமூக, அரசியல் சக்திகளையும் முஸ்லிம் மக்கள் செயலணி வேண்டிக் கொள்கின்றது.

# அரசியல் பேச்சுக்களினால் ரூபாவினது வீழ்ச்சியை தடுக்க முடியாது!

எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய 04 நிதி அலகுகள் உள்ளன. அமெரிக்க டொலர், பவுன், யென், யூரோ ஆகியனவே அந்த பண அலகுகளாகும்.

கடந்த வாரம் இந்த பண அலகுகளினது பெறுமதியானது வரிசைக் கிரமமாக 103 ரூபாய், 47 ரூபாய், ரூபாய் 185.62, 95 சதம், ரூபாய் 126.15 எனும் விதத்தில் இருந்தது. அதற்கு முன்னர் இவற்றின் பெறுமதியானது வரிசை கிரமமாக 102 ரூபாய், 95 ரூபாய், ரூபாய் 184.13.94 சதம், ரூபாய் 125.98 என்பதாக இருந்தது. முக்கியமாக டொலரினைப் பொறுத்தவரையில் பாரியளவில் வீழ்ச்சியுறுகிறது. அது எமது பொருளாதாரத்திற்கு பெரும் பிரச்சினையாகும்.

இத்தகைய வீழ்ச்சியினை தடுத்து நிறுத்தி ரூபாயினது பெறுமதியினை அதிகரிக்க முடியும். இதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கையொன்று உள்ளது. அதாவது, ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியினை குறைப்பதே அந்த நடவடிக்கையாகும்.

இறக்குமதியினை குறைத்து ஏற்றுமதியினை அதிகரித்தால் மட்டுமே ரூபாயினது பெறுமதியினை அதிகரித்துக்கொள்ள முடியும். எமது நாட்டவர்கள் வெளிநாட்டுப் பண்டங்களினை கொள்வனவு செய்வது போன்று வெளிநாட்டவர்கள் எமது பண்டங்களை கொள்வனவு



செய்வதில்லை. இறக்குமதியானது அதிகரித்து ஏற்றுமதியானது குறையும்போது ரூபாயினது பெறுமதியானது வீழ்ச்சியடைவதினை தடுக்கமுடியாது.

ஏற்றுமதி இறக்குமதி பற்றி சிந்தித்திருப்பதற்கமையவே இந்தத் தடவை சமர்பிக்கப்படவுள்ள வரவு செலவு திட்டமானது புரட்சிகரமானதாக அமையுமா அல்லவா என்பதனைக் கூற இயலும். உள்நாட்டு உற்பத்திகளை உயர்த்தி ஏற்றுமதியினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரவு செலவு திட்டமொன்று கொண்டு வரப்படுமானால் மட்டுமே ஒரு புரட்சிகரமான வரவு செலவு திட்டமாக அமைய இடமுண்டு. அதில் ஏற்றுமதிக்கான சந்தர்ப்பங்கள் விரிவான முறையில் அலசி ஆராயப்பட வேண்டும்.

உயிரற்ற நடவடிக்கைகளினால் பொருளாதாரத்தினை பலப்படுத்த முடியாது. தொடர்ந்தும் பொதுமக்களை ஏமாற்ற முடியாது என்பதனை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு யதார்த்தத்தினை புரியவைக்க வேண்டும். மக்களுடன் சேர்ந்து அரசியல்வாதிகளும் பட்டியினை இறுக்கி கட்டிக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக அத்தியாவசியமான பண்டங்களைத் தவிர ஏனைய அனைத்துப் பொருட்களினது இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். இறக்குமதியின் மூலமாக நிறைவேற்றிக்கொண்ட அனைத்தையும் உள்நாட்டு உற்பத்திகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இத்தகையதொரு திட்டம் வரவு செலவு திட்டத்தில் பிரேரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இல்லாவிடில் 2005ல் ரூபாயினது பெறுமதியானது மேலும் வீழ்ச்சியுற்று அமெரிக்க டொலரினது பெறுமதியானது 105 ரூபாய் வரையில் உயரக்கூடும். அரசியல் பேச்சுக்களினால் டொலரினது பெறுமதி அதிகரிப்பதனை தடுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணை காலியாகக் காத்திருந்தவர்கள்!

**மறைந்த** ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃபின் அகால மரணம் தொடர்பாக அவர் கட்டி வளர்ந்த கட்சியின் இன்றைய அரசியல் தலைமைகள் மெத்தனமான போக்கில் காலத்தைக் கடத்தி வருகின்றனர். 'மௌத்தான தலைவரின் வாயில் மண் இருப்பவரின் வாயில் சோறு என அது அரசியல் ஆட்டம் போடுகிறது தொடர்ந்தும்...

அஷ்ரஃபின் மரணத்தில் அவரது கட்சி ஆதரவாளர்களுக்கோ அல்லது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கோ ஒரு தெளிவான விடயம் உள்ளது. அது திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட மரணம் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அஷ்ரஃபைக் கொல்வதன் மூலம் தேசிய அரசியலில் முஸ்லிம்கள் கொண்டிருந்த அரசியல் பேரம்பேசும் தன்மையை.

> “உங்களை வளர்த்து தலைவர்களாக்கி, பிரதி அமைச்சர்களாக்கி, பாராளுமன்ற உறுப்பினர்களாக்கிய அஷ்ரஃபின் மரணத்தைக் கண்டறிவதற்கான உருப்படியான அரசியல் கோரிக்கையையாவது கொண்டிருக்க வேண்டாமா என்பதைத்தான் நாம் இவர்களிடம் கேட்கிறோம்.”

பலத்தை அழித்தொழித்து விடலாம் என்பதுடன் சரி பிழைக்கு அப்பாற்பட்டு வடக்குக் கிழக்கில் கட்டி வளர்க்கப்பட்டிருந்த முஸ்லிம்களின் தேசிய அரசியல் இயக்கப் பலத்தை சின்னாபின்னப்படுத்தி, மேலாதிக்க தேசியவாதிகளிடம் முஸ்லிம்களை சரணாகதியடையவைப்பதற்கு அஷ்ரஃபை அழிப்பதுதான் தனக்கு முன்னுள்ள ஒரே வழி என அது கணக்குப் போட்டது.

அஷ்ரஃபின் மரணம் நடந்து முடிந்துவிட்டது. அவர் மரணத்திற்கான காரணத்தையும் – காரிய கர்த்தாக்களையும் அவரை நேசித்த முஸ்லிம் தேச மக்களுக்கு முன் அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு. அவர் பெயரால் – இலங்கை முஸ்லிம்களின் பெயரால் இன்றும் அரசியல் நடாத்தும் அவரின் வழிவந்தோருக்கு முன்னுள்ள ஒரு முக்கியமான கடமையாகும.

இக்கடமையை உடனடியாக அவர்கள் செய்திருக்க வேண்டும். மாறாக அவரின் அரசியல் வழிவந்த இன்றைய தலைமைகள் 'அவர் எப்போது மௌத்தாவார் திண்ணை எப்போது காலியாகும்.' என கணக்குப் போட்டு காத்திருந்தது போல் நிலைமைகள் இருந்ததை வெளிச்சமாக்கி வருகின்றனர். இதனை இத்தலைமைகளே முஸ்லிம்கள் மத்தியில் ஒவ்வொரு கணமும் தங்களது உட்கட்சிப் பதவிப் போராட்டத்தினாலும் அரச அதிகாரத்திலுள்ள மோகத்தாலும் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

தங்களது பதவி ஆசைக் கனவுகளை சாத்தியப்படுத்துவதற்கு அஷ்ரஃபின் மரணத்தை வைத்து மக்களிடம் வந்து அனுதாப வாக்குகளைப் பெற்று பாராளுமன்றக் கதிரைகளை சூடாக்கும் இவர்கள் – தங்களின் எதிர்கால அரசியல் முதலீடு. அரசியல் பலம். அஷ்ரஃபும் அவரது கட்சியும் தான் என தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டு அப்பாவி முஸ்லிம் வாக்காளர்களை ஏமாற்றும் போக்கில். அஷ்ரஃபின் மரணத்திற்கு விசாரணைக் கமிசன் அமையுங்கள் என அன்றைய அரசிடம் மெதுவாகக் கேட்டனர். இதனை ஒரு பெரும் கோாக்கையாக முஸ்லிம் மக்கள் முன் காட்டி இலங்கைவாழ் முஸ்லிம் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டனர். இப்போது நாலு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்: அஷ்ரஃபின் மரணத்திற்கு என்ன நடந்தது என்பது இன்னும் வெளிவரவில்லை. மிகவும் துரதிஷ்டவசமான விடயம்; நான்காவது ஆண்டு நினைவு வைபவத்தில்கூட ஆளும் கட்சியில் இருப்பவர்களோ எதிர்க்கட்சியில் இருப்பவர்களோ இதுபற்றிப் பேசவே இல்லை.

அஷ்ரஃப் மன்றங்களை அமைப்பதன் மூலமும் 'கத்தமுல் குர்ஆன்' ஓதுவதன் மூலமும் இன்றைய முஸ்லிம் தலைமைகள் போகுமிடமெல்லாம் தலைவர் என அழுது புரண்டு கண்ணீர் விடுவதன் மூலமும் பத்திரிகை வாய்ச் சவாடல்கள் மூலமும் மக்கள் மத்தியில் காலத்தை ஓட்டிவிடலாம் எனக் கணக்கு போட்டிருக்கின்றனர்.

அஷ்ரஃபின் மரணம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒரு உண்மையினை மீண்டும் மக்களிடம் சொல்வதல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் வழிவந்தவர்களின் இன்றைய பணி – ஆகக் குறைந்தது முஸ்லிம்களின் அரசியல் தொடர்பாக அவரின் அரசியல் வாரிசுகள் உருப்படியான எவ்வித வேலைத்திட்டங்களையோ. தீர்வினையோ கொண்டிருக்காது விட்டாலும். உங்களை வளர்த்து தலைவர்களாக்கி. பிரதி அமைச்சர்களாக்கி. பாராளுமன்ற உறுப்பினர்களாக்கிய அஷ்ரஃபின் மரணத்தைக் கண்டறிவதற்கான உருப்படியான அரசியல் கோரிக்கையையாவது கொண்டிருக்க வேண்டாமா என்பதைத்தான் நாம் இவர்களிடம் கேட்கிறோம்.

இவர்களால் இத்தனை மந்திரிப்பதவி. இத்தனை அரைமந்திரிப்பதவி. இத்தனை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி. கூட்டுத்தாபன தலைவர் பதவி வேண்டுமென – ஜனாதிபதி மாளிகையிலும் ரணிலிடமும் பேரம்பேச முடியும் என்றால். ஏன் அஷ்ரஃபின் மரணத்தை கண்டறிவதற்கு சிங்கள அரசியல் தலைமைகளை நிர்ப்பந்திக்க முடியாது'? இக்கேள்வி ஒன்றே போதும் இவர்களின் முகமூடிகளை அம்பலப்படுத்த. இது நடந்து விடுமோ

என்கிற அச்சத்தின் காரணமாகத்தான் முஸ்லிம் மக்களைத் திசை திருப்பி – எதுவுமே நடக்காத வெறும் ஏமாற்று வேலைகளால் அஷ்ரஃபின் மரணத்தில் காலத்தைக் கடத்துவது இவர்களின் இன்றைய திட்டமாக உள்ளது. தலைவரின் மரணத்தைக் கிளறாது. அபிவிருத்திப் பணிகளில் மக்களை திசைதிருப்பி விடலாம் என இவர்கள் அனைவரும் திடமாக நம்புகின்றனர். இதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

எப்போதாவது இவர்கள் இவர்களால் பதவிக்கு வரும் அரசாங்கத்திடம் சொல்லி இருக்கிறார்களா நீங்கள்



எமது தலைவரின் மரணத்தில் மௌனமாக இருக்கிறீர்கள் – நாங்கள் உங்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போகிறோம்' என்று. இவர்கள் இப்படிச் சொல்லி. தலைவருக்கு நன்றிக்கடனாவது செய்வார்களா என்று பார்த்தால் – நான்கு வருடங்கள் கடந்தும் முஸ்லிம் மக்களுக்கு பலத்த ஏமாற்றமே மிஞ்சி உள்ளது.

அஷ்ரஃபின் பின் நின்ற லட்சக்கணக்கான இலங்கை முஸ்லிம்கள் மறைந்த தலைவர் அஷ்ரஃபை மறந்து விடவில்லை. ஆனால் இத்தலைமைகளோ அவரை மறந்து வெகுகாலமாயிற்று ஆனால் இன்னும் இவர்கள் அஷ்ரஃபின் பெயரால் முஸ்லிம்களை ஏமாற்றி – கண்ணீர் வடித்து. தலைமைப் பதவிக்காக உட்கட்சி சண்டைபிடித்து. குர்ஆன். 'ஹதீஸையும் விற்று காலம் கடத்தி வருகிறார்கள். இன்னும் பத்து வருடங்களின் பின்பும்... ஒவ்வொரு தேர்தல்களிலும்... அதிகாரத்திற்கு வருவதற்கு இவர்களுக்கு தலைவர் அஷ்ரஃபின் நாமம் தக்க முதலீடாகும். இப்படித்தான் நமது மக்களையும் இவர்கள் கைவிட்டு விடுவார்கள் அதற்கு தலைவரின் மரணமே தக்க சாட்சி.

# முஸ்லிம்களும் போர்க்கால இலக்கியமும்

உண்டது உருமாற. உடுத்தியது உரிந்துவிழ. உறங்கிய மனையும் உனதல்ல என உருண்டோடிச் செல்வதே வாழ்க்கை. இதில் எஞ்சுவது நினைவுகளேயன்றி வேறில்லை இதைத்தான் இலக்கியம் கட்சிதமாகப் பதிவு செய்கிறது. எனவேதான். அது காலத்தின் கண்ணாடியானது. அதனடியாக கடந்த 20 வருட யுத்தசூழலில் இருபேரினங்களின் தாக்குதல்கள் எம்மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள் அவ்வப்போது கவிதையாக. கதையாக ஆவணமாகிக் கொண்டு வருகின்றனவா என்றால் திருப்தியான பதில் எம்மிடமில்லை. எம்மக்கள் பட்டதுயர் குறித்து எத்தனை சிறு கதைகள். எத்தனை நூல்கள். எத்தனை கவிதைகள். வானொலி. மேடை. தொலைக்காட்சி நாடகங்கள். எத்தனை மஸ்அலாக்கள். எத்தனை நாட்டார் பாடல்கள் எழுந்துள்ளன என்று பார்ப்போமானால் மிக மிகக் குறைந்த படைப்புகளே உருவாகியுள்ளன என்பதைக் கண்டுகொள்ளலாம்.

பலநூறு சிறுகதைக்கும், பலநூறு நாவல்களுக்கும். கவிதை. நாடகங்களுக்குமான கருக்களை இப்போர்ச் சூழல் எம்மக்களுக்கு அள்ளி அள்ளித் தந்துள்ளது. எப்போது இவற்றை இலக்கியமாக கலை வடிவமாக மாற்றி ஆவணமாக்கி எதிர்காலச்சந்ததிக்கு விட்டுச் செல்லப் போகிறோம்? அதிஸ்டவசமாக நாம் ஆளுமை மிக்க எழுத்தாளர்களையும். கவிஞர்களையும். கலைஞர்களையும் கொண்டுள்ளோம். ஆனால் அவர்களது பார்வை சமூக அக்கறை இலக்கியத்தின் மீது இன்னும் முழுமையாக விழவில்லை என்பது கவலைதருவதாகும். இது துரதிஸ்டமாகும்.

குறிப்பாக வடமாகாண முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்ட துன்பியல் வாழ்வு இதுவரை குறிப்பிடும்படியாக இலக்கியமாக ஆவணமாக்கப்படவில்லை. அம்மக்களின் வடமாகாண வாழ்வு. வெளியேற்றப்படுதல். பட்டதுயர். இழப்புகள் அகதிவாழ்வு என்பன ஆயிரமாயிரம் இலக்கியமாக்கத்துக்கான அவ்வனுபவங்களாகும். வடமாகாண முஸ்லிம்கள்தான் அவற்றை இலக்கியமாகப் பதிவுசெய்யவேண்டும். வெளியேற்றப்பட்டு வந்த ஒவ்வொருவரும் தம் அனுபவத்தைப் பதிவு செய்தால் பல்நூறு படைப்புகளாகி அவை தொகுக்கப்படலாம்.

இன்று இலக்கியப் பரப்பில் புலம்பெயர் இலக்கியம் தனிக்கூறாக வளர்ந்து வருகிறது. அது கனடாவிலோ. ஜேர்மனியிலோ. பாரிஸிலோ. லண்டனிலோ இருந்துதான் உருவாக வேண்டுமென்றில்லை. இலங்கைக்குள்ளும் உருவாகலாம். தாயக நினைவுகளில் கசிந்துருகுபவர் நம் நாட்டுக்குள்ளேயே உள்ளனர்.



பாத்திமா ஹப்ஸா மூதூர்

எனவே வடமாகாண முஸ்லிம்களும். கிழக்கு மாகாண முஸ்லிம்களும் தம் போர்க்கால அனுபவங்களை இலக்கியமாக்காது விட்டால் வரலாற்றுத் தவறிழைத்து விட்டதாகிவிடும். முஸ்லிம் எழுத்தாளர்களும். கவிஞர்களும். கலைஞர்களும் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்த முன்வரவேண்டும். சமூக நிறுவனங்கள் இவ்விடயம் குறித்து ஆக்கமும். ஊக்கமும் வழங்கவேண்டும். இது எமது காலத்தின் கட்டளை என்பதை நாம் உணர்ந்து செயற்படுவது எம்மீதுள்ள பொறுப்பாகும் என சமூக ஆர்வலர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உறவுகளைப் பிணைத்து வைக்கும் நம்பிக்கை

நம்பிக்கையானது உறவின் பலத்தினைப் பிணைத்து வைக்கும் கணுவைப்போன்றதாகும். நம்பிக்கைக்கு இருவழிப்பாதைகள் உள்ளன. நீங்கள் நம்பிக்கையானவராக இருந்தால் மட்டுமே மற்றவரினது நம்பிக்கையினை நீங்கள் பெறலாம். நீங்களொரு கணவனாக அல்லது மனைவியாக இருக்கலாம் உங்களை நம்ப வேண்டுமானால், உங்களது வாழ்வில் நிகழும் அனைத்து உண்மை விபரங்களையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஆகவே, தம்மை மற்றவர்கள் நம்பவேண்டுமென்று எண்ணுபவர்கள் முதலில் மற்றவர்க்கு நம்பிக்கையானவராகத் திகழ வேண்டும்.

நம்பிக்கையிருந்தால் மட்டுமே திருமண வாழ்வில் ஒருவரையொருவர் நெருங்க முடியும். நம்பிக்கையில்லா



தவிடத்து அனைத்தும் சிதறிப்போகும். நம்பிக்கை என்பது பரிசாகும். அது உங்களால் வழங்கப்படுவதாகும். உங்களுக்கு மற்றவர்களால் வழங்கப்படுவதாகும். அதனை ஒருபோதும் ஓர் கொடுப்பனவாகக் கருத முடியாது.

## விரைவில் கோபமுறும் பெற்றோர்களுக்கு

'நம்மனைவருக்கும் எமது பிள்ளைகள் மீது கோபமேற்படுகிறது. உண்மையில், குழந்தைகள் பிறக்கும் வரை எனக்கும் குழந்தைகள் மீது கோபம் ஏற்படும் என்று நான் அறிந்திருக்கவில்லை' என்று கூறியவர் 'லவ் எண்ட் எங்கர், பெரன்டல் டிலீமா' எனும் நூலினை எழுதிய நான்சி ஸமலின் எனும் நூலாசிரியையாவார். இவர் பெற்றோர் கல்வி தொடர்பான விரிவுரையாளராவார்.

பிள்ளைகளினது நடவடிக்கைகள், செயற்பாடுகளினால் கோபமுறும் பெற்றோர்கள் அதற்காக பொருத்தமற்ற விதத்தில் நடந்து கொள்வது உகந்ததல்ல என்பதனை இன்று அறிந்தே உள்ளனர். ஆனால், தமது வேறு வேறு பிரச்சினைகள் காரணமாக அவர்களை அறியாமலேயே அவர்களிடமிருந்து வெளியேறும் விரக்தி, மன அழுத்தங்கள் காரணமாக பிள்ளைகள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடுமென சிறுவர்கள் நடத்தை பற்றி ஆய்வுகளை நடத்தும் நிபுணர்கள் இன்று கண்டுபிடித்துள்ளனர். ஏதோ ஒரு விதத்தில் இவ்வாறான தவறுகள் உங்களுக்கு ஏற்பட்டிருக்குமாயின், மீண்டும் உங்கள் பிள்ளையினை அருகில் அழைத்து உங்கள் தவறினை திருத்திக்கொள்வதே மிகச் சிறந்த மீள் நடவடிக்கையாகும். 'அந்த நேரத்தில் எனக்கு தலைவலி ஏற்பட்டிருந்தது. அதனால்தான் அவ்வாறு நடந்துகொண்டேன்' என்பன போன்றவற்றினை கூறி பிள்ளை மீது எவ்வித தவறுமில்லை என்பதனை உணர்த்த வேண்டும். இதன் மூலம் பிள்ளை நிம்மதியடைவான்.



உண்மையிலேயே இவ்வாறான நிலைக்கு பெற்றோர் உள்ளாவது அவர்கள் அறியாமலேயே என்றே நான்சி தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார். ஆகவே, கோபப்பட நேரும் காரணங்களுக்கு தமது மனநிலையினை இரையாக்காமல் இருப்பதே சிறந்ததாகும். மனநிலையினை சீர்படுத்திக்கொள்வதற்காக யோகப் பயிற்சி, தியானப் பயிற்சி ஆகியவற்றில் ஈடுபடலாமென நான்சி மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

## குழந்தைகள் அழும்போது உறங்குவது போன்று போலி வேஷம் போடும் தந்தைமார்



தமது குழந்தைகள் இரவில் உறக்கம் களைந்து அழும்போது பிரிட்டனிலுள்ள தந்தைமார்களுள் சரி பாதியினர் உறங்குவதாகவோ அல்லது உறங்குவது போன்று பாசாங்கு செய்வதாகவோ அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின்போது தெரிய வந்துள்ளது.

'மதர் அன்ட் பேபி' எனும் புகழ்பெற்ற சஞ்சிகையின் ஆசிரியர்களினால் 2000 பெற்றோர்களை ஈடுபடுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தந்தைமார் இவ்வாறு தமது பொறுப்பினை தட்டிக்கழிப்பதன் காரணமாக தாய்மார் மனக்குழப்பத்திற்கும், மன அழுத்தத்திற்கும் ஆட்படுவதாக இந்த ஆய்வின் மூலம் மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

தமது குழந்தைகள் இரவில் எழுந்து அழும்போது பிரிட்டனைச் சேர்ந்த 52 சதவீதமான தந்தைமார் எழாமல் இருப்பதாகவும், 22 சதவீதமான தந்தைமார் மனைவி எழுந்ததன் பின்பே எழுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு, தமது குழந்தை விடயத்தில் ஆதரவு கிடைக்காத படியினால் 60 சதவீதமான தாய்மார் தமது கணவர்கள் மீது வெறுப்புக் கொண்டுள்ளனராம். இவ்வாறு உறக்கமின்றி இரவினை கழிக்க வேண்டி ஏற்படுவதனால் 86 சதவீதமான தாய்மார் தாம்பத்தியத்தில் ஈடுபடுவதனைக் காட்டிலும் உறங்குவதற்கே விரும்புகின்றனர் என்றும் இந்த ஆய்வுகளின் மூலம் மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான தொடர்பானது ஓர் குழந்தையின் ஊடாக அதிகரிப்பினும், இந்நிலையானது சிலர் விடயத்தில் தீயதாக அமைகிறது. மேலும், தற்போது அனேகமாக தாயும், தந்தையும் இருவரும் தொழில்களுக்குச் செல்வதனால் அவர்கள் மிகவும் களைப்புக்குள்ளாகின்றனர் என்று 'மதர் அன்ட் பேபி' சஞ்சிகையின் ஆசிரியையான எலினா டல்ரைம்ப்லே கூறுகிறார்.

இந்த ஆய்வின்படி குழந்தைகளுள் பெரும்பாலானவை 05 மாதங்கள் கடந்த பின்பே தொடர்ச்சியாக 07 மணித்தியாலங்கள் உறங்குகின்றன. ஏனைய குழந்தைகள் 28 மாதங்கள் கடந்த பின்பே 07 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக உறங்குகின்றன என்கிறார்.

## ஊடகங்கள் ஆபத்தானவை கவனமாய்க் கையாள வேண்டும்!

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே உள்ளன. ஐ.ம.சு.கூ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கடந்த 05 மாத காலத்துள் செய்த காரியங்கள் அனைத்தையும் மிஞ்சும் வகையில் பொருட்களின் விலையேற்றப் பிரச்சினையானது முன்னோக்கி வந்துள்ளது. தாங்கள் தேர்தலின் போது முன்வைத்த 'நாட்டை முன்னோக்கி' வேலைத்திட்டத்தை ஒரு புறத்தில் வைத்துவிட்டு இப்போது பொருட்களினது விலை ஏற்றப் பிரச்சினைக்கு தீர்வொன்றினைத் தேடுவதற்கு கூட்டமைப்பின் தலைவர்களுக்கு நேர்ந்துள்ளது.

கடந்த ஐ.தே.க அரசாங்கத்தினால் நாடு அழிவுப்பாதையில் சென்று கொண்டிருப்பதனை தடுத்து நிறுத்தி, நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்தவொரு எதிர்காலத்தினை வகுத்துக்கொடுப்பதற்காக தமக்கு அதிகாரத்தினைப் பெற்றுத் தருமாறு வேண்டியே கூட்டமைப்பானது கடந்த தேர்தலின்போது நாட்டு மக்கள்



முன்தோ..றியது. மக்கள் அந்த ..ண்டுகோளினை ஏற்றுக்கொண்டதனைத் தேர்தல் பெறுபேறுகள் உறுதிப்படுத்தின.

தேர்தலுக்கு முன் கூட்டமைப்பின் தலைவர்கள் மேடைகள் தோறும் கூச்சலிட்டவாறு நாட்டினை முன்னோக்கிக்கொண்டு செல்வார்கள் என்றே கூட்டமைப்பு அரசாங்கம் தனது வேலையினை ஆரம்பித்தபோது மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், கூட்டமைப்பு அரசாங்கமானது மக்களினது எதிர்பார்ப்பினை சுக்குநூறாக்கி விட்டது என்றே தினசரி பத்திரிகைகளும், வாராந்த பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், வானொலிகளும் தெரிவிக்கின்றன. தற்போது ஒருசில ஊடகங்களைத் தவிர ஏனைய அனைத்துமே அரசாங்கத்திற்கு எதிராகவே உள்ளன. இந்த நிலை அரசாங்கத்திற்கு உகந்ததையல்ல.

ஆனால், இவற்றினை வஞ்சனையின்றி நோக்குவதற்குப் பெரும்பாலான மக்களால் முடிந்துள்ளது. கடந்த ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் நாட்டினைப் பறிகொடுக்க இருந்த மக்களால் தற்போதைய நிலையினை நடுநிலையுடன் நோக்கும் ஆற்றல் உள்ளது. கடந்த அரசாங்கத்தில் இருந்ததைப் போன்ற, கோடிக்கணக்கான மக்கள் பணத்தினை சுருட்டிக்கொண்டவர்களைப் போன்ற அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் இன்னும் கூட்டமைப்பில் உருவாகவில்லை.

ஊழல், மோசடி, வீண்விரயம், முறையற்ற நடவடிக்கை ஆகியன நிறைந்த கடந்த அரசாங்கத்தின் காவலர்கள் தற்போது பொருட்களின் விலையேற்றம் பற்றிப் பேச முனைந்திருப்பதானது, ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதையாகவே உள்ளது. இவர்கள் செய்வனவற்றினையும், சொல்வனவற்றினையும் பார்க்கும் நாட்டு மக்களுக்கு கூட்டமைப்பு அரசாங்கத்தின் மீது கோபம் ஏற்படுவது இயற்கையானது.

மூன்றாம் உலக நாட்டு மக்களாக நாம் இருப்பினும் இந்த நாட்டுமக்கள் கல்வியறிவுள்ளவர்களாவர். ஆகவே, ஏனையோர் விரிக்கும் புத்தகத்திற்குப் பதிலாக தாங்களே புத்தகத்தினை புரட்டிப் பார்க்க வல்லவர்களாவர். மேலும், ஏனையோரினது விதியினை நிர்ணயிக்கவும் வல்லவர்களாவர். இப்போது மக்களை காப்பாற்ற வேண்டிய தலைமைத்துவமொன்று மட்டுமே தேவையானதாக உள்ளது. இதனையிட்டு ஐ.தே.க மட்டுமன்றி கூட்டமைப்பின் எடுபிடிகளும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்!

சதக்கத்துல்லா.
மாத்தறை

படிப்பாளிகள் கவனத்திற்கு!
1-48 இதழ்கள்
(பைண்டிங் தொகுப்பு) தேவைப்படுவோர்,
ரூபா. 750/-க்கான காசுக்கட்டளை/
காசோலை அனுப்பிப்
பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஏனென்றால்... நீ முஸ்லிம்

"உம்மம்மாாா...."
"என்ன ராசா"
"நாம யாழ்ப்பாணமாமே"
"ஆமா... யாருசொன்னவ"

வடக்கில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீள்குடியேறவேண்டும். நமது வாழிடங்கள். வணக்கத்தலங்கள் புனரமைக்கப்பட வேண்டும். சூறையாடப்பட்ட அச்சொத்துக்களுக்கு நட்டஈடு தரப்படல்வேண்டும். அதற்காக அரசியல்வாதிகளின் பொய்களை நம்பி காலத்தை வீணாக்காமல் மக்களாகிய நாமே வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அகதி முகாம் முன்றலில் கூடிப்பேசியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுவனுக்கு அப்போதுதான் தான் கடந்த 14 வருடங்களாக அகதிமுகாமில் பிறந்து வளர்ந்திருக்கிறேன். என்பது புரியத்தொடங்கியதும் தன் உம்மம்மாவிடம் ஓடிவந்தான்.

அப்போது ஆசியத்தும்மாவின் பேரன் தன் மூத்த மகளின் வயிற்றில் எட்டுமாதச் சிசுவாக இருந்தான். இரண்டு மணிநேரத்துக்குள் குடா நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றார்கள். முஸ்லிம் என்பதால் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். பின் எதுக்குத்தான் தமிழ்பேசும் சகோதர இனம் என்று சொல்றாங்களோ தெரியாது.

'அனைத்து முஸ்லிம் ஆண்பெண் எல்லோரும் உஸ்மானியாக் கல்லூரியின் பின்புற முள்ள மைதானத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களோடு சினேகபூர்வமாகப் பேசவிரும்புகிறோம்....." துப்பாக்கிகள் சகிதம் வாகனத்தில் வந்து அறிவிப்புச் செய்தார்கள். வீட்டுக்கொருவரை குஞ்சு குறுமான்களுடன் இருக்கவைத்துவிட்டு ஏனையோர் போனார்கள். திரும்பிப்பார்த்தபோது வீட்டுக்குக் காவலுக்காக இருந்தவர்களும். தொழச்சென்றவர்களும். வியாபாரத்தில் ஈடுபட்டவர்களும் புலிகளால் விரட்டி வரப்பட்டனர். கலவரம் நிறைந்த முகத்துடன் மைதானம் நிரம்பியது.

என்னவேண்டுமானாலும் செய்துவிடமுடியும் என்று அகங்காரத்துடன் அடிமைகளை பார்க்கும் தோரணையில் ஆஞ்சநேயர் என்ற இளம்பரிதி எழுந்து நின்றார். "இதோ.. இப்படியே நடந்து வடக்கைவிட்டு வெளியேறனும். தமிழ்பேசும் சகோதர இனம் எண்ட படியால் ஒரு... இரண்டுமணிநேர அவகாசம் தரலாம். உடுத்தியிருக்கிற உடுப்பும். நீங்களுமாக உடன் புறப்படுங்கோ. இது தலைவரின்ட கட்டள" சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

ஆசியத்தும்மாவும், கர்ப்பிணியான மகளும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொண்டு அழுதனர். மைதானமே 'ஹோ....' வென மரண ஓலம் எழுப்பியது. திடீரென ஓலம் அடங்கியது. தேர்ந்தெடுத்து முப்பத்தைந்து பேரளவில் கப்பம் பறிப்பதற்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளார்களாம் என்றதும் முடிந்தவரையில் தம்வீடுகளுக்கு விரைந்தனர். கையில் அகப்பட்டதை எடுப்பதற்கும் மகிழ்ந்து குலாவி நூற்றாண்டுகாலமாக வாழ்ந்த வீடுகளைத் தொட்டு முத்தமிடுவதற்குமாக ஓடினார்கள். பறிகொடுக்கவிருக்கும் சொத்துக்களைப் பார்த்ததும் கண்கள் குளமாயின. ஒவ்வொரு வீட்டுக்கு முன்பு ஒவ்வொரு புலி காவலிருந்தனர். "நில்லுங்கடி.... வெளியேறச் சொன்னது விளங்கேல்லியே.. இப்ப என்ன நேரம்...." கேட்டுக்கொண்டே தள்ளிக் கொண்டுவந்தது. "பிள்ள கொஞ்சம் தயவு காட்டம்மா குறஞ்சது காணி உறுதி. பிறப்புப்பதிவுத் துண்டுகளையாவது எடுத்துக்கிறோம்...." "அதெல்லாம் கொண்டு போய் என்ன செய்யப்போறியள். இதெல்லாம் எங்கள் சொத்து இதோ உறுதியெண்டு சொல்லப்போறியளோ வெளிக்கிடும்" "இந்தக் கோழி. புறா வெல்லாம் கூட்டுல இருக்குது அவையளத் தொறந்து விட்டுடுறன் மாடுகள் கட்டிக்கிடக்குது" "இனி அதையெல்லாம் என்னெங்கிறத நாங்கள் பாப்பம் தானே உமக்கேன் கவல... கனகத கதையாமல் வெளிக்கிடும். இவ்வளவு காலம் வாழவிட்டதே பெரியவிசயம்" கைதுப்பாக்கியைத் தொட்டது. அதற்குமேல் அங்கு நில்லாமல் மருந்து மாத்திரைகளையும் விட்டுவிட்டு கர்ப்பிணிமார்களுடன் ஆசியத்தும்மாவின் குடும்பமும் வெளியேற்றப்பட்டது. ஒவ்வொரு முஸ்லிம் குடும்பமும் இவ்வாறே வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

வியாபாரம் செய்து கொண்டிருந்த வியாபாரி கடையை என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருந்தபோது. "காக்கா.... வெளியவாடா" கூப்பிட்டது பதினைந்து வயதுப் புலியென்றாலும் கையில் துப்பாக்கி இருந்தது. நடுங்கிக்கொண்டு வந்தவரின் பக்கெட்டில் கைவிட்டுக் காசுக்கட்டை எடுத்து ஐம்பது ரூபாவை உருவி பக்கெட்டில் வைத்து "உனக்கு 50 ரூபாபோதும் நடயக்கட்டுடா தொப்பி பிரட்டி" என்றது. வியர்வை சிந்தி உழைத்து உருவாக்கிய கடையை அப்படியே விட்டுவிட்டுச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட பலர் அழுதனர். மனம் உடைந்தழுது அவ்விடத்திலே குந்தினர். கண்முன்னே கடைச்சாமான்கள் ஏற்றப்படுவதைத் திரும்பித் திரும்பிப் பார்த்து பலர் சென்றனர். இப்படி ஓர் அநீதி, கொடூரம்...

ஆண்கள். பெண்கள். கர்ப்பிணிகள், குழந்தைகள். முதியோர். நோயாளிகள் என ஒரு சமூகம். முஸ்லிம் என்பதால் விரட்டப்பட்டு கண்ணீரும் கம்பலையுமாகச் செல்லும் காட்சியைக்



கண்டு வானம் அழுதது. மழைபொழிந்து தன் வருத்தத்தை தெரிவித்தது. தனது முந்தானைத் தலைப்பால் தன் கர்ப்பிணி மகளைப் போர்த்திக்கொண்டு அந்த வரலாற்றின் வடுவாகிவிட்ட பயணத்தில். ஆசியத்தும்மாவும் சேர்ந்து நடந்தாள். தூரத்தில் ஒரு சலசலப்புக்கேட்டது. அங்கே ஒரு சோதனைச்சாவடியை உருவாக்கி அனைவரையும் புலிகள் சோதனை செய்து கொண்டிருந்தனர். "என்ன காக்கா.... கைக்குள்ள எதயோ மறச்சி வெச்சிரிக்காப்பல...." முதியவர் நடுக்கத்துடன் "பெனடோல்தம்பி" "எங்களுக்கும் காய்ச்சல் வெரும்" என்று ஐந்து பெனடோலை எடுத்துக்கொண்டு "போய்வா தொப்பி பிரட்டி யில்ல போ" என்று அப்பையன் முதியவரின் தொப்பியைத் தொட்டுச் சொன்னான். இவர்கள் சோதனை செய்யும் அழகை பெரியவர்கள் வாகனங்களில் இருந்து ரசித்தனர். ஆசியத்தும்மாவும் மகளும் அப்பம் சுட்டு வாங்கிய தம் காதணிகளை கடைசியாக ஒரு தடவை தொட்டுப்பார்த்துக்கொண்டனர். "நடந்துவாங்கடி" "கர்ப்பிணியா ரிக்காம்மா" "தெரியல்லியே.... ம்ம் களட்டி வை" வைத்துவிட்டு நகர்ந்தனர். அடுத்து ஒரு பெண். அவளிடம் உருவுவதற்கு எதுவும் இல்லாதபடியால் "அதேன் ரெண்டு பாவாட கட்டிருக்கிற நீ ஒண்டக் களட்டி வச்சிட்டுப்போ" என்றது பெண்புலி.. இப்படியெல்லாம் மனித வரலாற்றில் நடக்குமா சொன்னால் நம்புவார்களா. நம்பியே தீரவேண்டும் அது நடந்தேறிவிட்டது.

"என்ன காக்கா சொத்து எல்லாத்தயும் சொப்பின் பேக்குல கொண்டு போறியோ" "இல்லதம்பி .... பாண்...." அவர் நகர முற்பட படாரென பேக்கைப் பறித்து பானை வெளியிலெடுத்து பிய்த்தான் தங்கச் சங்கிலிகள் இரண்டு விழுந்தன. "கள்ளக்காக்க கணக்குவிர்ரயடா நீ" கழுத்தில் பிடித்துக்கொண்டான். திமிறிக்கொண்டு "மன்...மன்...னிச்சிக்குங்கராசா..." என்றதும் விட்டான். தனது நகையை எடுத்துச் சென்றது. அவர்களுக்கு தேசத்துரோகமாகப்பட்டிருக்கிறது போல என எண்ணிக்கொண்டு நின்றவரை "நடடா தொப்பி பிரட்டி" என விரட்டினான். அங்கே வியர்வையில் விளைந்த நகைகள் வாளிவாளியாக நிரம்பிக்கொண்டிருந்தது. 'தொப்பி பிரட்டியாம்' என்று மனதுள் வெந்து கொண்டு எத்தனை தடவை ராணுவத்திடமிருந்து இநதத் தொப்பி தப்பவைத்திருக்கும். எத்தனை தடவை பர்தாவுக்குள் பதுக்கிவைத்திருப்பா. இது என்மகன். என்மகள் என்று எத்தனை தடவை ஆமியை எதிர்த்திருப்போம் என எண்ணிக்கொண்டு மக்கள் திசை தெரியாமல் நடந்தனர். கப்பமெண்டும். கறிசோறெண்டும் ஆக்கிக் காய்ச்சிக் கொடுத்ததற்குப் பகரமாக உடுத்திருந்த பாவாடையையும் களட்டாமல் விட்ட பெருந்தன்மையை எண்ணிவியத்து கொண்டு பெண்கள் நடந்தனர்.

ஆண்டாண்டு காலமாக அண்ணன் தம்பியாய் பிட்டும் தேங்காய் பூவுமாய் தமிழ் பேசும் மக்களாய் வாழ்ந்தவர்கள் முஸ்லிம் என்பதால் அனைத்தும் சூறையாடப்பட்டு உடுத்த உடையுடன் அதோபோகிறார்கள் துரத்தியடிக்கப்பட்டு.....

மகிழ்ந்து குலாவி வாழ்ந்த வீடு
மாவீரருக்குப் பரிசாச்சு விழுந்து வணங்கி
எழுந்த பள்ளி பழித்துரைத்து இடிச்சாச்சு
வியர்வை சிந்தி உழைத்த செல்வம்
விரட்டிவிட்டுப் பறிச்சாச்சு
துயர் நிறைந்து இதயம் நொந்து வழிந்த
கண்ணீருக்கு பதில் என்னாச்சு....

"பதினைந்து வருசமாச்சு யா அல்லாஹ்..."
சுட்டெரிக்கும் பெரு நெருப்பாக
பெருமூச்செறிந்த ஆசியத்தும்மாவின்
கண்களில் இருந்து கண்ணீர் பொங்கி
வழிந்தது.....

---




## வாழ்க்கையினை குறிக்கோளினை நோக்கி நடத்திச் செல்லுங்கள்!

இப்போது நீங்கள் பாடசாலையில் படித்துக் கொண்டிருப்பீர்கள். ஒருவர் வாழ்வில் உயர் ஸ்தானத்தினை அடைவதற்கும். மற்றவர் கல்வியில் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் ஏதேனுமோர் காரணம் இருக்க வேண்டும். ஒரே வகுப்பில் ஒன்றாக அமர்ந்திருந்து கல்வியினைக் கற்ற மாணவ - மாணவியர் எதிர்காலத்தில் பல்வேறு நிலைகளில் தமது வாழ்வினை அமைத்துக் கொண்டதற்கு என்ன காரணம்?

நாம் ஒரு விடயத்தினை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். அதாவது, எமது வாழ்விற்கு ஓர் குறிக்கோள் உள்ளது. அனைவருக்கும், அனைத்து நிகழ்வுகளுக்கும் ஓர் குறிக்கோள் உள்ளது. குறிக்கோளற்ற மனிதனால் ஒருபோதும் வாழ்வினில் வெற்றியினை ஈட்டிக்கொள்ள முடியாது. குறிக்கோளொன்று இல்லாவிடில் வாழ்வின் இடைநடுவில் நாம் சிக்கித் திண்டாட வேண்டி வரும். உரிய குறிக்கோளுடன் செயல்படுபவர்கள் உங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருப்பார்கள்.



அவ்வாறான நிலையில் நீங்கள் அவர்களை வெறுக்க வேண்டாம். அவர்களைப் பார்த்து பொறாமைப்படாதீர்கள். அதற்குப் பகரமாக, உங்களது வாழ்வினை ஓர் குறிக்கோளினை நோக்கி நடத்திச் செல்ல வேண்டும். அதற்காக வேண்டி மகிழ்ச்சியுடன் உங்கள் காரியங்களில் ஈடுபாட்டுடன். அதிக அக்கறை எடுத்து செயலாற்றுங்கள் வெற்றி பெறுவது உறுதி!

### வெற்றி பெற்றவர்கள்!

புதிர்ப்போட்டி 02

**ஐ. ஸகாப் ஹுசைன்**
தி/அல்-ஹம்ரா மகா வித்தியாலயம்.
தோப்பூர்.

**எம்.சீ. சவ்றா**
முக்ாயாவ முஸ்லிம் வித்தியாலயம்
முக்ாயாவ.

**எஸ். சிபா**
கல்/அல்-அக்ஸா தேசிய
பாடசாலை, கல்பிட்டி

வர்ணம் தீட்டுங்கள்
போட்டி -03

**எம்.எப். முகம்மட் அம்ஜத்**
கொ/தெ.தமிழ் வித்தியாலயம்,
தெஹிவள.

வெற்றிபெற்றவருக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்

## ஆசானுக்கொரு வாழ்த்து

உலகெங்கும் இதழ் இதழாக
இந்தப் பூக்கள் மலர்ந்தபோது
பள்ளி வாழ்வு இதில்
தளிர்விட்டது.
மகிழ்ச்சியாய்...
பயமாய்....
மிரட்சியாய்...
அன்பு ஆசானின் கைகளிலே
எம் வளர்ச்சிகள்
ஆகாயத்தையும்
அம்புலியையும் - பிரித்துப்பார்க்கத்
தெரியா வயதில்
எம்மைப் பக்குவமாய்ப்
பக்குவப்படுத்திய
உயர்ந்தோரே...!
உம்மை வாழ்த்த வந்த
இப்பொன்னாளில்
வார்த்தைகள் போதவில்லை
இச்சின்னவளுக்கு!
ஆனாலும், ஆசானே!
வாழ்த்துவேன் உங்களை
வாழ்க்கையின் இறுதி மூச்சுவரை.
கல்லூரியின் கர்ப்பத்தில்
அறிவுக்குழந்தைகளைப்
பிரசவிக்க
இரவுகளைப் பகலாக்கி
பகற்களையே தியாகம் பண்ணி
உம் - அழ்கிய
அறிவு முத்துக்களால்
அறிவுச்சிற்பமாய்
மாணவரெம்மை
வளர்க்கின்றீரே...!
வாழ்க ஆசானே!
வாழ்க!
விழித்துப்பார்க்கும்
விடியலெல்லாம் - உங்களுக்கு
நலமாய் இருக்க
வாழ்த்துகிறேன்.
வாழ்க.
நோயேதும் நேராத வாழ்வு
வாழ வாழ்த்துகிறேன்
வாழ்க.
உயிரின் இறுதிவரை
உங்கள் உணர்வுகள்
மதிக்கப்படவேண்டுமென
வாழ்த்துகிறேன்
ஆசானே!
வாழ்க நீங்கள் வாழ்க.

நுஸ்கா நஸுர்தீன்
தல்கஸ்பிடிய மு.ம.வி அரனாயக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல் நிர்வாகிகள் இப்படித்தான் இருக்க வேண்டும்!

எம்.எம்.எம். அன்ஸார் (பஹ்ஜி)

அல்லாஹ்வின் புனிதமான இல்லங்களை நிர்வாகம் செய்பவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அல்லாஹுத்தஆலா தெளிவாக அவனது திருமறையில் விபரமாக கூறுகிறான்.

"அல்லாஹ்வின் இறை இல்லங்களை பரிபாலனம் செய்பவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஈமான் கொண்டு தொழுகையையும் நிலைநிறுத்தி, ஸக்காத்தையும் கொடுத்து, படைத்த நாயனைத்தவிர வேறு யாருக்கும் பயப்பட கூடாது" (தவ்பா) 18

ஒரு முஸ்லிமுக்கு உலகத்தில் பல கடமைகள் இருக்கலாம் அவற்றில் பரிசுத்த இஸ்லாம் பள்ளிவாசல்களை நல்ல முறையில் நிர்வாகம் செய்வதையும் ஒரு கடமையாக இஸ்லாம் கருதுகிறது. ஆனால் எமது சமூகத்தில் பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்வதில் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுபவர்கள் குறைவாகவே காணப்படுகிறார்கள். தகுதியற்றவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, இவர்களின் அறியாமையினால் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தி விடுகிறார்கள். மேலும் பள்ளிக்கு சொந்தமான காணி பூமிகளை அபகரித்துக் கொள்கிறார்கள். இந்த சீர்கெட்ட நிலமைகள் சரிவர வேண்டுமானால் சமூகத்திலிருந்து நேர்மையானவர்கள் பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்ய முன்வர வேண்டும்.

அரசியல் கோபம், கட்சிப் பிரிவு போன்றவற்றோடு தனிப்பட்ட குரோதம் காரணமாக எமது சமூகத்தில் உள்ள மக்கள் பள்ளிவாசல்களோடு கோபித்து தனது மஹல்லாவுக்கு வெளியே சென்று தொழுது வரக்கூடிய நிலையை நாம் காண்கிறோம்.



பள்ளி நிர்வாகிகள் குர்ஆன் ஹதீஸ்களுக்கு கட்டுப்பட்டு ஊர் நிலைமைகளை சீர்படுத்த சில கட்டுப்பாடுகளை உருவாக்கலாம் இதற்கு ஊர் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ் குர்ஆனில் கீழ்வருமாறு கூறுகிறான்.

"ஈமான் கொண்ட மனிதர்களே அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் உங்களில் அதிகாரம் கொடுக்கப்பட்டவர்களுக்கும் கட்டுப்படுங்கள்"

எனவே நிர்வாகத்துக்கு தகுதியுடையவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மேலே உள்ள ஆயத்திலிருநது விளங்கும் விடயங்களோடு இவைகளும் அடங்கும் என இமாம்கள் கூறுகிறார்கள்.

1. மார்க்க அறிவுடையவர்கள்
2. இஸ்லாமிய கடமைகளை நேரம் தவறாது நிறைவு செய்பவர்கள்
3. பெரும்பாலும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல்
4. உலக சம்பந்தப்பட்ட அறிவும் தெரிந்திருத்தல் நன்று
5. பாவகாரியங்களில் இருந்து தானும் தனது குடும்பமும் பாதுகாப்பாக இருத்தல்
6. மார்க்கம் அனுமதிக்காத எந்த விடயமாக இருந்தாலும் நடக்கவிடாது இருத்தல்
7. எவரிடமும் சத்தியத்தை எடுத்துக்கூறும் ஆளுமை

போன்றவைகளோடு, பள்ளிவாசல் சொத்துக்களை பாதுகாத்தலோடு, அவற்றை சூரையாடுவதைவிட்டும் தவிர்ந்து கொள்ளல். முஅத்தின் சரியான முறையில் செயல்படுகிறாரா? இமாம் நேரத்திற்கு மஸ்ஜிதுக்கு வருகிறாரா என்பவற்றையும் இந்த நிருவாகமே கவனிக்க வேண்டும்.

இவைகளோடு ஊரில் நடைபெறுகின்ற மார்க்கத்துக்கு முரணான விடயங்களையும், அவற்றுக்கான இஸ்லாமிய தண்டனைகளையும் வழங்கி குற்றமிழைப்பவர்களை எவ்வாறான தகுதிபெற்றவர்களாயினும் வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும். ஏனெனில், இவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புப்பற்றி மறுமை நாளில் இவர்களிடம் விசாரிக்கப்படும்.

எனவே இவர்கள் அனைத்தையும் கவனத்திற்கொண்டு சரியான நிர்வாகிகளாக, அமல்செய்யாதோரை சந்தித்து அமலுக்காக அழைத்துச் செயற்படுவார்களேயானால் அந்த பிரதேசம் இஸ்லாம் எதிர்பார்த்த ஒரு இஸ்லாமிய சூழலை உருவாக்க முடியும். அப்படியான சூழல் உருவாகுமானால் தான் இறைவனின் கிருபையும் இம்மக்களுக்கு எட்டும்.

## அஹதிய்யா பாடசாலை பரீட்சை பெறுபேறுகள் எங்கே?

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் அஹதிய்யா பாடசாலை முஸ்லிம் மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையில் எமதுாரைச் சேர்ந்த மாணவர்கள் பலரும் பங்குபற்றியுள்ளனர். ஆனால் கடந்த 2003ல் நடைபெற்ற இப்பரீட்சை முடிவுகள் பரீட்சை நடைபெற்று சுமார் ஒரு வருட காலமாகியும் இன்னும் மாணவர்களுக்கு கிடைக்கவில்லை. இதற்கு முன்னர் 2002ல் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் கிடைக்கப்பெற்றும் அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களும் கிடைக்கவில்லை. இதனால் தற்பொழுது நிந்தவூர் அஹதிய்யா பாடசாலை மாணவர்கள் அஹதிய்யா கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் குறைந்து வருவதாகவும், அதிக கவனம் செலுத்துவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையைத் தடுக்க தகுந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அடுத்த பரீட்சை 2005 பெப்ரவரியில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வியாபாரத்தை நம்பி இருந்த சமூகம் இன்று கல்வியை நம்பியிருக்க வேண்டியுள்ளது!

- மாவனல்லை சாஹிராவில் பேராசிரியர் நுஃமான்.

மாவனல்லை சாஹிரா இன்று நாடளாவிய ரீதியில் பேசப்படும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். மேற்கண்டவாறு மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலையில் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து இம்முறை பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்ற 15 மாணவர்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியர்களையும் பாராட்டும் நிகழ்வொன்று அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



பாடசாலை அதிபர் எம்.ஸீ. நிஸார்தீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்தும் அவர் உரையாற்றும்போது இவ்வாறானதோர் விழாவை சிறப்பிக்க பெற்றார், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளதையும், எல்லோரும் கலந்துகொள்கின்றதைப் பார்க்கும்போதும் மகிழ்ச்சியாய் இருக்கின்றது. இவ்வாறான ஏற்பாடுகள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும். ஒரு காலத்தில் வியாபாரத்தையே நம்பியிருந்த முஸ்லிம்கள் இன்று கல்வித் துறையில் காட்டும் ஆர்வம் மெச்சத்தக்கது. கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டிய காலம் இன்று அவசியமாக உள்ளது. மாறிவரும் இன்றைய உலக நடப்புக்களை அவதானிக்கும்போது, போட்டா போட்டிகள் நிறைந்து காணும் இன்றைய காலகட்டத்தில் வியாபாரங்களைக்கூட நல்ல கல்வியறிவின்றி மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனை இன்றைய முஸ்லிம்கள் உணர்ந்துள்ளனர் என்கிறார் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்.

மாவனல்ல செய்தியாளர்


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்!

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர, சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

பணத்தை காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசோலை அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication and Printers எனக் குறிப்பிடவும். காசுக் கட்டளையாக இருப்பின் Muslim Kural Publication and Printers Slave Island Post office என அவசியமாகக் குறிப்பிடவும்.

சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| 3 மாதங்கள் | - (12 இதழ்கள்) | 250/- |
| 6 மாதங்கள் | - (24 இதழ்கள்) | 500/- |
| 1 வருடம் | - (48 இதழ்கள்) | 1000/- |

தொடர்புகளுக்கு:
119/15, Viviyan Gunawardena,
Mawatha (Kettampahuwa Road)
Wellampitiya.
Phone :071-4105877

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)


## மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அல்லலுறும் முஸ்லிம் அகதிகள்!

திருகோணமலை லவ்லேன் அகதி முகாமுக்கான மின்சாரம், இலங்கை மின்சார சபையினால் துண்டிக்கப் பட்டுள்ளது. இதற்குச் செலுத்த வேண்டிய இலட்சக்கணக்கான ரூபாய் மின் கட்டணம் திருகோணமலைப் பட்டினமும், சூழலும் பிரதேச செயலகத் தினால் செலுத்தப்படாமையே இத்துண் டிப்புக்குக் காரணம் என மின்சார சபையினர் கூறியுள்ளனர். தங்களுடைய கஷ்ட நிலைமைகளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அது கருத்தி லெடுக்கப்படவில்லை என்றும்; கைக்குழந்தைகள், சிறு பிள்ளைகள், பெண்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் மிகுந்த சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உட்படுவதாகவும் முகாம் மக்கள் விசனத்துடன் கூறுகின்றனர். எதிர்வரும் ரமழான் மாதம் நோன்பு நோற்க வேண்டிய நிலையில், மீள மின் இணைப்பை பெற்றுத்தர எவராவது முன்வரமாட்டார்களா? என்றும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

— மு.மு.மு. முஹைஸ்
திருகோணமலை செய்தியாளர்

## கண்டி மாவட்ட முஸ்லிம் சமாதான நீதவான்களின் பேரவை உதயம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் சமாதான நீதவான்களின் பேரவையின் கண்டி மாவட்டக்கிளை அண்மையில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டபோது கண்டி மாவட்ட நிருவாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் அல்ஹாஜ் பீ.ஏ.சி.எம். றமீம், உபதலைவர்கள் அல்ஹாஜ் என்.எம். இஷாக், அல்ஹாஜ் ஏ.எச்.எம். றவுப், செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். அப்துல் காதர், உதவிச்செயலாளர்கள் அல்ஹாஜ் என்.எம். நஸார், மௌலவி எம்.எஸ்.எம். மன்சூர், தனாதிகாரி அல்ஹாஜ் ரிஸ்வி சாலிஹ் இது தவிர பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமைப்பாளர்களாக பின்வருவோர் நியமனம் செய்யப்பட்டனர். அக்குறணை ஏ.எப்.எம். லாஹிர், தும்மன ஏ.ஆர்.எம். பைரூஸ், மெததும்பர எம்.எச்.எம். சகரியா, தெல்தொட ஏ.எம். ஹனிபா, பாத்ததும்பர எஸ்.எம். ஷாபி, யடிநுவர எம்.எஸ்.எஸ். முஹம்மட், கண்டி கங்கவட்ட கோரள எம்.ஐ.எம். சனீப், உடுநுவர ஐ.எல். அப்துல் மஜீட், உடபளாத கம்பளை எஸ்.எம். முன்சீர், பூஜாபிடிய மௌலவி எஸ்.எம். இஸ்மாயில் அத்தோடு ஹாரிஸ்பத்துவ, கங்க இஹல கோரள, குண்டசாலை, மினிபே, பன்விலை, பஸ்பாகே கோரள, பாத்தஹேவாஹெட்ட, தொழுவ, ஹதரலியத்த, உடதும்பர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விரைவில் அமைப்பாளர்களை நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டதுடன் கண்டி மாவட்டத்தில் வசிக்கும் சகல முஸ்லிம் சமாதான நீதவான்களின் விபரங்களைத் திரட்டவும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே கண்டி மாவட்டத்தில் வசிக்கும் சகல முஸ்லிம் சமாதான நீதவான்களும் தத்தமது விபரங்களை அல்ஹாஜ் எம்.எம். அப்துல் காதர்-(JP), 24/38A வீரகோன் கார்டன், கண்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடுக்களின் வரலாறு!

முகம்மதலி ஜின்னாஹ்


**வ**டக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள், ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையைத் துலாம்பரமாக எடுத்துக்காட்ட அன்று முதல் இன்று, நாளைவரை எல்லோரும் கூறும் உவமை 'பிட்டும் தேங்காய்ப்பூவும் போல' என்பதாகும். பிட்டும் தேங்காய்ப்பூவுமாய் இணைந்திருந்தே தீரவேண்டியதன் யதார்த்தத்தை விளங்கியோ விளங்க விரும்பாமலோ தமிழ் முஸ்லிம் சகோதர இனங்கள் பிரிந்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்ட கசப்பான வடுக்கள் ஒரு வரலாறாகவே உருவெடுத்து வருகிறது.

அத்தகைய கறைபடிந்த வரலாற்றின் ஒரு கூறாக வடக்கு தாயகத்தில் இருந்து புலிகளால் முஸ்லிம்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதை யாராலும் மறக்கமுடியாது. இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் 'வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர்' என்றவுடன் அனைவரது கண்முன்னே 1990 ஒக்டோபரில் புலிகளால் பலாத்காரமாக வடக்கு முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட சம்பவமே வந்து நிற்கும். ஆயினும் அதுவல்ல தொடக்கப்புள்ளி என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

**வடமாகாண முஸ்லிம்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதன்**

**கட்டம் - I**

1564ம் ஆண்டு யாழ்ப்பாணத்தையாண்ட கனகசூரிய சிங்கையாரியனின் காலத்தில்தான் யாழ் முஸ்லிம்கள் முதன் முதலாக பலாத்காரமாக யாவுகர்சேரியில் (இன்றைய சாவகச்சேரி) இருந்து வெளியேற்றப்பட்டார்கள, தொடர்ந்து நாவாந்துறை, நல்லூர் ஆகிய பகுதிகளில் பரந்து வாழ்ந்த முஸ்லிம்களும் அடித்து விரட்டப்பட்டனர். இச்செய்திகளை 'யாழ்ப்பாண சரித்திரம்' (பக். 89) என்ற நூலில் காணலாம்.



யாழ்பாண சோனகத் தெருவில் அமைந்திருந்த பள்ளிவாசல் சிதைக்கப்பட்ட தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

**கட்டம் - II**

வடமாகாணத்தின் அலுப்பாந்தீவு, பறங்கித்தெரு, சின்னக்கடை, கோட்டை, நயினார் தீவு, மண்கும்பான், மண்டைதீவு, காரைதீவு, மீசாலை, சாவகச்சேரி, கொடிகாமம், நாவாந்துறை, நல்லூர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, சோனகர் வடலி, சோனகர் வெளி, சோனகரடைப்பு போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் இருந்து 1614.05.04 அன்று போர்த்துக்கேயரால் முஸ்லிம்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். வெளியேறிய கையோடு யாழப்பாணத்தாயகத்தின் முதல் பள்ளிவாசலும் உடைத்தழிக்கப்பட்டது. ஒரே தடவையில் ஆயிரம் பேர் அல்லாஹ்வை தொழக்கூடிய பள்ளிவாசலின் அத்திவாரத்தின் மீதுதான் இன்றைய யாழ் சின்னக்கடையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் புதுமைமாதா (Our Lady Miracles) ஆலயம் கட்டப்பட்டது.

**கட்டம் - III**

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இந்து, முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களை மக்கள் புனருத்தாரனம் செய்தபோது, அக்காலத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த நல்லூர் பிரதேசத்தில் இருந்த கந்த சுவாமிக் கோயிலை இந்துக்கள் விஸ்தரிக்க முற்பட்டனர். இவ்விஸ்தரிப்புக்கு முஸ்லிம்களின் வாழிடமும் பள்ளிவாசல்களும் தடையாக இருப்பதாக உணர்ந்ததால் முஸ்லிம்களை பலாத்காரமாக வெளியேற்றவும், பள்ளிவாசல்களை இடிக்கவும் திட்டமிட்டனர். எனவே முஸ்லிம்கள் அசூசையாகக் கருதும் பன்றியைக்கொன்று அதன் உறுப்புக்களை முஸ்லிம்களின் குடிநீர்க் கிணறுகளிலும், பள்ளிவாசலிலும் போட்டு முஸ்லிம்களை உண்ணவோ பருகவோ, வழிபடவோ முடியாத நிர்க்கதிக்கு உள்ளாக்கினர். இத்தகைய மனித நாகரிகத்துக்கு முரணாண காரியத்தைச் செய்து முஸ்லிம்களை விரட்டினர். பின்பு முஸ்லிம்களின் குடியிருப்புகளைத் தமதாக்கிக்கொண்டு பள்ளிவாசல்களை இடித்துத்தள்ளினர். அவ்வாறு இடித்தவை போக எஞ்சிய அடையாளமாக மகான் முகம்மது இப்ராஹீம் அவர்களின் சியாரம், நல்லூர் கந்தசுவாமிக் கோவிலின் மூலஸ்தானத்திற்கு பின்பகுதியில் இன்றும் காட்சி தருகிறது.

**கட்டம் - IV**

1915ம் ஆண்டு முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்காக அநாகரிக தர்மபால என்பவரால் முஸ்லிம் சிங்களக் கலவரம் உருவாக்கப்பட்டது. இதனால் பல சிங்களக்காடையர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். இவர்களை விடுதலை செய்வதற்காக யாழ். இந்துவேளாள பிரதிநிதியான பொன்னம்பலம் ராமனாதன் இங்கிலாந்து சென்று முஸ்லிம்களுக்கெதிராக வாதிட்டு முஸ்லிம்களின் இனத்துவ அடையாளத்தை தூசித்து சிங்களக் காடையர்களை விடுதலை செய்தார். இவரே தமிழ் மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் மீது மேலும் துவேசம் வளரக் காரணமாயிருந்தார். இதனால் 1918.11.10ல் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையின் போது முஸ்லிம்கள் தாக்கப்பட்டதுடன் பருத்தித்துறை, சுன்னாகம் போன்ற இடங்களில் முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டுப் பின் எரியூட்டப்பட்டன. மேலும் 1977ல் தேர்தல் காலத்தில் கட்சிகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை சாட்டாக வைத்து ஏழை முஸ்லிம்கள் அதிகம் வாழ்ந்த பொம்மை வெளிப் பிரதேச முஸ்லிம் குடிசைகள் எரிக்கப்பட்டன.

(ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் - புஸ்பராசா)

**கட்டம் - V**

1990 ஒக்டோபரில் சகல சொத்துக்களும் பறித்தெடுக்கப்பட்டு, பூர்வீகப் பூமியும் மறுக்கப்பட்டு உடுத்த உடையுடன் ஒரு லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் (முஸ்லிம் என்பதால்) தமிழீழ விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். கடந்த 20 வருடப் போர்ச்சூழலில் தமிழ் மக்கள்கூட இவ்வாறு பூண்டோடு வெளியேற்றப்பட்டதில்லை. இது வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் முஸ்லிம்களுக்கெதிராகப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சகோதர இனச்சுத்திகரிப்பாகும்.

**கட்டம் - VI**

இனச்சுத்திகரிப்பு என்பது மக்களை பலாத்காரமாக வெளியேற்றுவதுடன் நின்றுவிடுவதில்லை. வெளியேற்றப்பட்டவர்களை மீள் குடியேறவிடாமல் தடுத்துப் பிடிப்பதும் இனச்சுத்திகரிப்புத்தான். புலிகளால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட யாழ் முஸ்லிம்கள் கடந்த 15 வருடங்களாக அகதி முகாமில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

> **இன்னும் பத்துவருடங்களில் அதற்கடுத்த சந்ததி வடக்கு தாயகத்தை முற்றாகவே மறந்து அதுபற்றிய பிரஞ்ஞையே இல்லாது போய்விடக்கூடிய மாபெரும் ஆபத்துக் காத்திருக்கிறது. இதைத்தான் அவர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்**

2002.02.22ல் அமுலுக்கு வந்த மோதல் தவிர்ப்பையடுத்து கணிசமான தமிழ் மக்கள் வடக்கில் குடியேறியுள்ளனர். ஆனால் முஸ்லிம்கள் என்பதால் எமது மக்கள் மீள்குடியேறுவது தடைசெய்யப்பட்டு வருகிறது. ஊடகங்களின் முன்பு முஸ்லிம்கள் தமிழ் பேசும் மக்களல்லவா அவர்கள் வந்து குடியேறலாம் எனக்கூறும் புலிகள் குடியேறவரும் முஸ்லிம்களை விரட்டுகின்றனர். வெளியுலகுக்குக் காட்டுவதற்காக ஒன்றிரண்டு முஸ்லிம் குடும்பங்களைக் குடியேறவிட்டுவிட்டு மிகக்கொடூரமான நிபந்தனைகளையும், ஒடுக்குமுறைகளையும் பிரயோகிக்கின்றனர். இவ்வாறு மீள் குடியேற்றத்தைத் தடுத்துப் பிடிப்பதுவும் மறைமுக வெளியேற்ற உத்தியே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**கட்டம் - VII**

பலஸ்தீன அகதிமுகாம்கள்போல வடக்கு முஸ்லிம்களை நீண்டகாலம் அகதிமுகாமில் வைத்திருப்பதன் மூலம் அடுத்தடுத்த சந்ததி யாழ் தாயகத்தை மறந்துவிடச் செய்வதே புலிகளின் நீண்ட கால லட்சியமாகும். இந்த இலக்கின் 50 சதவீத வெற்றியை எட்டிவிட்டார்கள். தற்போதைக்கு 15 வருடகாலம் கடந்தாயிற்று 1990.10.31ல் பிறந்த ஒரு முஸ்லிம் வடக்கு தாயகம் பற்றி தன் தாய் தந்தை மூலம் செய்திகளாகவே கேட்டுத்தெரிந்திருப்பான். இன்னும் பத்துவருடங்களில் அதற்கடுத்த சந்ததி வடக்கு தாயகத்தை முற்றாகவே மறந்து அதுபற்றிய பிரஞ்ஞையே இல்லாது போய்விடக்கூடிய மாபெரும் ஆபத்துக் காத்திருக்கிறது. இதைத்தான் அவர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். எமது மீள் குடியேற்ற முயற்சிகளில் அரசியல்வாதிகளை நம்பி கடந்த 15 வருடங்களை வீணடித்துவிட்ட நாம் இன்னும் அப்படியேதான் இருந்துவிடுவோமோ என்ற அச்சம் எல்லோரையும் தொற்றிக்கொண்டு விட்டது. ஏனெனில் வடக்கில் உள்ள பள்ளிவாசல்கள் உடைக்கப்படுகின்றன. இஸ்லாமிய கலாசார சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. நாம் வியர்வை சிந்தி உழைத்து உண்டாக்கிய வீடுகளும் கடைகளும் புலிகளின் மாவீரர் குடும்பங்களுக்குப் பரிசளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு அவர்கள் மூலம் முஸ்லிம்களின் சொத்துக்கள் விலைக்கு வாங்கப்படுகின்றன.

இவ்வாறு நாளுக்கு நாள் எம்மை இத்தகைய ஆக்கிரமிப்பு சூழ்ந்துகொள்ளக் காரணம் எமது மக்கள் தான் என்றே கூறவேண்டும். ஏனெனில் ஒரு புறம் தேர்தல் பிரசாரத்தின்போது மீள் குடியேற்றுவோம் என அரசியல்வாதிகள் பொய் சொன்னதை நம்பி வாளாவிருந்தோம். மறுபுறம் ஆண்டு நிறைவின் போதுமட்டும் ஹர்தால், ஆர்ப்பாட்டம், கட்டுரை. கவிதை, துஆ எனச் செய்துவிட்டு வேறுவேலை பார்த்தோம். எனவே இலங்கைச் சமுதாயத்தையும் சர்வதேச சமுதாயத்தையும் நெருக்கும் வண்ணம் செயல்திறன்மிக்கதாகவும் தொடர்ச்சியானதாகவும் பல வெகுஜனப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை இன்னும் எம் முன்னே வெற்றிடமாகவே உள்ளது.

## நான் பிரகடனம் செய்கிறேன்

மஹ்மூட் தர்வீஷ்



*எனது நாட்டில் ஒரு சாண் நிலம்*
*எஞ்சி இருக்கும் வரை*
*என்னிடம் ஒரு ஒலிவமரம்*
*எஞ்சி இருக்கும் வரை*
*ஒரு எலுமிச்சை மரம்*
*ஒரு கிணறு*
*ஒரு சப்பாத்திக் கள்ளி*
*எஞ்சி இருக்கும் வரை*
*ஒரு சிறு நினைவு*
*ஒரு சிறு நூலகம்*
*ஒரு பாட்டனின் புகைப்படம்*
*ஒரு சுவர்*
*எஞ்சி இருக்கும் வரை*

*அரபுச் சொற்கள் உச்சரிக்கப்படும்*
*வரை*
*நாட்டுப் பாடல்கள் பாடப்படும்*
*வரை*
*கவிஞர்கள்*
*அந்தர் அல்-அப்ஸ் கதைகள்*
*பாரசீகத்துக்கும் ரோமுக்கும்*
*எதிரான*
*யுத்த காவியங்கள்*
*எனது நாட்டில் இருக்கும் வரை*

*எனது கண்கள் இருக்கும் வரை*
*எனது உதடுகள் எனது கைகள்*
*எனது தன்னுணர்வு இருக்கும்*
*வரை*
*விடுதலைக்கான பயங்கரப் போரை*
*எதிரியின் எதிரில் நான் பிரகடனம்*
*செய்வேன்.*

*சுதந்திரமான மனிதர்கள்*
*பெயரால்*
*தொழிலாளர்கள் மாணவர்கள்*
*கவிஞர்கள் பெயரால்*
*நான் பிரகடனம் செய்வேன்*

*கோழைகள் சூரியனின் எதிரிகள்*
*அவமான ரொட்டியினால் ஊதிப்*
*புடைக்கட்டும்*
*நான் வாழும் வரை எனது*
*சொற்களும் வாழும்*
*சுதந்திரப் போராளிகளின்*
*கைகளில்*
*ரொட்டியாயும் ஆயுதமாயும்*
*என்றும் இருக்கும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநிலைப் பயிற்சி



**வாழ்க்கையில்** வெற்றியடைவதற்கு மனநிலையினை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியமானதொன்றாகும். அனைத்துப் படைப்புக்களிலும் இரண்டு படைப்புக்கள் உள்ளடங்குகின்றன. பௌதீகப் படைப்பு, மனநிலைப்படைப்பு என்பனவே அவையாகும். பௌதீக படைப்புக்கு ஆதரவு வழங்குவதே மனநிலைப் படைப்பின் தன்மையாகும். மனநிலைப் படைப்பே முதலில் உருவாகிறது. இது மனதினால் திட்டமிடப்பட்ட படைப்பாகும். இரண்டாவதாக, பௌதீகப் படைப்பின் தன்மையினைக் காட்டும்.

உலகில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து விதமான புதிய கண்டுபிடிப்புக்களும் முதலில் அந்த அந்த விஞ்ஞானிகளினது மனதில் எழுந்த எண்ணங்களின் பெறுபேறாகும். எம்மாலும் இந்த முன்னுதாரணத்தினை எமது வாழ்க்கையின் வெற்றிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

உள்மனதுடன் விவாதிக்க வேண்டும். மனதினைக் கண்காணிக்க வேண்டும். நிலையான காரணிகளைப் பிரகடனப்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது:

01. நான் என்னாலும், எந்த நிலையிலும் சிறந்தவனாக மாறுவேன்.
02. எனக்கு அனைவரினதும் அன்பும் பரிவும் கிடைக்கும்.
03. நான் மிகவும் திருப்தியுடன் எனது கடமையினை நிறைவேற்றுவேன்.
04. எனது திறமை, ஆரோக்கியம், மகிழ்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றுக்கு உறுதுணை புரிந்த இறைவனுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
05. நான் எனது நண்பர்களுடன் மகிழ்ச்சியுடன் காலங்கடத்துகிறேன்.

எனப்னவே நிலையான காரணிகளாகும். அடிக்கடி நேர்மறையான வாக்கியங்களினை எழுதிப்பார்க்க வேண்டும். அதாவது:

01. நான் ஓர் ஆரோக்கியமானவனாவேன்.
02. நான் மிகவும் மகிழ்ச்சியுடன் எனது கடமைகளில் ஈடுபடுகிறேன்.
03. நான் மிகவும் மகிழ்ச்சியுடன் எனது நேர காலத்தினைக் கடத்துகிறேன்.
04. நான் உடலாலும் உள்ளத்தாலும் பலவானாக இருக்கிறேன்.

புதிது புதிதாக எழுதி ஓர் விஷேடத் தன்மையினை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். எழுதியவற்றினை பலமுறை வாசிக்க வேண்டும். ஒருபோதும் மற்றவரை சபிக்க வேண்டாம். முன்னேற்றத்தின் பொற்கதவினைத் தட்ட வேண்டுமானால் சுபீட்சத்தின் பக்கமாக உங்களது உள்ளத்தினைத் திருப்பிக்கொள்ளுங்கள். நிச்சயம் வெற்றி கிட்டும்.




# எரிவாயு சக்தியினால் ஓடும் கார்



**எரிபொருள்** பிரச்சினையானது நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதுடன் மூன்றாம் உலக நாடுகளுக்கு அது மரணப் பொறியாக மாறிவருகிறது. இந்நிலையினை வெற்றிகொள்ள வேண்டுமானால் மாற்று எரிபொருளினையிட்டு எம் கவனம் திரும்ப வேண்டியுள்ளது.

வாயுநிரப்பியொன்றின் மூலம் ஓடக்கூடிய வாகனமொன்றினைத் தயாரிப்பதற்கு அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர் ஒருவர் திறமை பெற்றுள்ளார். இந்த வாகனத்தின் வெள்ளோட்டமானது அண்மையில் மெல்போர்ன் நகரத்தில் இடம்பெற்றது. இந்த எரிவாயுச் சக்தியினால் இயங்கும் இயந்திரத்தினை இன்னும் ஒரு வருடத்தில் டீசல் மற்றும் பெட்ரோலினால் இயங்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக பயன்படுத்தலாம்.

வர்த்தக அளவில் இதன் பாவனை அதிகரிக்கும்போது இந்த வாகனத்தின் வேகத்தினையும் அதிகரிக்கக்கூடிய பின்னணியினையும் உருவாக்கிக் கொள்ளலாமென அங்லோ பிரான்ஸின் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். ஏற்கனவே பிரிட்டன் உட்பட பல நாடுகள் இந்த மாதிரி வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ளது.


# அமரத்துவமிக்க காதல் சின்னத்திற்கு

## 350 வருடங்கள் பூர்த்தி

**மனிதக்** கரங்களினால் நிர்மாணிக்கப்பட்ட தாஜ்மஹாலானது உலக மாந்தரினுடைய வியப்புக்குரிய, சிறப்பிடத்தினை வகிக்கிறது. 'தாஜ்' என்பதன் பொருள் கிரீடம் அல்லது முடி என்பதாகும். ஆகவே இதன் பூரணமான பொருள் "கிரீட மாளிகை" என்பதாகும்.

தற்போது இந்த மாளிகையானது கட்டப்பட்டு 350 வருடங்கள் கடந்துள்ளன. இந்த மாளிகையினை கட்டி முடிப்பதற்கு அக்காலத்தில் 30 கோடி இந்திய ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுள்ளதாகவும், பல்வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்கள் உட்பட 20,000 தொழிலாளர்கள் கட்டிடப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் வரலாறு சாட்சி பகர்கின்றது. இவர்களினால் இரவு பகல் பாராமல் 24 மணி நேரமும் கட்டிடப்பணியில் ஈடுபட்டு 22 வருடங்களில் இந்த கட்டிடப்பணிகள் நிறைவுற்றுள்ளது. இதுபோன்றதோர் கட்டிடம் இனிமேல் நிர்மாணிக்கப்படக் கூடாது எனும் நோக்கில் இந்த கட்டிடப்பணியில் ஈடுபட்ட முக்கிய பிரதானமான கலைஞரினது கரங்கள் துண்டிக்கப்பட்டன. இத்தகைய சோக சம்பவமும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

உலகில் மிக அழகான மாளிகை என கருதப்படும் இதில் 05 பிரிவுகள் உள்ளன. அதாவது.



பிரதானமான தாஜ் மண்டபம் அல்லது ரோஸா எனும் மொஸோலியம், தக்வாஸா, அல்லது பிரதான தலைவாசல், பஸீவா அல்லது பூந்தோட்டம், மஸ்ஜித் அல்லது மசூதி, தக்பர் கானா அல்லது தங்குமறை என்பவையாகும். தாஜ்மஹாலின் தரை பளிங்குக் கற்களினால் பதிக்கப்பட்டுள்ளது. அது செஸ் அட்டையின் வடிவத்திலானது. மிகவும் பெறுமதிமிக்க மாணிக்கக் கற்களினால் சுவர்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தின் உள்ளே உள்ள தூண்களில் அல்குர்ஆன் வசனங்களும், பாரசீக, உர்து கவிதைகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

# மூல நோய்




**இது** தற்கால சமுகத்தில் அதிகளவில் காணக் கூடிய நோயாகும். குதத்தில் சதை போன்று தள்ளி நிற்பதே இதன் சுபாவமாகும். இந்தச் சதை குத மார்க்கத்தை தடை செய்வதால் பல உபாதைகள் ஏற்படுகின்றன. சிலநேரம் இரத்தப்போக்கும் ஏற்படும்.

இந்த நோய் ஏற்படுவதற்கு எமது பிழையான உணவு முறையே முக்கிய காரணமாகும். அதி கூடிய வெப்பமுடைய மற்றும் அதிக குளிரான உணவு வகைகளை உண்பது இரண்டாவது காரணமாகும்.

எந்த நேரமும் முழங்காலை மடித்து வைத்துக் கொண்டிருப்பதாலும் இந்த நோய் ஏற்படலாம். அதே போல், முழு நாளும் நாற்காலிகளில் அமர்ந்திருப்போருக்கும் இந்த நோய் ஏற்படலாம்.

மல, சலம் ஆகியவற்றை முறைப்படி வெளியேற்றாமல் அடைத்து வைப்பதாலும் இந்நோய் ஏற்படும்.

அதே போல் பலவிதமான உளப்பிரச்சினைகளாலும் இந்த நோய் ஏற்படலாம்.

உணவில் நாட்டமின்மை, கஷ்டமான உணவுச் சமிபாடு, புளி ஏப்பம் ஆகியன ஆரம்ப நோய் அறிகுறியாகும்.

மூல நோய் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டுமாயின் அன்றாட உணவில் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கொகிலக் கிழங்கு போன்ற நார்த்தன்மையுள்ள உணவுப் பதார்த்தங்களை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நன்கு தண்ணீர் அருந்த வேண்டும். சரியான உணவை சரியான நேரத்திற்கு உண்ணப் பழகினால் மூல நோய் ஏற்படாமல் எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# கொட்டைகள், விதைகளை உணவுடன் சேர்த்துக் கொள்ளப் பயப்பட வேண்டாம்!

**கடலை**, பயறு, முந்திரிகை, நிலக்கடலை வகைகளில் கொழுப்பும், உப்புக்களும், கலோரிகளும் அதிகமிருப்பதாக கேள்விப்பட்டதன் காரணமாக, அவற்றினை உணவாகக் கொள்ளாமல் தவிர்ந்துள்ளீர்களா? கலிபோனியா பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவிற்கமைய, நீங்கள் அவ்வாறு பயப்படவேண்டிய அவசியமே இல்லை. அவ்வாறான கொட்டைகளும், விதைகளும் நோய்த் தடுப்புக்கு உறுதுணையாகின்றன. உடலுக்குத் தேவையான கொழுப்பு, உயிர்சத்துக்களான ஈ, பீ நார்ப் பொருள், பொலிக் அமிலம் ஆகியவை இவற்றில் அடங்கியுள்ளன. உப்பு சேர்க்கப்படாத கொட்டைகள், விதைகள் ஆகியவற்றினை அளவோடு உண்பது உடல் நலத்திற்கு நல்லதென்றும் அந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.



# பீனிசம்

**பீனிசம்** ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் 90 சதவீதமானவை ஒவ்வாமை காரணமாகவே ஏற்படுகிறது. பீனிசத்திற்கான காரணிகள் கீழ் வருமாறு:-

தூசு, புகை, காலநிலை மற்றும் பிராணிகளின் முடி, வளியிலுள்ள தீய அணுக்கள், பூவின் மகரந்தம், வெளியில் அதிக ஈரத்தன்மை, செயற்கை பூச்சுக்கள், மனக்குழப்பம்.

பீனிச நோயாளரின் நோய்த் தன்மை:-

1) அடிக்கடி தும்மல் ஏற்படுதல் 2) நீர்போன்ற திரவம் மூக்கால் வடிதல் 3) பிரயாசையுடன் சுவாசித்தல்

# படைப்பாளர் கவனத்திற்கு!

கட்டுரைகள் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும், சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் நாற்பது வரிகள் தொடக்கம் ஐம்பது வரிகளுக்கு மேற்படாமலும் எழுதப்படுவது வரவேற்கத்தக்கது.

விடயத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள்.
அதே நேரம் தாளில் ஒருபக்கமே ஆக்கங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

-பிரதம ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி வெட்டுக்கு அதிகாரிகள் தயாராகின்றனர்

கடந்த அரசாங்கத்தினால் உலக வங்கியினது ஆலோசனைகளின் படி சமுர்த்தி நிவாரணத்தினை வெட்டும் செயற்பாட்டினை இந்த அரசாங்கத்தின் கீழும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒருசில அதிகாரிகள் குழுவினர் தயாராவதாக தகவல்கள் கிடைத்திருப்பதால் அது பற்றி உடனடியாக கவனத்தினைச் செலுத்துமாறு அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவியாளர்களினது சங்கமானது சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்புக்கான அமைச்சரான பவித்ரா வன்னிஆராச்சியிடம் கோரியுள்ளது.

ஐ.தே.க அரசாங்கமானது கடந்த 02 வருட காலமாக உலக வங்கியினது ஆலோசனை என்று கூறியவாறு சமுர்த்தி நிவாரணத்தினை வெட்டியது. உலக வங்கியின் ஆலோசனைப்படி மேலும் 40 சதவீத நிவாரணத்தினை வெட்டுவதற்கும், தற்போது அப்பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளைக் குறைப்பதற்கும் குறித்த அதிகாரிகள் மீண்டும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி நிவாரண வெட்டுக்கு எதிராக கடந்த அரசாங்கத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகவும், புதிய அரசாங்கமும் அது போன்று செயற்பட்டால் மக்களினது எதிர்ப்பினைத் தடுத்துநிறுத்திவிட முடியாமல் போய்விடும் என்றும் அந்தச் சங்கமானது அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

# அமெரிக்காவுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்!

நியுயோர்க்கில் அமைந்திருந்த உலக வர்த்தக மையக் கட்டிடமும், வொஷிங்டனில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகமும் தாக்குதலுக்கு இலக்காகி 03 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள இந்த வேளையிலும் அமெரிக்காவில் பயங்கரவாத அச்சுறுத்தல் நீங்கியபாடில்லை. நாடு முழுவதிலும் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 1 1/2 மாதங்களே உள்ளன. உலக பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடும் நோக்கில் அமெரிக்காவினால் ஈராக்குக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் காரணமாக கொல்லப்பட்ட அமெரிக்க துருப்பினரினது எண்ணிக்கையும் 1000 பேர் வரை உயர்ந்துள்ளது.

உரிய காலத்தில் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவம் தோல்வியினைத் தழுவுமென்று அல்காயிதா போராளிகள் அமைப்பின் தலைவரொருவரான ஐமன் அல் சவாஹிரி கட்டாரிலுள்ள அல்ஜஸீரா தொலைக்காட்சி மூலமாக உலக மக்களுக்கு செய்தி வெளியிட்டுள்ளார்.

# சிறைக் கூடங்களிலுள்ளவர்களுள் பெரும்பாலானோர் தண்டப்பணம் செலுத்த முடியாதவர்களே!

இலங்கையில் தற்போது சிறைகூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23,000 கைதிகளுள் 15,600 பேர்கள் வரையில் தண்டப்பணம் செலுத்த முடியாததன் காரணமாகவே சிறையில் வாடுவதாக சிறைச்சாலை ஆணையாளரான ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். ரூபாய் 500 வேனும் தண்டப்பணமாகச் செலுத்த முடியாமல் 06 மாதங்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்படும் ஒரு நபரை பராமரிப்பதற்கு அரசாங்கத்தினால் 3800 ரூபாய் மாதாந்தம் செலவழிக்கப்படுவதானது பாரியதொரு பிரச்சினையாகுமென ரூமி மர்சூக் தெரிவித்தார்.

சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படுகின்ற இத்தகைய நபர்களை சமூக சேவைகளில் ஈடுபடுத்தி விட்டு, கடுமையான குற்றவாளிகளை மட்டும் சிறையிலிடும் செயற்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதே பொருத்தமானதாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். விடுதலையாகிச் செல்பவர்களுள் 45 சதவீதமானோர் மீண்டும் மீண்டும் சிறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## குறுநாவல்

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

அத்தியாயம் 13

ஜெ.ஏ. கிரன்

39

இரிக்கி. நீ தலயிடாதடா..'

'செரி உடு கதய! தாடி தேடி வாறாரு...'

'தம்பி.. சேமன்... தலைவர்! கோள்.. கோள்..தலைவர்!'

விரைந்து ஓடி ஒலிவாங்கியை எடுத்தான் முத்துமுகம்மது. தலைவரின் ஆணையிடும் கம்பீரக் குரல் கேட்டது.

'தம்பி முத்துமுகம்மத்! வெள்ளிக் கிழம முக்கியமான ஒரு மீட்டிங் இருக்கு. நாளைக்கு புறப்பட்டு வாங்க. நேரில பேசுவம்!'

'செரிசேர்! வாறன்!!'

அவ்வளவுதான். தலைவர் வைத்து விட்டார்.

'என்னடா 'டக்' கெண்டு முடிஞ்சி?'

'வெள்ளிக்கிழம முக்கியமான மீட்டிங் இருக்காம். கொளும்பு வெரட்டாம்'

'அது முக்கியமான உயர்பீடக் கூட்டம். தம்பி சேமன் போகனும். கட்சில ஒரு தானைத் தளபதியால கொஞ்சம் நெருக்கடி....'

'கட்டாயம் போடா முத்துமுகம்மது. என்னவும் முக்கியம் ண்டா 'கோளொண்டு' எடு.. பறந்து வருவன்'

'செரி! மாஸ்டர், வாகனத்துக்கு ரெடி பண்ணுங்க. நெய்னாரு போய் 'சேமன்' எடுப்பன் செரியா...'

'செரிதான்... ஆனா நான் சென்ன வெஷயத்த மறந்துடாதே.. அவிசரப்பட்டு...'

'செரி செரி கத்தாத! நீ போ!'

முத்துமுகம்மது தனது அறைக்குள் வந்தான். சாப்பிடப் பிடிக்கவில்லை. அடுத்தடுத்து அதிர்ச்சியான செய்திகளால் மூளை களைத்து விட்டது. அறையை இருட்டாக்கினான். மின் விசிறியை உச்சத்தில் வைத்தான். ஆடைகளை அவிழ்த்தெறிந்தான்... வெறும் ஜட்டியுடன், குளிரான வெற்றுத் தரையில் விரிந்த கத்தரிக்கோல் வடிவில் மல்லாந்து படுத்தான்.

'....ஒங்கட கையால அவன ஒண்டும் செஞ்சி போட்ராதீங்க மச்சான்.... என்டஅளகு மச்சான்..'

முத்துமுகம்மது அதிர்ச்சியடைந்தான்..

'மெய்யாடா.. நெய்னாரு? எப்படா இது?'

'நேத்து ராவு. நான் கடையில படுத்த. ஒரு மணி மட்டுல கதவத் தட்டின சத்தம். மாமா...மாமா..ண்டு கூப்பிர்ர சத்தம். பழகின கொரல்ல.. ஆரு ண்டு கதவத் தொறந்தன்.. ம்மாடி... தோள்ள பெரிய 'கண்' தொங்குது.. கையில 'கிளிப்'பு. கூட மூணு பொடியனுகள்.. அன்வரு நிக்கான்... எனக்கி பயத்தில மூத்....'

'தேத்தண்ணி இருக்கா மாமா ண்டு கேட்டான் 'வொய்லரு'ல நெருப்பு இல்ல. போட்டுத் தெரயா ம்பி ண்டு கேட்டன் 'அப்பவேணா' ண்டு சொல்லிட்டு 'விசுக்கத்'துப் பக்கட்டும் 'சொக்கிளட்'டும் வாங்கினான்.. 'ந்நரம் எங்க மருமவன் போன? ண்டு கேட்டான்.. அன்பரு சென்னான். 'மாமா... வேள்ள மகன் சப்புச்சுலுத்தான் எங்கும்மாவ கூட்டிப்போய் கொளும்புல வெச்சி கப்பளிச்சிருக்கான்.. ன்னமும் கொள்ளக் கொம்புளயள்ள வாக்கையில வெளாடியிரிக்கான். அவனத் தேடித்தான் ஊட்ட போய் வாறன்.. ஆள் இல்ல.. இரிந்தா இண்டைக்கு 'கஜம்'தான்! ண்டான். வெளங்குதாதடா பேச் சேமா!



'என்னடாது.. அன்பராடா சென்ன?'

அன்பருக்கு கூட நிண்ட ன்னொரு பொடியனையும் ஒனக்குத் தெரியும் லா? சொத்தையில பெரிய வெட்டுக்காயம் காச்சிப் போய் இரிப்பானே.. அவன்!'

'தெரியும்... ஒரிஜினல் புலி அவன்!'

'அதான்! சுலுத்தாண்டா கதைய முடிக்க ஆள்

(இன்னும் வரும்)




முஸ்லிம் குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.



முகம்மது இஸ்மாயில் அபூபக்கர், 172, 4ம் குறுக்குத் தெரு புதிய காத்தான்குடி-03.
பிறந்த திகதி :1957-10-23
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 1995-12-31ல் மட்டக்களப்பு வாவி. காத்தான்குடியில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் அகப்பட்டு மரணமானார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 6393



210

சித்திக்கீன் அப்துல் லத்திப், பூவரசந்தீவு, கிண்ணியா-05.
பிறந்த திகதி : 1955-09-08
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 1988-03-15ல் பூவரசந்தீவு, கல்லரப்புக் கிராமத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 1011



211

மீராலெவ்வை காலிதீன், மையவாடி வீதி, தியாவட்டவான்.
பிறந்த திகதி: 1978-01-14
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்:1997-02-19ல் வாழைச்சேனையில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 4476



212

துவான் தாஸிம் கிச்சில் பாறுக்.சின்னத்தோனா வீதி. காத்தான்குடி-01
பிறந்த திகதி : 1970-09-17
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: மட்டக்களப்பு நொச்சி முனையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கொலைசெய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 858



213

யாஸின் பாவா கச்சி முகம்மது, சரீப் சட்டத்தரணி வீதி, காத்தான்குடி-02
பிறந்த திகதி : 1967-04-15
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1990-07-12ல் குருக்கள் மடம், செட்டிபாளையத்தில் வைத்து தமிழ்ப்பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 658



214

முஹம்மது முகைதீன் முகம்மது முத்து. 4ம் ஒழுங்கை கபுறடி வீதி, காத்தான்குடி-01.
பிறந்த திகதி : 1960-05-27
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1990-09-10ல் கல்லடி மட்டக்களப்பில் வைத்து தமிழ்ப் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 2104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக்கட்சியின் பிடியிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விடுபடுமா?

இ.தொ.கா கட்சியினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசுடன் இணைந்து கொண்டது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தவிர்ந்த தமிழ் கட்சிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமது மக்கள் நலனை நோக்காகக் கொண்ட அரசியல் நகர்வுச்செயற்பாடானது தொழிலாளர் காங்கிரசிற்கு சரியானதாகவே தென்பட்டுள்ளது. இதேவேளையில் இந்த நகர்வினைத் தாம் அவதானமாகவே கவனத்திற் கொள்வதாகவும். எதிர்க்கட்சி அரசியலே மு.கா. கட்சியின் வசந்த காலமென்றும் மு.கா. தலைமையினால் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே. கட்சியினருடன் இணைந்தும். அவர்களினது ஆதரவுகளுடனும் 2004ம் ஆண்டின் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட இரு சிறுபான்மையினத்தவர் கட்சிகளில் இ.தொ.கா மேற்கொண்ட அரசியல் நகர்வு முன்னெடுப்பினை மு.கா மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமா என்பதை அவதானிப்பதற்கு முன்னதாக மு.காவின் நிகழ்கால அரசியல் நகர்வுகள் தனித்துவத் தன்மையை வலியுறுத்துவதாக உள்ளதா என்பதில் தெளிவுகாணப்பட வேண்டியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட 'வரிமன்னிப்பு' திருத்தச் சட்டமூலமானது 50 மேலதிக வாக்குகளினால் வெற்றிபெற்றுள்ளது. இவ்வாக்களிப்பில் இ.தொ.கா மற்றும் சிஹல உறுமயக் கட்சிகள் ஆதரவாக செயற்பட்டிருக்க எதிர்த்தரப்பில் சிறுபான்மையினத்தவர்களின் கட்சிகளில் ஆக மு.கா மாத்திரம் எதிர்த்து வாக்களித்துள்ளது ஆச்சரியத்தைத் தருகிறது. மலையக மக்கள் முன்னணி மற்றும் தமிழரசுக் கட்சியினர்

மு.காவும் செயற்பட்டிருக்கலாம். எதிர்க்கட்சி அரசியல் செயற்பாட்டிற்கும்



எதிர்க்கட்சியென்ற அரசியல் செயற்பாட்டிற்கும் மிகப்பெரிய வேறுபாடுகள் உண்டு. மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள் 1989ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டுகள் வரைக்குமான காலத்தில் மேற்கொண்ட எதிர்க்கட்சி அரசியல் முன்னெடுப்பானது மிகவும் நிதானமான போக்குகளைக் கொண்டதாகவே காணப்பட்டது. அன்று ஆளும் தரப்பில் ஐ.தே.க இருந்தும் அவர்களினது பல செயற்பாடுகளுக்கு ஆதரவாகவே மு.கா நகர்வுகள் வழிநடாத்தப்பட்டிருந்தது. இதனூடாக எதிர்க்கட்சி நிலை தவிர்ந்த யதார்த்த நிலை முற்றும் முழுதாக பின்பற்றப்பட்டது. இதன் உயர்வெளிப்பாடானது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பாகப் போட்டியிட்ட மறைந்த ஆர். பிரேமதாஸா அவர்களுக்கு வழங்கிய ஆதரவாகும்.

2004ம் ஆண்டின் தேர்தலில் இ.தொ.கா மற்றும் மு.கா என்பவைகள் ஐ.தே.கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டே களமிறங்கியிருந்தன. ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்களுடன் இ.தொ.கா இடமாறி செயற்பட்டிருப்பினும் எதிராக உரிய நடவடிக்கைகளை ஐ.தே.க மேற்கொள்ள முடியாதிருக்கும் நிலையானது அவர்களுக்கிடையிலான வலுவான ஒப்பந்தத்தையே உறுதிப்படுத்துகிறது. மு.கா.வை பொறுத்தவரையில் பின்னர்

வாக்களிப்பிலிருந்து நழுவியிருப்பதைப் போன்று

நியமனம் பெற்றுக்கொண்ட இரு தேசியப்பட்டியல் நியமனங்களும் ஐ.தே.கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையும். ஏற்கனவே வழங்கப்பட்ட தேசியப்பட்டியல் நியமனத்தில் ஒன்று இடம்மாறியதுடன் மு.கா வினால் உரியவகையிலான சட்ட நடைமுறைகளை மேற்கொள்ள முடியாதிருக்கும் நிலையும் சற்று ஆழமாகவே சிந்திக்கத் தூண்டுகின்றது.

சுயமாகச் செயற்பட்டு தெளிவான முடிவுகளுடன் ஆளும் தரப்பினருக்கு முழுமையான ஆதரவுகளை வழங்கிடக்கூடியதான வல்லமை மிகைத்ததாக இன்றைய மு.கா கட்சி நிலைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை கவனத்திலெடுப்பதற்கு முன்னதாக மு.கா வின் சகல பாராளுமன்ற ஆசனங்களும் ஒருமைப்படுத்தப்பட்ட நிலைமையில் தலைமைத்துவ தீர்மானத்திற்கு அமைவாக செயற்படத்தக்கதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவதானிக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே மு.காவின் மரம் சின்னத்தில் வெற்றி பெற்ற ஒருவரும். ஐ.தே.கட்சியின் யான்னை சின்னத்தில் வெற்றிபெற்ற ஒருவரும். ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியலினூடாகத் தெரிவாக்கப்பட்ட ஒருவருமான மூவர் மு.கா.கட்சியில் இருந்து முரண்பட்டுள்ளனர். தவிர மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவரும் அடிக்கடி முரண்பட்டுக்கொள்வதாக ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்துடன் ஐ.தே.கட்சியின் அங்கத்துவம் பெற்றதன் பின்னர் நியமனம் பெற்றுள்ள மு.கா சார்பான இருவரும் ஐ.தே.கட்சியின் சட்டரீதியான அங்கத்தவர்களாகவே கணிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சி 'நிலைப்பாட்டையே மேற்கொள்ளும் ஐ.தே.க. மு.கா வின் தனித்துவமான செயற்பாட்டிற்கு அனுமதிக்குமா' என்பதும் கேள்விக்குறியாகவேயுள்ளது. மு.கா தனித்துவமாகச் செயற்பட இன்றைய நிலையில் அதற்கு பல்வேறு தேவைகள் இருந்தாலும் ஐ.தே.கட்சியின் அழுத்தமான பிடியிலிருந்து நகர்வதென்பது சாத்தியப்படக்கூடியதாகவும் இல்லை போல் தெரிகிறது.

**அ.மு. அனஸ்**




### பாராளுமன்றத்தில் மாட்டிறைச்சியும் பன்றி இறைச்சியும் தடைசெய்யப்படல் வேண்டும்!

பாராளுமன்றச் சாப்பாட்டைப் பற்றி பாராளுமன்றத்திற்கு சாப்பிடப் போனவர்கள் புகழ்ந்ததைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்! ஆனால் பன்றியிறைச்சியும் உள்ளது பற்றி இவர்களுக்குத் தெரிந்ததோ என்னவோ தெரியாது!

இப்போது பாராளுமன்ற உணவுச் சாலையில் பன்றியிறைச்சிக்கும் மாட்டிறைச்சிக்கும் தடைவரப்போகிறதாம். ஜாதிக ஹெல உறுமயினர் இப்படியொரு கோரிக்கையை கொண்டு வந்துள்ளனராம். முதலில் பாராளுமன்றத்தில் இந்த நடைமுறையைக் கொண்டுவருவோம்: பின்னர் நாடு முழுவதும் இதனை அமுல்படுத்துவோம் என்கிறார்களாம் ஹெல உறுமயினர். முஸ்லிம் எம்.பிமார் பன்றியிறைச்சி பற்றி ஏன் இதுவரைப் பேசவில்லை?

### புலிகளின் பிரதேசத்திற்கூடாக குண்டு துளைக்காத கார்!

அண்மையில் அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்: அவர் அங்கு விமானத்தில் சென்று இறங்கியதும் அவருக்கு குண்டு துளைக்காத கார் தயாராக இருந்ததாம். அந்தக் கார் புலிகளின் பிரதேசத்தின் ஊடாக ஏ9 நெடுஞ்சாலையூடாகத்தான் கொண்டு செல்லப்பட்டதாம். புலிகள் சொன்னார்களாம்: ஏன் இந்த குண்டு துளைக்காத கார்? இதுவொரு பாதுகாப்போ எனக் கேட்டனராம்.

### பிரதியமைச்சர் வேண்டாம் முழு அமைச்சர் பதவி வேண்டும்!

மு.காவின் அதிருப்திக் குழுவிற்கு பிரதி அமைச்சர் பதவிகள் தருவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தும்: இவர்களில் இருவர் முழு மந்திரிப்பதவி வேண்டும் என்கிறார்களாம்! தங்களுக்கு முழுமந்திரிப் பதவி தர அம்மையார் தயாராக இருந்தும் அரசாங்கத்திலிருக்கும் ஒரு முஸ்லிம் அமைச்சர் அதற்குவிடாது: தனக்கு கீழேயே வைத்திருக்க விரும்புகிறார் என்கிறார்களாம் இவர்கள். எப்படியும் அமைச்சராகி விடுவதுதான் இவர்களது இலக்காம்!

### பிரதமர் மகிந்தரின் விடயம் உள்வீட்டு பிரச்சினைகள் தொடர்கின்றன?

பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவுக்கும். மற்றும். ஏனைய சில நீலக்காரர்களுக்கும் மற்றும். ஜனாதிபதிக்குமிடையிலான முறுகல் நிலையும் பிரச்சினைகளும். இன்னும் விட்டபாடில்லையாம். சந்திரிகா அம்மையார் தனது விஷேட கட்டளைகளையும் கண்டிப்பான சில உத்தரவுகைள பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளாராம். தொடர்ந்தும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ, ஒருவித மனசஞ்சலத்துடன்தான் இருக்கிறாராம். ஆனால். மகிந்தரின் எல்லா ஆதரவு எம்.பிமார்களும் அமைச்சர்களும். மகிந்தர்தான் "ஜனாதிபதி வேட்பாளர்" பதவிக்கு பொருத்தமானவர் என்று உறுதியாக இருக்கிறார்களாம். எந்த சவால்களையும். எதிர்கொண்டு எதிர்நீச்சல் அடிக்க பிரதமர் மகிந்தரும் உஷாராகிவிட்டாராம்... பொறுத்திருந்து பார்ப்போம் யார் கையில் "ஜனாதிபதி வேட்பாளர்" பொறுப்பு. கிடைக்கும் என்று?

### அம்மையாரின் உரை அமெரிக்கத் தரப்புக்கு புடிக்கவில்லையாம்!

சந்திரிகா அம்மையார் அண்மையில் UNO வில் ஆற்றிய உரையை பலர் புகழ்ந்து கொண்டிருக்கும்போது, அமெரிக்கத்தரப்புக்கு அந்த உரை அடியோடு பிடிக்கவில்லையாம். எல்லாம் பக்கத்து நாட்டின் தெம்புடன்தான் அம்மையார் பேசுகிறார் என தென்னாசியா விவகாரத்திற்கு பொறுப்பான அந்த அம்மணி வெளிப்படையாகவே கூறினாராம். இருந்தும் அம்மையார் சரியான தெம்புடன் ஈராக் விவகாரம் தொடர்பாக தெரிவித்த கருத்து பலரையும் ஆச்சரியம் கொள்ள வைத்ததாம்! அம்மையார் சரியான துணிச்சல் பேர்வழிதான் என்கிறார் எனது நண்பரொருவர்.

### நுஆவுடன் இணைவதற்கு மு.காவின் அரசியல் பீடத்தில் தீர்மானம் எடுக்கப்படவில்லையாம்!

மு.கா தலைவர் நுஆவுடன் இணைந்து பணியாற்ற விடுத்த ஊடகச் செய்தி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள வேளையில்: அண்மையில் நடந்த மு.கா உயர்பீடக் கூட்டத்தில் இப்படியொரு முடிவை எடுத்திருக்கிறீர்களா என சட்டத்தரணியொருவர் தலைவரிடம் கேட்டபோது: அப்படித்தான் நான் யோசிக்கிறேன் என தலைவர் பிடி கொடுக்காமல் பதிலளித்தாராம்!





## முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்



முஸ்லிம் அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் வாசித்தறிய வேண்டிய அவசியமான ஆவணம்!

புத்தகம் தேவைப்படுவோர், முஸ்லிம் குரல் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொள்ளலாம்!

விலை 200/=

தபாலில் அனுப்பிவைக்கப்படும்!

-Advt-


இப்பத்திரிகை 119/15. விவியன் குணவர்தன மாவத்த. வெல்லம்பிட்டிய. முஸ்லிம் குரல் பப்ளிகேஷனினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org